உ

ஸ்ரீரஸ்து.

ஜோதிஷத்தில் மிகத்தேர்ந்தவரும்,

திரிகாலஞானியுமாகிய

ஜைமினி மகாரிஷியால்

இயற்றப்பட்ட

ஞானப்ரதீபிகை

என்னும்

ஆரூடசாஸ்திரம்

சம்ஸ்கிருத மூலமும்,

தேவகோட்டையிலிருக்கும்

கு. சொர்னசாஸ்திரியாரவர்களாலும்,

நெடுமரம்

வெ. ர. ஸ்ரீநிவாசாசாரியாரவர்களாலும்

இயற்றப்பட்ட

பாவப்ரகாசிகை என்னும் தமிழ் உரையும்.

இவை

மேற்படி தேவகோட்டையில் வசிக்கும்

விருட்சியூர் ஷட்கர்ம நிரதரான

ப்ரம்மஸ்ரீ. கிருஷ்ணசாஸ்திரியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

மேற்படி

வெ. ர. ஸ்ரீநிவாசாசாரியாரவர்களால்

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

விகாரிஞு புரட்டாசிமீ.

இதன் விலை ரூபா 1—4—0.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இப்புத்தகம் விற்குமிடங்கள்.

தேவகோட்டை வெள்ளையஞ்செட்டி ஊருணிஅக்கிரகாரத்தில்,
குஞ்சங்குளம் கு. சொர்ன சாஸ்திரியாரவர்கள்,

ஷை அக்கிரகாரத்திலும் ஷை அக்கிரகாரத்தின் சமீபத்திலுள்ள
இலட்சுமீபுர அக்கிரகாரத்திலுமுள்ள
நெடுமரம் வெ. ர. ஸ்ரீநிவாசாசாரியாரவர்கள்,

சென்னை முத்தியாலுப்பேட்டைத் தம்புசெட்டி வீதி,
273-வது வீட்டிலுள்ள மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்தின்
தலைவர்
சை. இரத்தினசெட்டியாரவர்கள்.

உ

ஸ்ரீரஸ்து.

முகவுரை.

இந்த ஞானப் பிரதீபிகை யென்னும் பெயர் பெற்ற ஆரூட சாஸ்திர மானது மகா தபோதனரும், திரிகால ஞானியும், நிக்கிரகானுக்கிரக சக்தி யுடன் கூடினவருமான ஜைமினி மகரிஷியால் அருளிச்செய்யப்பட்டது.

ஆரூட மூலமாகத் தங்களுடைய இஷ்டபலன்களைத் தெரிந்துகொள்ள விரும்புவோர்களுக்குப் பலன் சொல்ல இச்சாஸ்திரத்தைத்தவிர வேறு எச் சாஸ்திரமும் இல்லை. இச்சாஸ்திரத்தில் சொல்லிய விஷயங்களை நன்று யறிந்து பலன் சொல்லுவார்களாகில் ஆரூடஞ் சொல்லுகிறவன் தெய்வ உபாஸகனோ, அல்லது யக்ஷிணி உபாஸகனோ வென யாவரும் வியப்புறு வார்கள்!

இச்சாஸ்திரத்தி லடங்கிய காண்டங்கள் 28-னுள் சல்லியகாண்டம் க, கூபகாண்டம் க ஆகக் காண்டங்க ளிரண்டையும் சில சோதிடர்கள் நன் றாய் அப்பியஸித்து, வீடுகளிலுள்ள சல்லியங்களைத் தாங்கள் சமீபத்தி லிரு ந்தே ஆள்களைக் கொண்டு எடுக்கச் செய்கிறார்கள்; கிணறும் வெட்டும்படி செய்து வைக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமாகச் சொல்லுகிறார்களோ, அப்படியே சரியாக விருக்கின்றது.

இச்சாஸ்திர ரீதியாக ஆரூடஞ் சொல்லும் சோதிட வித்வான்களைப் பலமுறை ஆரூடங் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறேன். அவ்வாரூடம் பிர த்தியக்ஷானுபவமாகவும் அவ்வளவும் இச்சாஸ்திரத்திற் கூறும் விஷயங்களு க்கு ஒத்ததாக மிருக்கின்றது.

இச்சாஸ்திரம் நிரம்ப அபூர்வமானதால் இதைப் பல விடங்களில் விசா ரித்துச் சம்பாதித்து அதிலுள்ள பிழைகளை வித்வான்களைக்கொண்டு திருத்து வித்து உரையு மெழுதி அதிலதில் எனது அபிப்பிராயத்துக்கும் மேற்கூறிய வித்வான்களுடைய அபிப்பிராயத்துக்கும் தெரிந்த மட்டிலும் விஷயங்களை யெடுத்து நிரூபித்து மிருக்கிறேன்.

ஏதோ சில விடங்களில் சுலோகார்த்தங்களுக்கு விரோதமாயும், யுக்தி க்கு விரோதமாயு மிருந்தாலும் மேலோர்கள் குற்றத்தைத் தள்ளிக் குணத் தையே கிரகிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இச்சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் ஸம்க்ஞைகளுக்கும், மற்றச் சாஸ் திரங்களிற் சொல்லி யிருக்கும் ஸம்க்ஞைகளுக்கும் ஏகதேசம் ஒற்றுமையும், பெரும்பான்மை விரோதமும் இருக்கும். அச்சாஸ்திரங்களிலேயே இச் சம்க்ஞைகள் காணக்கூடாதனவாகவு மிருக்குமென்பது சித்தம்.

பிரச்நங் கேட்போர்களுக்கு இச்சாஸ்திர ரீதியாய் ஆரூடஞ் சொல்ல எத்தனப்படுபவர்கள் ஆரூட லக்கினம், உதய லக்கினம், சத்திர லக்கினம் அதாவது கவிப்பு இந்த மூன்று லக்கினத்தை நன்றாய் ஈ-௬-தடவை சோத னை பண்ணிக்கொண்டு அதின்மீது பலன்சொல்ல எத்தனப்பட வேண்டி யது.

1. ஆரூடலக்கினம் அறியும் வகை.

அதாவது ஆரூடங் கேட்கவந்தவன் எந்தத் திக்கிலிருக்கின்றானோ அத் திக்குக்கு மேஷாதிராசிகளுக்குள் எந்த ராசி யேற்படுகின்றதோ அந்த ராசியே ஆரூட விராசியாம்.

2. உதயலக்கினம்.

பிரச்நங் கேட்க வரும்போது உதயம் முதல் இத்தனை நாழிகை சென்றதென் றறிந்து, அதற்கு அந்த மாசத்தில் ஆரூடங் கேட்கப்படும் சமயத்தில் எத்தனை தேதியாயிற்றோ, அதற்குள்ள நாழிகையைத் தள்ளி, பாக்கி நாழிகையை வைத்து, அதன்மேல் ராசிமுதல் சென்ற நாழிகைக்கு அளவாக எண்ண எந்தராசி வருமோ, அந்த இராசியே உதயராசியாம்.

3. சத்திரலக்கினம் அல்லது கவிப்பு.

முதலில் சொல்லிய ஆரூடலக்கினத்தில் ஆரூடவிராசி இன்னதென்று நன்றாய் அறிந்து அவ்வாரூட ராசிமுதல் அம்மாசத்துக்குடைய சூரிய வீதி ராசி வரைக்கும் எண்ண, எவ்வளவு என் வருகின்றதோ, அத்தொகைக்கு உதயராசி முதலாக எண்ண வரும் ராசி யெதுவோ அவ்விராசியே ஆரூடத்தைக் கவிக்கு மிராசி யாகையால், அதுவே சத்திரராசியாம், அல்லது கவிப்பு ராசியாம். வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி இந்த நாலு மாதத்துக்கும் மேஷ வீதி, பைங்குனி, சித்திரை, புரட்டாசி, ஐப்பசி இந்த நாலு மாதத்துக்கும் விருஷபவீதி, கார்த்திகை, மார்சழி, தை, மாசி இந்த நாலு மாதத்துக்கும் மிதுனவீதி, இம்மூன்றும் சூரியவீதிகளாம்.

இச்சாஸ்திரத்தில் முக்கியமாக இந்த மூன்று ஸம்க்ஞைகளையும் நன்றாயறிந்து புஸ்தகத்தை உ, ௩ தடவை அவலோகனம் பண்ணினால் சந்தேகம் உண்டாகமாட்டாது.

இப்புஸ்தகத்துக்குக் கிரயம் கொடுத்து வாங்குவோர்கள் திரவியத்தைப் பெரிதாக நினைக்காமல் அவரவர்களும் இனாம்செய்வதாகவே நினைத்து, கிரயத்தைக் கொடுத்துப் புஸ்தகத்தை வாங்கிப் பார்வையிட்டால் அதன்பின்பு இப்புஸ்தகம் அச்சிட்ட எனக்கு என்ன சன்மானம் செய்வார்களோ அறியோம்!

இது சமயத்தில் இப்புஸ்தகத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறுவோர்களுக்கு இனிக் கிடைப்பது எக்காலத்திலேயோ!

ஆகையால் சகலரும் என்னுடைய புஸ்தகத்தை வாங்கி அதிற் சொல்லிய விஷயங்களின்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து ஸம்க்ஞாகாண்டம் ௩ நீங்கலான மற்ற உரு-காண்டங்களிற் சொல்லிய பலாபலன்களைத் தாங்கள் நன்றா யறிந்துகொள்வதோடு இதரர்களுக்கு அபயப் பிரதானமும் செய்வார்களென்பதற்கு யாதொரு தடையுமில்லை.

நே. வே. ர. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
ஜோஸ்யர்,
லக்ஷ்மீபுரம் அக்கிரகாரம்,
தேவகோட்டை.

பிரச்நஞ் சொல்வோர் கேட்போர்களின் நியமங் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அதாவது சோதிடனுடைய லக்ஷணத்தைப் பற்றி நாரத ஸம்ஹிதை முதலிய கிரந்தங்களில் விசேஷித்துச் சொல்லி யிருந்தாலும் இந்த இடத்துக்கு வேண்டியவைகளை மாத்திரம் சுருக்கமா யெழுதுகின்றேன்.

வேதம், சாஸ்திரம் இவை தெரிந்துள்ளவனும், நல்லொழுக்கத்துடன் கூடினவனும், நல்ல குணவானும், திரவியத்தில் அபேக்ஷை யில்லாதவனும், நற்சந்ததியோடு கூடினவனும், நவக்கிரக தேவதாப் பிரார்த்தனையுடன் கூடினவனும், தன் குலாசாரந் தவறாதவனுமான சோதிடன் காலையில் எழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு முகமலர்ச்சியுடன் உட்கார்ந்திருக்கும்போது, பிரச்நங் கேட்கச் செல்லுமவன்: வெற்றிலை, பாக்கு, பழம், புஷ்பம், தக்ஷிணை முதலியவைகளுடன் சென்று சோதிடன்முன் வைத்து, சோதிடனைத் தன் குல தெய்வத்தைப்போல் நினைத்து நமஸ்கரித்து, கையைக் கூப்பிக்கொண்டு பக்தி பூர்வமாக, தான் நினைத்து வந்திருக்கிற காரியங்களைக் குறித்துச் சோதிடனிடத்தில் பிரச்நம் பண்ணக் கடவன்.

இவ்விதம் பக்தியை முன்னிட்டுக்கொண்டு பிரச்நங் கேட்க வருமவருக்குப் பிரச்நத்தின் பலனைச் சொன்னால், அப்படிச் சோதிடனால் சொல்லப்படும் ஆரூடமானது பிசகாகமாட்டாது. தவிரவும் நவக்கிரக தேவதைகளுடைய அனுக்கிரகமானது சோதிடனுக்கும், பிரச்நங் கேட்க வந்தவனுக்கும் உண்டாகிக் குரூர பலனின்றி நற்பலனைப் பெறுவார்கள்.

பிரச்நஞ் சொல்லக்கூடாத கால தேச அதிகாரிகளைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]

சபையாகவிருந்து ஆரூடங் கேட்போர்களுக்கும், கபடமாகவாவது கோணலாகவாவது பிரச்நங் கேட்போர்களுக்கும், சோதிடத்தில் விசுவாசமன்றியில் அசட்டையாகப் பிரச்நங் கேட்போர்களுக்கும், ஸ்நான சந்தியாவந்தனாதி நித்திய கர்மானுஷ்டானங்களை முடிக்குமுன்னதாகவாவது தேகோபாதியுடனிருக்கும்போதாவது பிரச்நம் கேட்போர்களுக்கும், சந்தியா கால மென்கிற காலை, மத்தியானம், மாலை இவைகளிலும் நிசியிலும் பிரச்நங் கேட்போர்களுக்கும் ஆரூடஞ் சொல்லுதல் கூடாது.

நிசியில் ஆரூடங்கூடாதென்று சொல்லியிருப்பதற்குச் சூரியாஸ்தமனத்திற்குப்பிறகு இராத்திரி முழுவதுமே ஆரூடம் பார்க்கக் கூடாதென்று பெரியோர்கள் சொல்வதோடு அப்படியே அனுஷ்டானமாகவும்கொண்டு வருகின்றார்கள்.

நவக்கிரக தேவதாசகாயம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	காண்டம்.	வரி.	பிழை.	திருத்தல்.
உ	உபோத்காண்டம்	ச	க்கும	க்கும்
,,	ஷை	கஉ	ளேயும	ளேயும்
,,	ஷை	கஅ	ஆசுகள்	ஆயுசுகள்
,,	ஷை	உரு	ஆகாய	ஆகாயம்
,,	ஷை	உஎ	சக்கிரவீதி	சக்கிரவிதி
,,	ஷை	,,	ஆரூடசக்கிரவீதி	ஆரூடசக்கிரவிதி
சு	ஸம்க்ஞாகாண்டம்	கஎ	க்களாம	க்களாம்
கூ	ஷை	க	[illegible]	[illegible]
க0	ஷை	உக	[illegible]	[illegible]
கஉ	விசேஷஸம்க்ஞாகாண்டம்	கஉ	அநத	அந்த
கரு	ஷை	உ	[illegible]	[illegible]
உஎ	ஷை	உ	மிதுனம	மிதுனம்
,,	ஷை	ரு	செவவாய்	செவ்வாய்
ஙசு	தாதுகாண்டம்	உஅ	சொலலா	சொல்லா
ச0	மூலகாண்டம்	கஎ	[illegible]	[illegible]
,,	ஷை	உரு	[illegible]	[illegible]
சக	ஷை	ககூ	களில	களில்
எஉ	ரோககாண்டம்	ககூ	வக்ஷவ	வக்ஷ்வ
எகூ	மிருத்யுகாண்டம்	உ0	[illegible]	[illegible]
அக	புக்திகாண்டம்	உகூ	[illegible]	[illegible]
கூகூ	புத்திரோத்பத்தி	உ	இடம	இடம்
,,	ஷை	உகூ	சந்திரனிருதா	சந்திரனிருந்தா
,,	ஷை	,,	எற்ற	ஒற்ற
க0ங	புத்திராரிஷ்டகாண்ட	சு	[illegible]	[illegible]
கக0	க்ஷ-ரிகாகாண்டம்	உஅ	லிருககிற	லிருக்கிற
ககஎ	கூபகாண்டம்	உ0	ளேயும	ளேயும்
,,	ஷை	ஙக	ககிற	க்கிற
ககஅ	ஷை	உரு	த்தாலும	த்தாலும்
கஉ0	ஷை	உக	ண	ண்
கஉசு	ஷை	க0	உத்திரட்	உத்திராட
,,	ஷை	கக	உத்திராட	உத்திரட்
கஙஉ	ஸேனகமகாண்டம்	உ	[illegible]	[illegible]
கஙசு	யாத்திராகாண்டம்	எ	காண்டதை	காண்டத்தை

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 ।
𑌆𑌧𑌾𑌰𑌂𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥
𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌂𑌮𑌾𑌯𑌯𑌾𑌰𑌸𑍍𑌤𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑍇𑌖𑌾𑌵𑌤𑌂𑌸𑌿𑌤𑌂 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇𑌗𑌜𑌾𑌨𑌨𑌂 ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌕𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌨𑌾𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌲𑍋𑌕𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌂 ।
𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌦𑌰𑍍𑌶𑌂𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑌤𑌃 ॥௧॥

𑌗𑌤𑌂𑌭𑌵𑍍𑌯𑌂𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌂 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌪𑌞𑍍𑌚𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌞𑍍𑌚 𑌚𑌤𑍁𑌃𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌬𑌲𑌾𑌬𑌲𑌂 ॥௨॥
𑌆𑌰𑍂𑌢𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌗𑌞𑍍𑌚 𑌉𑌦𑌯𑌾𑌦𑌿𑌬𑌲𑌾𑌬𑌲𑌂 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂𑌨𑌰𑌨𑌾𑌰𑍀𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂𑌵𑌂𑌶𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌕𑌂 ॥௩॥
𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌿𑌨𑌰𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌕𑌿𑌰𑌣𑌾𑌦𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌚 ।
𑌆𑌯𑍁𑌰𑌂𑌶𑌂𑌶𑌾𑌜𑍍𑌞𑌞𑍍𑌚 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌕𑌥𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥௪॥
𑌚𑍋𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑍋𑌗𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑍇𑌶𑍍𑌮𑌾𑌨𑌿𑌚 ।
𑌨𑌿𑌶𑌾𑌦𑌿𑌵𑌸𑌸𑌂𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌕𑌾𑌲𑌮𑍇𑌘𑌸𑌮𑌾𑌵𑌕𑌾𑌨𑍍 ॥௫॥
𑌧𑌾𑌤𑍁𑌮𑍂𑌲𑌞𑍍𑌚𑌜𑍀𑌵𑌞𑍍𑌚 𑌨𑌷𑍍𑌟𑌂𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌞𑍍𑌚𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂 ।
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑌂𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌂 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌂𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌶𑌾𑌕𑍁𑌨𑌂 ॥௬॥
𑌵𑍈𑌵𑌾𑌹𑌿𑌕𑌂𑌕𑌾𑌲𑌹𑍋𑌮𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂𑌤𑌥𑍈𑌵𑌚 ।
𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌯𑌾𑌯𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑌮𑌵𑌂𑌸𑍇𑌨𑌾𑌗𑌮𑌾𑌗𑌮𑌂 ॥௭॥
𑌸𑌰𑌿𑌦𑌾𑌗𑌮𑌨𑌂𑌵𑍃𑌷𑍍𑌟𑌿 𑌵𑍇𑌣𑍁𑌳𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌦𑌿𑌤𑌃 ।
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌕𑍇 ॥௮॥

𑌇𑌤𑌿 𑌜𑍈𑌮𑌿𑌨𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌂.
𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑌕𑌾𑌣𑍍𑌡𑌃.

(என்+ள்.) ஸமஸ்த லோகங்களுக்கும் உபகாரமாயும், பிரமா நங்களுக்குக்கண்ணாடியாயும், ஞானத்திற்குத் தீபம்போன்றிரு க்கும் ஞாநப்பிரதீபிகை என்று பெயர் பெற்ற இச்சாஸ்திரத் தைச் சர்வசாஸ்திரங்களையு மனுசரித்து சொல்லப்போகின்றேன். (அதாவது) பூத பவிஷ்யத் வர்த்தமானங்களென்ற மூன்று காலங் களிலும், மனிதர்களுக்குண்டாகும் நன்மை தீமைகளை மேடாதி இராசிகளைக்கொண்டும், சூரியாதி கிரகங்களைக்கொண்டும் சொல்ல வேண்டியதாகையால் அவற்றிற்கு ஆதாரமான இராசிகளுடைய நட்பு பகைகளையும், கிரகங்களுடைய நட்பு, ஆக்ஷி, உச்சம், பகை, நீசங்களையும்; இராசிகளுக்கும் கிரகங்களுக்கும் (க-ச-எ-கo) என் கிற நாலு கேந்திரங்களிலுள்ள பலாபலங்களையும், உதயாரூடச் சத்திரங்களையும், முற்கூறிய விராசிகளொழிய மற்ற விராசிகளில் கிரகங்களுக்குள்ள பலங்களையும், கிரகங்களுடைய பார்வைகளை யும், இராசிகளுடையதும் கிரகங்களுடையதுமான ஆண், பெண், அலி என்ற பேதங்களையும், அவற்றின் ஒற்றைஇரட்டைகளையும், பிராமணர் முதலிய ஜாதிகள், மனுஷ்ய மிருக பக்ஷிகள் என்கிற பேதங்களையும், காந்திகள், வழியின் தூரங்கள், ஆசுகள், இனிப்பு முதலிய ரஸங்கள், மறு, வடு அவைகளிருக்கும் அங்கங்கள் ஆகிய இவைகளையும், சர, ஸ்திர, உபய ஸ்வபாவங்களையும், வசிக்கும் திக்குக்களையும், இடங்களையும், இராத்திரி, பகல், இருசந்திகள் இவைகளில் பல முள்ளவைகளையும், இராசிகளுடையதும், கிரக ங்களுடையதுமான பிரஷ்டோதய சீர்ஷோதயங்களையும், கிரகங்க ளுடைய கொம்புகள் குறியவை நெடியவைகளையும், நாற்சதுரம் வட்டம் முதலியவைகளையும் உடல், உயிர், ஆகாய, பூமி இவைக ளின் அதிபதிக் கிரகங்களையும், சூரியவீதி, ஆரூடம், உதயம், சத் திரம் இவைகளறியும் வகைகளையும், சக்கிரவீதி, ஆரூடசக்கிரவீதி, சந்திரனுலேற்படும் காலநிர்ணயங்கள் இவை முதலானவைகளை யும், இன்னும் சிலஸம்ஜ்ஞைகளையும் இச்சாஸ்திரத்தின்கண்ணுள்ள ஸம்ஜ்ஞாகாண்டங்களிற் கூறியும் அவைகளின் பிரயோஜனங்களை தாதுகாண்டம்முதலிய மற்றைய(உரு)காண்டங்களிற் கூறியிருக் கின்றமையால் அவைகளைச் சோதிடவித்வான்கள்நன்காராய்ந்தும் இஷ்டதேவதா பிரார்த்தனைகளுடனும் பிரஸ்நகர்களுக்கு ஆரூடஞ் சொல்லக்கடவர்.

இச்சாஸ்திரத்திலடங்கியிருக்குங் காண்டங்களாவன.

1. உபோத்காதகாண்டம்.
2. ஸம்ஜ்ஞாகாண்டம்.
3. ஆரூட ஸம்ஜ்ஞாகாண்டம்.
4. தாதுகாண்டம்.
5. மூலகாண்டம்.
6. ஜீவகாண்டம்.
7. நஷ்டதிரவியகாண்டம்.
8. முஷ்டிதிரவியகாண்டம் (அதாவது) கைக்குள்ளிருக்கும் வஸ்துக்களைச் சொல்வது.
9. சிந்தனகாண்டம்.
10. லாபாலாபகாண்டம்.
11. ரோககாண்டம்.
12. மிருத்யுகாண்டம்.
13. போஜனகாண்டம்.
14. ஸ்வப்பனகாண்டம்.
15. சகுனகாண்டம்.
16. விவாஹகாண்டம்.
17. காமபோககாண்டம்.
18. புத்திரோத்பத்திகாண்டம்.
19. புத்திராரிஷ்டகாண்டம்.
20. ஆயுதகாண்டம்.
21. பூசல்லியகாண்டம்.
22. கூபகாண்டம்.
23. ஸேனகாண்டம்.
24. யாத்திராகாண்டம்.
25. ஸரிதாகமனகாண்டம்.
26. விருஷ்டிகாண்டம்.
27. அர்க்ககாண்டம்.
28. கௌளகாகாண்டம்.

உபோத்காதகாண்டம் முற்றிற்று.

ஶ்ரீ

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

ஸஞ்ஜ்ஞாகாண்ட ப்ராரம்பஃ.

அத க்ரஹாணாம் மித்ரநிர்ணயமாஹ.

ஶ்லோ|| அத வக்ஷ்யே விஶேஷேண க்ரஹாணாம் மித்ரநிர்ணயம் |
பௌமஸ்ய மித்ரே ஶுக்ரஜ்ஞௌ ஸூர்யஸ்யாங்கிரஸம் த்ரிணஃ ||௧||
அங்காரகம் விநா ஸர்வே க்ரஹா மித்ராணி மந்த்ரிணஃ |
ஶுக்ரஸ்ய மாராமித்ரம் ஶநேர்விந்த் ஜ்ஞாஶுக்ரஜீவாஃ ||௨||
பாஸ்கரேண விநா ஸர்வே பாவஸ்யஸாஹ்ருத்ஸ்தயா |
சந்த்ரஸ்ய மித்ரே ஜீவஜ்ஞௌ மித்ரேஹேம உமாஹ்ருதஃ ||௩||

(என் + ள்) சூரியனுக்குக் குருவும், சந்திரனுக்குப் புதன், குரு ஆகிய இவ்விருவர்களும், செவ்வாய்க்குப் புதன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்களும், புதனுக்குச் சூரியன் தவிர மற்ற ஐவர்களும், குருவுக்குச் செவ்வாய் நீங்கலான மற்ற ஐவர்களும், சுக்கிரனுக்குச்சூரியன், சந்திரன் ஆகிய இவர்கள் நீங்கலான மற்ற நால்வர்களும், சனிக்குப் புதன், குரு, சுக்கிரன் ஆகிய இம்மூவர்களும் மித்திரர்களாம்.

அத க்ரஹாணாம் ராஶிமைத்ரமாஹ.

தநுர்மீநௌ ரவேர்மித்ரே கந்யாதநுஷி ஸௌம்யஸ்ய ச |
ரவிமீநௌ ததாஸ்யைவ ஸௌமஸ்ய ததா ஸௌம்யஸ்ய ஶோபிதாம் ||௪||
கோதண்டமீநமீநௌ ச கந்யா சாபம் ஸமீநஸ்ய ச |
பாவஸ்யாபயதக்ஷாபி கந்யாநேஷாந்தவாபதாஃ ||௫||
க்ரியாமீநகோதண்டம் கர்மாஸிம்ஹகார்யாஶ்ரமதஃ |
மேஷாதிகந்யா தம்ஸிம்ஹ மீநாக்ஷஸ்ய மேஷாராஃ ||௬||
ராஶிமைத்ரம் க்ரஹாணாம் மைத்ரமேவ உமாஹ்ருதஃ ||௭||

(என் + ள்) தனுசு, மீனம் ஆகிய இவைகட்குச் சூரியனும்; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய இவை நான்கிற்கும் சந்திரனும்; விருஷபம், மிதுனம், கன்னி, துலாம் ஆகிய இந்நான்கிற்கும் செவ்வாயும்; மேஷம், விருஷபம், கடகம், துலாம், விருச்

சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இவ்வெட்டிற்கும் புதனும்; விருஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் ஆகிய இவ்வாறிற்கும் குருவும்; மேடம், மிதுனம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இவ்வாறிற்கும் சுக்கிரனும்; விருஷபம், மிதுனம், கன்னி, மீனம், தனுசு ஆகிய இவ்வைந்திற்கும் சனியும் மித்திரர்களாம்.

அத க்ரஹாணாம் ஸ்வக்ஷேத்ராஹ.

மேஷவ்ருஶ்சிகயோர்பௌம: ஶுக்ரோ வ்ருஷதுலாதிப: ॥௭॥
கந்யாமிதுநயோஸ்ஸௌம்ய: ஶஶீ கர்கடகஸ்ய ச ।
ஜீவோ மீநதநுஷோஸ்ஸிம்ஹஸ்யாதிபதிர்ரவி: ॥௮॥
கும்பநக்ரயோஸ்ஸௌரிர்நிஶாநாத: க்ஷேத்ராதிபதய: க்ரமாத் ॥௮௨॥

(என் + ள்) சிம்மத்திற்குச் சூரியன், கடகத்திற்குச் சந்திரன், மேஷ விருச்சிகங்கட்குப் பௌமன், மிதுன கன்னிகட்குப் புதன், தனுர்மீனங்கட்குக் குரு, விருஷப துலாங்கட்குச் சுக்கிரன், மகர கும்பங்கட்குச் சனி ஆகிய இவர்கள் ஆக்ஷிகிரகங்களாம்.

அத க்ரஹாணாம் உச்சக்ஷேத்ராஹ.

ஸூர்யேந்த்வோ: பரிவேஷஜீவ தூமஜ்ஞஶநிராஹுணாம் ॥௯॥
ஶக்ரசாபகுஜாநாம் ஶுக்ரஸ்யோச்சா ஸ்வஜாதய: ॥௯௨॥

(என் + ள்) சூரியனுக்கு மேஷம், சந்திரனுக்கு விருஷபம், பரிவேஷத்திற்கு மிதுனம், குருவுக்குக் கடகம், தூமத்திற்குச் சிம்மம், புதனுக்குக் கன்னி, சனிக்குத் துலாம், இராகுவுக்கு விருச்சிகம், இந்திரதனுசிற்குத் தனுசு, செவ்வாய்க்கு மகரம், நுட்பத்திற்குக் கும்பம், சுக்கிரனுக்கு மீனம் ஆகிய இவைகள் உச்சவிராசிகளாம்.

அத க்ரஹாணாம் அத்யுச்சாம்ஶாஹ.

அத்யுச்சம் தஶவஹ்நி ஈந்த்ராஷ்டாவிம்ஶதி யீந்த்ரியை: ॥௰॥
ஸப்தவிம்ஶதிகம் விம்ஶத் பாகா: ஸ்வர்க்ரஹா: க்ரமாத் ॥௰௨॥

(என் + ள்) சூரியனுக்கு மேஷத்தில் (௰) ம் பாகையும், சந்திரனுக்கு விருஷபத்தில் (௩) ம் பாகையும், செவ்வாய்க்கு மகரத்தில் (௨௮) ம் பாகையும், புதனுக்குக் கன்னியில் (௧௫) ம் பாகையும்,

குருவுக்குக் கடகத்தில் (௫)ம் பாகையும், சுக்கிரனுக்கு மீனத்தில் (௨௭)ம் பாகையும், சனிக்குத் துலாத்தில் (௨0)ம் பாகையும் அதியுச்சபாகைகளாம்.

அத² க்³ரஹாணாம் ஶத்ருநிர்ணயமாஹ.

பா⁴நோஸ்ஸர்வே விநா ஜீவம் நக்ஷத்ராதி⁴பதேஸ்ததா² ||௧௧||
ப³ர்ஹஸ்பதிர்விநா ஸர்வே ஶுக்ரஸோமஸுதௌ விநா |
ஸௌம்யஸ்ய ஸர்வே ஸோமஸ்ய விநா ஜீவம் ப⁴வேத³ரய: ||௧௨||
விநா சந்த்³ரஸ்ய ஜ்ஞபா⁴நூ ஸாம்ஸுஜ்ஞபா⁴நுநா |
ஶநைஶ்சரஸ்ய ஸர்வேஷாம் தேஷாம் ஶத்ருக்³ரஹா இமே ||௧௩||

(என் + ள்) சூரியனுக்குக் குரு நீங்கலான மற்ற ஐவர்களும், சந்திரனுக்குப் புதன், குரு ஆகிய இவர்கள் நீங்கலான மற்ற நால்வர்களும், செவ்வாய்க்குப் புதன், சுக்கிரன் ஆகிய இவர்கள் நீங்கலான மற்ற நால்வர்களும், புதனுக்குச் சூரியனும், குருவுக்குச் செவ்வாயும், சுக்கிரனுக்குச் சூரியன், சந்திரன் ஆகிய இவ்விருவர்களும், சனிக்குச் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய இம்மூவர்களும் சத்துருக்களாம். இவர்களுடைய விராசிகளே சத்துரு விராசிகளாம்.

அத² க்³ரஹாணாம் நீசராஶிமாஹ.

ரவேஸ்துலாலிரிந்தோ³: ஸ்யாத் கர்கடோऽங்காரகஸ்ய ச |
ஜ்ஞஸ்ய மீநோ ஜீவஸ்ய மகர: கந்யா ஶுக்ரஸ்ய கீர்த்யதே ||௧௪||
ஸௌராஸ்யாஜஸ்ஸ்யுரேதே தேஷாம் நீசராஶய: ||௧௫||

(என் + ள்) சூரியனுக்குத் துலாம், சந்திரனுக்கு விருச்சிகம், செவ்வாய்க்குக் கடகம், புதனுக்கு மீனம், குருவுக்கு மகரம், சுக்கிரனுக்குக் கன்னி, சனிக்கு மேஷம் ஆகிய இவைகள் முறையே நீசவிராசிகளாம். இவ்விராசிகளில் அதியுச்சத்திற்குச் சொல்லிய பாகைகளே அதி நீச பாகைகளாம்.

அத² ராஹோ: ஶத்ருமித்ரநீசஸ்வக்ஷேத்ராணி
உச்சக்³ரஹாணாம் நீசக்ஷேத்ராணி சாஹ.

ராஹோர்வ்ருஷோச்சம் மித்ரம் ஸ்யாந்நீசோ வ்ருஷ்சிக ஈர்யதே
ஶ்வர: ||௧௬||

பரிவேஷஸ்ய கோதண்ட: கும்போ தூமஸ்ய நீசபா: |
மித்ரம் துலாமகரகந்யா சாபயுக்மஜஷாஹ்வயா: ||௧௬||
கும்பம் ஸ்வக்ஷேத்ர மேஷஸ்து ஶத்ரு ஶேஷ ஸிம்ஹகுளீரகா: ||௧௬||

(என் + ள்) இராகுவுக்கு விருஷபம், இந்திர தனுசுக்கு மிதுனம், நுட்பத்திற்குச் சிம்மம், பரிவேடத்திற்குத் தனுசு, தூமனுக்குக் கும்பம் ஆகிய இவைகள் முறையே நீசவிராசிகளாம். இராகுவுக்குக் கும்பம் ஆட்சி இராசியாம். துலாம், மகரம், கன்னி, தனுசு, மிதுனம், மீனம் ஆகிய இவ்வாறு ராசிகளும் நட்பு இராசிகளாம். சிம்மம், கடகம், மேஷம் ஆகிய இம்மூன்று விராசிகளும் சத்துரு விராசிகளாம்.

அத கேந்த்ரபர்யாயநாமாநி.

உதயாதிசதுஷ்கம் து ஜலகேந்த்ரம் ததாஹ்ருதம் ||௧௭||
தத்ராத்யம் ஜ்ஞாதவ்யம் தஸ்மாத் ப்ரவியதுச்யதே |
தஸ்மாதுதயமேவ ச அஸ்தகேந்த்ரம் ப்ரகீர்த்திதம் ||௧௮||

(என் + ள்) ௧ - ௪ - ௭ - ௰ என்கிற நாலு கேந்திரங்கட்கும் முறையே உதயகேந்திரமென்றும், ஜலகேந்திரமென்றும், அஸ்தமய கேந்திரமென்றும், ஆகாசகேந்திரமென்றும் பெயர்களாம்.

அத கேந்த்ரத்ரிகோணாதிநாமாநி.

கேந்த்ராத் பணபரம் ப்ரோக்தம் ஆபோக்லிமம் அத: பரம் |
பஞ்சமம் நவமம் சைவ த்ரிகோணமிதி கத்யதே ||௧௯||

(என் + ள்) கேந்திரங்கட்கு அடுத்த விராசிகள் பணபரம் எனப்படுவன; அவைகட்கடுத்த விராசிகள் ஆபோக்லிமம் எனப்படுவன; ௧-௫-௯ ஆகிற இராசிகள் திரிகோணங்களாம்.

அத நஷ்டத்ருஷ்டிசிந்தநாமாநி.

சிந்தாயாம் தஶமம் ஹி பந்து ஸ்வப்நசிந்தநம் |
ஸப்தமே த்ருஷ்டநஷ்டம் ஸ்யாத் ஆரூடேநாபி வா ||௨௦||

(என் + ள்) பத்தாமிடத்தாற் சிந்தனையையும், நாலாமிடத்தாற் சொப்பன பலனையும், சத்திரத்தால் மூடின கையிலிருக்கும் வஸ்துக்களையும், ஏழாமிடத்தாலும் ஆரூடத்தாலும் நஷ்டவஸ்துக்களையும் சொல்வதாம்.

அத ராஶீநாம் ஶீர்ஷோதயப்ருஷ்டோதயாதீநாஹ.

மேஷோக்ஷகர்க்கிநக்ரசாபாஶ்சைவ ப்ருஷ்டோதயராஶய: |
மீநஸ்தூபயதோ ஶேஷா ராஶயஶ்ஶீர்ஷகோதயா: ||௧||

(என் + ள்) மேஷம், விருஷபம், கடகம், தனுசு, மகரம் ஆகிய இவ்வைந்தும் கால் முன்னதாகக்கொண்டு உதிப்பவைகள். மீனம் தலையையும் காலையும் பின்வைத்து உடலை முன்னதாகக் கொண்டு உதிப்பது. மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் ஆகிய இவ்வாறும் சிரசை முன்னதாகக்கொண்டு உதிப்பவைகள்.

அத க்ரஹாணாம் ஶீர்ஷோதயப்ருஷ்டோதயாதீநாஹ.

அர்க்காங்காரகமந்தாஸ்து ஸந்தி ப்ருஷ்டோதயக்ரஹா: |
ராஹுஜீவஸிதஜ்ஞாஸ்து க்ரஹாஸ்ஸர்வே ஶீர்ஷகோதயா: ||௨||
உபயோதயதௌ சந்த்ரகேதூ ஸர்வத்ர ப்ரகீர்த்திதௌ ||௨௨||

(என் + ள்) சூரியன், செவ்வாய், சனி ஆகிய இம்மூவர்களும் காலை முன்னதாகக்கொண்டு உதிப்பவர்கள்; இராகு, குரு, சுக்கிரன், புதன் ஆகிய இந்நால்வர்களும் சிரசை முன்னதாகக்கொண்டு உதிப்பவர்கள்; சந்திரன், கேது ஆகிய இவ்விருவர்களும் காலையுந் தலையையும் பின்வைத்து உடலை முன்கொண்டு உதிப்பவர்கள்.

அத க்ரஹாணாம் ராஶீநாஞ்ச ப்ரபலாந்யாஹ,

உதயே பலிநௌ ஜீவபுதௌ மாநுஷராஶயா ||௩||
அஸ்தே சந்த்ரஶுக்ரௌ ஜலராஶயஸ்ததா: |
ஶுக்ரேந்தூ பலிநௌ வாரிஸ்தே கீடாஸ்ஸர்வே ஸவந்தி ஹி ||௪||
சதுர்த்தே ஸூர்யபௌமௌ பலிநௌ ஜலராஶிப்ரதோதநா ||௪௨||

(என் + ள்) குருவும் புதனும் உதயத்திலிருக்கின் விசேஷ பலமுள்ளவர்கள். அவ்வுதயம் மானிடவிராசியாக வரின் அவ்விராசி மிக்க பலமுள்ளது. (ச) மிடத்தில் சுக்கிரன் சந்திரன் ஆகிய இவர்களிருக்கின் மிக்க பலமுள்ளவர்கள். அவ்விராசி ஜலவிராசியாகவரின் இராசி அதிக பலமுடையது. (எ) மிடத்தில் சனி இராகு ஆகிய இவர்களிருக்கின் பலமுள்ளவர்கள். அவ்விராசி கீடராசியாகவரின் இராசி பலமுள்ளது, (௧௦) மிடத்தில் சூரியன் செவ்வாய்

ஆகிய இவர்களிருக்கின் பலவான்கள் அவ்விராசி நாற்காலிராசி யாகவரின் இராசி பலமுடையதாம்.

அத ராஶிஸ்வரூபவர்ணநம்.

யுக்மகந்யாதுலாகும்ப ராஶயோ நரரூபிண: ||௨௫||
தந்வீ வாஜீ நரஸ்த்வாத்ய: பஸ்சாத்ராஶி: ப்ருதக்க்ருத: |
ம்ருகாஸ்யோ க்ராஹகோ மீநா பரேந்யஸ்ஸ்வஸ்வரூபவத: ||௨௬||

(என்+ள்) மிதுனம், கன்னி, துலாம், கும்பம் ஆகிய இந்நான்கும் மனிதரூபமுள்ளவைகள். தனுசு இடுப்பிற்குமேல் மனிதவுருவத்தோடு கையில் விற்கொண்டும் இடுப்பிற்குக்கீழ்க் குதிரை வடிவம் போன்று நாற்காலுள்ளதாயு மிருக்கும். மகரம் முகத்திற்குமேல் மான்போன்றும் அதன்கீழ் முதலைபோன்று மிருக்கும். மீனம் இரண்டுமீன்கள் ஒன்றின்வாலை ஒன்று பார்த்துக்கொண்டிருக்கும். மற்ற விராசிகள் அவைகளின் பெயர்களுக்குத் தக்க உருவத்தோடிருக்கும்; அதாவது, இதிலுருவங் கூறாத மேஷம், விருஷபம், கடகம், சிம்மம், விருச்சிகம் ஆகிய இவ்வைந்து இராசிகளும் அதனதன் உருவமாகிய ஆடு, காளை, நண்டு, சிங்கம், தேள் என்பவைகளாம்.

அத சதுஷ்பாதிராஶீநாஹ.

சதுஷ்பாந்மேஷஸிம்ஹ வ்ருஷசாபா பவந்திஹி |
கர்கிராஶிர்ப்பஹுபதௌ பக்ஷிணௌ ம்ருகமீநகௌ ||௨௭||
த்விபாத: கும்பயுக்மாந துலாகந்யா பவந்திஹி ||௨௭½||

(என்+ள்) மேஷம், விருஷபம், சிம்மம், தனுசு ஆகிய இந்நான்கும் நாற்காலிராசிகள்; கடகம், விருச்சிகம் ஆகிய இவ்வைகளிரண்டும் பலகாலிராசிகள்; மகரம், மீனம் ஆகிய இவ்வைகளிரண்டும் பக்ஷிராசிகள்; மிதுனம், கன்னி, துலாம், கும்பம் ஆகிய இந்நான்கும் மானிடவிராசிகள்.

அத த்விபாதிக்ரஹாநாஹ.

த்விபாஜ்ஜீவவித்ஶுக்ரா: ஸ்ம்ருதா: குளீராஸ்சதுஷ்பாத: ||௨௮||
ஶஶிஸௌம்யௌ பஹுபாதௌ ஸம்ப்ரோக்தௌ பக்ஷிணௌ ஸ்ம்ருத: ||௨௮½||

(என் + ள்) புதன், குரு, சுக்கிரன் ஆகிய இம்மூவர்களும் இருகால் கிரகங்கள்; சூரியன், செவ்வாய், சனி ஆகிய இம்மூவர்களும் நாற்கால் கிரகங்கள்; சந்திரன், இராகு ஆகிய இவ்விருவர் களும் பலகால் கிரகங்கள்.

அத ஸூர்யராஶிஜ்ஞாநார்த்தம் ஸஞ்சாரவீதிமாஹ.

உதீயதே மேஷவீத்யாமர்க்கோ வைஶாகாதிசதுஷ்டயே ||௨௯||
உக்ஷவீத்யாமுதீயதே சித்ராதிஷு சதுஷ்வபி |
யுக்மவீத்யாமுதீயதே கார்த்திகாதிசதுஷ்டயே ||௩௦||

(என் + ள்) வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி ஆகிய இந்நான்கு மாதங்களிலும் சூரியன் மேஷத்தின் வழியாகச் சஞ்சரிப்பதனால் மேஷவீதி யென்றும்; சித்திரை, புரட்டாசி, ஐப்பசி, பங்குனி ஆகிய இந்நான்கு மாதங்களிலும் விருஷபத்தின் வழியாகச் சஞ் சரிப்பதனால் விருஷப வீதியென்றும்; கார்திகை, மார்கழி, தை, மாசி ஆகிய இந்நான்கு மாதங்களிலும் மிதுனத்தின் வழியாகச் சஞ்சரிப்பதனால் மிதுன வீதியென்றும் சொல்வதாம். இவ்வீதி மூன்றையும் முறையே உத்தராயநம், பூர்வாயநம் தக்ஷிணாயந மென்பார்.

அத ராஶிசக்ரலக்ஷணமாஹ.

ராஶிசக்ரம் ஸமாலிக்ய ப்ராகாதி வ்ருஷபாதிகம் |
ப்ரதக்ஷிணக்ரமேணைவ ஆதராத்ராஶிஸஞ்ஜ்ஞகம் ||௩௧||
வ்ருஷஸ்ய வ்ருஶ்சிகஶ்சைவ மிதுநஸ்ய ஶராஸநம் |
கர்க்கடஸ்ய மகரஸ்ஸிம்ஹஸ்ய கும்ப உச்யதே ||௩௨||
மீநஸ்து கந்யகாயாஶ்ச துலாயா மேஷ உச்யதே |
ப்ரதிஸப்தமராஶேஷு பரஸ்பரநிரீக்ஷகா: ||௩௩||

(என் + ள்) இராசி சக்கிரத்தைப்போட்டுக் கிழக்கில் விருஷ பத்தைவைத்துப் பிரதக்ஷிணமா யெண்ணினால் மேஷத்திற்குத் துலாம், விருஷபத்திற்கு விருச்சிகம், மிதுனத்திற்குத் தனுசு, கட கத்திற்கு மகரம், சிம்மத்திற்குக் கும்பம், கன்னிக்கு மீனம் ஆக இப்படி ஒன்றுக்கொன் றெதிராயிருக்கும். (மேற்கூறிய சக்கிரவிதி யானது எல்லோருக்குந் தெரிந்திருப்பினும் முதலில் அப்பிய

ஸிப்போர்களுக்கு மிக வுபயோகமானதனுலும், கிரந்தத்திலுள்ள சுலோகத்திற்கு அர்த்தமெழுதவேண்டியது அவசியமானதனுலும் அர்த்தமெழுதி அதனை விளக்கும்பொருட்டுச் சக்கிரமும் போடப்பட்டிருக்கின்றது.)

மீனம்	மேஷம்	விருஷபம் கிழக்கு	மிதுனம்
கும்பம்	இராசி சக்கிரம்		கடகம்
மகரம்			சிம்மம்
தனுசு	விருச்சிகம்	துலாம்	கன்னி

ககநம் ஸாக்ஷா: ப்ராணஸ்த ஸூர்யே ரஹஸ்ய ஶரீரஸாரோஹ்யத: |
வஸுந்தரா நவஸ்ய ஸூர்ய: ஶஶாங்கம் ப்ராணவாந்புவி: ||௩௪||
ஸமசக்ரே ஹஸூர்ய வஸ்த்ர ஶ்ரீஶாஸ்த்ர ஸம்ஸ்திதிஸூர்ய: ||௩௫||

இதி ஜைமினிவிரசித ஜ்ஞானப்ரதீபிகாயாம்

ஸம்ஜ்ஞாப்ரகரணநாம த்விதீயகாண்ட:.

(என்+ள்) ஆகாயம், புருஷன், பிராணன் ஆகிய இம்மூன்றிற்கும் சூரியனும், பூமி, ஸ்திரீ, சரீரம் ஆகிய இம்மூன்றிற்குஞ் சந்திரனும் காரகர்களாம்.

ஸம்ஜ்ஞாகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞானப்ரதீபிகாயாம்

ச்சத்ரவிஶேஷஸம்ஜ்ஞாகாண்டப்ராரம்ப:

அதச்சத்ரராஶிஜ்ஞானம்.

ப்ருஷ்டாரரூடம் ஜ்ஞாத்வா தத்வீதிவஶோர்கஸ்ய ச ||௧௫||
ச்சத்ராரூடாத்வீதீ யாவத் தத்காலோதயராஶிகா |
தத்ராஶிச்சத்ரமித்யுக்தம் ஶாஸ்த்ரே ஜ்ஞானப்ரதீபகே ||௧௬||

(என் + ள்) பிரச்நங் கேட்கவந்து நின்ற விராசியை ஆரூடமாக வைத்துக்கொண்டு சூரியன் அந்த மாதத்தில் எந்த வீதியிற் சஞ்சரிக்கிறானென்பதைப்பார்த்துக்கொள்ளவும். அப்படி நன்றாய்ப்பார்த்து ஆரூட விராசி முதற்கொண்டு சூரிய வீதியளவாக வெண்ணி, அவ்வெண்ணின் தொகைக்குத் தற்கால உதயராசி முதற்கொண்டெண்ணிவந்த விராசி எதுவோ அந்த விராசி மேற்கூறிய ஆரூட விராசிக்குச் சத்திரமாம். (தற்கால உதயராசியாவது சூரியோதயமுதல் ஆரூடம் கேட்க வந்ததுவரை எவ்வளவு நாழிகை சென்றிருக்கின்றதோ அதற்கு எந்த இராசியோ அதுவென்றறிவது).

அதஸமயவீதிச்சத்ரராஶீநாஹ.

மேஷஸ்ய வ்ருஷபஶ்சத்ரம் மேஷஶ்சத்ரம் வ்ருஷஸ்ய ச |
யுக்மகர்கடஸிம்ஹானாம் மேஷஶ்சத்ரமுதாஹ்ருதம் ||௧௭||
கந்யாயா வ்ருஷபஶ்சத்ரம் துலாயா வ்ருஷபஸ்ததா |
வ்ருஶ்சிகஸ்யாத ஸம்ச்சத்ரம் யதனுஷோரிய மிதுனம் ||௧௮||
நக்ரஸ்யாபி ச ஸம்ச்சத்ரம் யுக்மம் கும்பஸ்ய கீர்திதம் |
மீனஸ்ய வ்ருஷபஶ்சத்ரம் ச்சத்ரமித்யுதாஹ்ருதம் ||௧௯||

(என் + ள்) மேஷத்திற்கு விருஷபமும்; விருஷபத்திற்கு மேஷமும்; மிதுனம், கடகம், சிம்மம் ஆகிய இவைகட்கு மேஷமும்; கன்னி, துலாம் ஆகிய இவைகட்கு விருஷபமும்; விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இவைகட்கு மிதுனமும்; மீனத்திற்கு விருஷபமும் சத்திரவிராசிகளாம். இவைகள் சூரியவீதி

யினால் கவிக்கப்படுகின்றமையால் சூரியவீதிச் சத்திரங்களென்னப் படுவன.

அத க்ரஹாணாம் ஸவலோகநவர்கீகாணமாஹ.

உபயாஸ்த்வத்ரைவம் ஸம்பஸ்யேத் த்ரிகோணகே |
சதுரஸ்ரே த்ரிபாதம் து அர்த்தமேவார்த்தமேவ ச ||௪௦||
தசமாதிஷு த்ரிதயே ச பாதம் ஸம்வீக்ஷணம் ஹ்யேவம் ||௪௦½||

(என் + ள்) எல்லாக் கிரகங்களுக்கும் (எ) மிடம் முழுப்பார்வை, (ச-அ) மிடங்கள் முக்கால்பார்வை, (ரு-கூ) மிடங்கள் அரைப்பார்வை, (க௦) மிடம் கால்பார்வை, (ஈ-கக) மிடங்கள் அரைக்கால் பார்வையாம்.

இச்சாஸ்திரத்தின்படி பார்க்கையில் சூரியன்முதற் கேது வரையிலுள்ள (கூ) கிரகங்களுக்கும் ஈ, ச, ரு, எ, அ, கூ, க௦, கக, மிடங்களென்கிற இவ்வெட்டு இராசிகளிலும் நோக்குண்டாகின்றன. சோதிடர்கள் சாதாரணமாய்ப்பார்த்துவருகிறபடி சூரியன் முதலான கூ-கிரகங்களுக்கும் எ-மிடப்பார்வை யுண்டென்றும், செவ்வாய்க்கு மறுபடியும் (ச-அ) மிடங்களும், குருவுக்கு(ரு-கூ) மிடங்களும், சனிக்கு(ஈ-க௦)மிடங்களும் விசேஷப் பார்வையென்றும், மற்றவர்களுக்கு மேற்கூறிய விசேஷப்பார்வைக ளில்லையென்றும் கூறுகின்றனராகையால், எந்தக்கிரந்தத்தைக்கொண்டு பலஞ் சொல்ல ஆரம்பம் செய்கிறோமோ அந்தக்கிரந்தத்திற் கூறியஸம்ஜ்ஞைகளையும், பார்வை ஆகிய இவைகளையும் நன்றாயாராய்ந்து பலஞ் சொல்லக்கடவர்கள்.

அத ஹோராவலோகநபலமாஹ.

ரவீந்துஸிதஸௌம்யாஸ்து பஸ்யந்தி பூர்ணவீக்ஷணே ||௪௧||
ஜீவோ ஹ்யர்த்ததராவாய த்ரிபாதேவ குஜஸ்ததா |
பாதேக்ஷணே பலீ ஸௌரி ரீக்ஷணாஸ்வவமீரிதம் ||௪௨||

(என் + ள்) சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் ஆகிய இந்நால்வர்களும் முழுப்பார்வையில் பலவான்கள்; குரு அரைப்பார்வையில்பலவான்; செவ்வாய் முக்கால்பார்வையில் பலவான்; சனி கால்பார்வையில் பலவான். மேற்கூறிய பார்வைகளில் ஈ, கக,மிடங்களை அரைக்கால் பார்வையென்று இக்கிரந்தகர்த்தர் கூறி, அப்பார்வைக ளின்னதிருக்கென்று சொல்லாமல் விட்டுவிட்டதனல்

அந்நியசாஸ்திரரீதியாய்ச் சனிக்கு மூன்று மிடத்தைதப்பார்வையாகச்சேர்த்தும், இராகு ௯,௧௧-மிடங்களாகிற அரைக்கால் நோக்கில் வலியவனென்றும் வருவித்துரைத்தாம்.

அத ராஶிவீக்ஷணப்ரகாரமாஹ.

திர்யக்பஶ்யந்தி திர்யஞ்சோ மாநுஷாஸ்ஸமத்ருஷ்டய: |
ஊர்த்வேக்ஷணா: பத்ரயா அதோநேத்ரா: ஸரீஸ்ருபா: ||

(என் + ள்) நாற்காலிராசிகள் பக்கங்களைப்பார்க்கும்; மானிடராசிகள் நேரே பார்க்கும்; பக்ஷி ராசிகள் மேலே நோக்கும்; பலகாலிராசிகள் கீழே நோக்கும்.

அத க்ரஹவீக்ஷணப்ரகாரமாஹ.

ஸமந்த்யாந்த்யாவலோகிநௌ ஜீவசந்த்ராவூர்த்வேக்ஷணோ ரவி: |
பார்ஶ்வத்ருஶ: கடாக்ஷேண பஶ்யேதாம் ய: கவீந்துஜௌ ||௪௪||
ஸக்ருத்த்ருஷ்ட்யாஹிமந்தௌ ச க்ரஹாணாமவலோகநம் ||௪௪உ||

(என் + ள்) சந்திரன், குரு ஆகிய இவ்விருவர்களும் நேரே நோக்குவார்கள். சூரியன் மேலே நோக்குவன். செவ்வாய் கடைக்கண்ணுற் பக்கங்களை நோக்குவர். புதன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்களும் கீழே நோக்குவார்கள். சனி, இராகு ஆகிய இவ்விருவர்களும் ஒருகண்ணால் நோக்குவார்கள்.

அத ராஶீநாம்ஸ்த்ரீபும்பேதமாஹ.

மேஷயுக்மதநு:கும்ப தௌலிஸிம்ஹா: பும்ராஶய: ||௪௫||
ஏதேஷாமந்யராஶீநாம் வநிதாஜாதிகல்ப்யதே ||௪௫அ||

(என் + ள்) மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய இவைகளாறும் புருஷ ராசிகள். மற்றையவாறு ராசிகளும் ஸ்திரீ ராசிகள். அதாவது, ஒற்றைப்பட்ட இராசிகளை புருஷ ராசிகளென்றும், இரட்டைப்பட்ட இராசிகளை ஸ்திரீ ராசிகளென்றுஞ் சொல்வதாம்.

அத ராஶிதிக்ஜ்ஞாநமாஹ.

மேஷ: ப்ராச்யாம் ததாஸிம்ஹோ தநுர்வாக்ஷோத்தக்ஷிணே ||௪௬||
ஸ்ருககர்கவ்ருஶ்சிகா: ஜாத்யாம் ப்ரதீச்யாம் ஶேஷதயா |
வாயவ்யாஹ்வேதராகும்பா வாரீசப்ராங்கதிக்ஸ்த்வதே || [illegible]||

ரம் ஶஹாமேஶாநீ நள வ ஸ்ரோதநஷ்டாதிஸம்பவகா: ||சஎ½||

(என் + ள்) மேடத்திற்குக் கிழக்கு, சிம்ம தனுசுகட்குத் தென்கிழக்கு, விருஷபத்திற்குத் தெற்கு, கன்னி மகரங்கட்குத் தென்மேற்கு, மிதுனத்திற்கு மேற்கு, துலா, கும்பங்கட்கு வடமேற்கு, கடகத்திற்கு வடக்கு, விருச்சிக மீனங்கட்கு வடகிழக்கு, ஆக இவ்விதங்களாக இராசிகளைக்கொண்டு நஷ்ட வஸ்துக்கள் சேருந் திசைகளைச் சொல்வதாம்.

அத க்ரஹதிக்ஜ்ஞாநம்.

ஸூர்யஶ்ஶுக்ர: குஜோ ராஹு: ஶநிஶ்சந்த்ரோ புதோ குரு: ||சஅ||
ப்ராச்யாதீநாம் திஶாமீஶா: ஸ்ரோதநஷ்டாதிஸம்பவகா: ||சஅ½||

(என் + ள்) சூரியனுக்குக் கிழக்கு, சுக்கிரனுக்குத் தென்கிழக்கு, செவ்வாய்க்குத் தெற்கு, இராகுவுக்குத் தென்மேற்கு, சனிக்குமேற்கு, சந்திரனுக்கு வடமேற்கு புதனுக்கு வடக்கு, குருவுக்கு வடகிழக்கு, ஆக இவ்விதங்களாகக் கிரகங்களின் திக்குக்களைக் கொண்டு நஷ்ட வஸ்துக்கள் சேருந் திசைகளைச் சொல்வதாம்.

அத க்ரஹாணாம் புருஷாதிபேதஜ்ஞாநம்.

புருஷா: ஸூர்யபௌமேஜ்யா: ஸ்த்ரியஶ்சந்த்ரஸிதாஹய: ||சக||
புதஶநிகேதவ: க்லீபா: க்ரஹபேதா: ப்ரகீர்திதா: ||சக½||

(என் + ள்) சூரியன், செவ்வாய், குரு ஆகிய இம்மூவர்களும் புருஷகிரகங்கள். சந்திரன், சுக்கிரன், இராகு ஆகிய இம்மூவர்களும் ஸ்திரீ கிரகங்கள். புதன், சனி, கேது இம்மூவர்களும் நபும்ஸக கிரகங்கள்.

அத யுக்மபுருஷாதிராஶிஜ்ஞாநம்.

த்வந்த்வாதியுக்மகோணஸ்தா யுக்மநராஸ்ஸ்ம்ருதா: ||ருo||
ஸமராஶிநரௌ மேஷஸிம்ஹௌ வ்ருஷகர்கடாலிகந்யகா:|
ஸமராஶிநாரீ ஸ்த்ரிய: ப்ரோக்தா ஸ்த்ரியோ யுக்மராஶய: ||ருக||

(என் + ள்) மிதுனம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய இந் நான்குவிராசிகளும் ஆணிரட்டை. மேஷம், சிம்மம் ஆகிய இவை களிரண்டும் ஆண்ஒற்றை. விருஷபம், கடகம், விரு மகரம், கன்னி ம், சுக்கிர

ஆகிய இந்நான்குவிராசிகளும் பெண் ஒற்றை. மகரம், மீனம் ஆகிய இவ்விரண்டுவிராசிகளும் பெண் ணிரட்டை.

௧௰ யுக்மாதிக்ரஹாநாஹ.

ஓஜகாஃ கிரநோகெ-ஹ-ஜா ஸூ-ஜாகஹிம-ணஃ ।
ஸமெதபங்கரஹாஃ தெர்க்காஸ்ரா ஜாதக தீவகெ ॥௫௨॥

(என் + ள்) சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய இம்மூவர்களும் ஒற்றைக் கிரகங்கள். புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு ஆகிய இவ்வைந்துபேர்களும் இரட்டைக்கிரகங்கள். இவ்விடத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒற்றை இரட்டை என்று கூறப்படாது பொதுப்படச் சொல்லப்பட்டிருக்கின்றமையால், சூரியன், செவ்வாய் ஆகிய இவர்கள் ஆண் ஒற்றை; குரு ஆணிரட்டை; சந்திரன் பெண் ஒற்றை; சுக்கிரன், இராகு ஆகிய இவர்கள் பெண் ணிரட்டை; புதன், சனி ஆகிய இவர்கள் அலி இரட்டை என்றிவ்வாறாக ஊகிப்பதாம். ஸ்திரீபுருஷ நபும்ஸக கிரகங்களைப்பற்றி இக்காண்டம், ௪௯, ௫௰ சுலோகங்களிற் பார்க்கவும்.

௧௰ க்ரஹாணாம்ஸாத்விகாதிகுணாநாஹ.

ஸாத்விகாஸ்ஸூர்ய ஜீவாக்ஜா ராஜஸௌ ஸிதஸௌம்யஜௌ ।
தாமஸௌ ஸநிபௌமௌ து கேது ஸ்வர்பாநுதாமஸௌ ॥௫௩॥

(என் + ள்) சூரியன், சந்திரன், குரு ஆகிய இம்மூவர்களும் ஸாத்வீகக் கிரகங்கள்; புதன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்களும் இராஜஸ கிரகங்கள்; செவ்வாய், சனி ஆகிய இவ்விருவர்களும் தாமஸக் கிரகங்கள்; இராகு, கேது ஆகிய இவ்விருவர்களும் மிகுந்த தாமஸக் கிரகங்கள்.

௧௰ ராஸீநாம்வம்ஸஜாநாஹ.

விப்ராஃ கர்க்யலிமீநாஸ்ஸ்யு நருவஸிம்ஹகிந்யாநுவாஃ ।
த்வந்த்வ யுக்மவடாஸ்வைஸ்யா ஸ்ஸூத்ரா நக்ர கந்யகாஃ ॥௫௪॥

(என் + ள்) கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய இவை மூன்றும் பிராமண ஜாதி; மேஷம், சிம்மம், தனுசு ஆகிய இவை மூன்றும் க்ஷத்திரிய ஜாதி; மிதுனம், துலாம், கும்பம் ஆகிய இவை மூன்றும் வைசியஜாதி; விருஷபம், கன்னி, மகரம் ஆகிய இவை மூன்றும் [illegible] கிரஜாதி.

அத க்ரஹாணாம் வம்ஶஜ்ஞாநமாஹ.

ந்ருபௌ ரவிக்ஷ்மாஜௌ விப்ரௌ ப்ருஹஸ்பதிநிஶாகரௌ |
புதோ வைஶ்யோ ப்ருகுஶ் ஶூத்ரோ நீசௌ வாகிஷஜம்மௌ ||

(என்+ள்) சந்திரன், குரு ஆகிய இவ்விருவர்களும் பிராமணர்கள்; சூரியன், செவ்வாய் ஆகிய இவ்விருவர்களும் க்ஷத்திரியர்கள்; புதன் வைசியன்; சுக்கிரன் சூத்திரன்; சனி, இராகு ஆகிய இவ்விருவர்களும் நீசர்கள்.

அத ராஶீநாம் வர்ணஜ்ஞாநமாஹ.

ரக்தா மேஷதநுஸ்ஸிம்ஹாஃ கர்கோக்ஷதுலாஸ்ஸிதாஃ |
கும்பாலிமீநாஶ்யாமாஸ்ஸ்யுஃ க்ருஷ்ணா யுக்மாங்கநாம்ருகாஃ ||௫௬||

(என்+ள்) மேஷம், சிம்மம், தனுசு ஆகிய இம் மூன்று இராசிகளும் சிவப்பு; விருஷபம், கடகம், துலாம் ஆகிய இம் மூன்று இராசிகளும் வெண்மை; விருச்சிகம், கும்பம், மீனம் ஆகிய இம்மூன்று இராசிகளும் பச்சை; மிதுனம், கன்னி, மகரம் ஆகிய இம்மூன்று இராசிகளும் கறுப்பு.

அத க்ரஹவர்ணஜ்ஞாநமாஹ.

ஶுக்ரஶ்வேதஃ க்ஷ்மாஜோ ரக்தஃ பிம்கலாங்கோ ப்ருஹஸ்பதிஃ |
புதஶ்யாமஶ்ஶஶீ ஶ்வேதோ ரக்தஸ்ஸூர்யோ ஸிதஶ்ஶநிஃ ||௫௭||
ராஹுஶ்ச க்ருஷ்ணவர்ணஸ்ஸ்யாத் வர்ணஶ்சேஷாநுஸாரதஃ ||௫௭உ||

(என்+ள்) சூரியன், செவ்வாய் ஆகிய இவர்கள் சிவப்பு; சந்திரன், சுக்கிரன் ஆகிய இவர்கள் வெண்மை; புதன் பச்சை; குரு பொன்னிறம்; சனி, இராகு ஆகிய இவர்கள் கறுப்பு.

அத க்ரஹாணாம் ஸ்வரூபமாஹ.

சதுரஶ்ரோ வ்ருத்தஶ்ச க்ருஶமத்யஸ்த்ரிகோணகம் ||௫௮||
தீர்கவ்ருத்தம் ததாஷ்டாஶ்ரம் சதுரஶ்ராயதம் ததா |
தீர்கஶ்ருதிக்ரமேணைதே ஸூர்யாதீநாம் க்ரமாதிதாஃ ||௫௯||

(என்+ள்) சூரியன் சதுரமாயும், சந்திரன் வட்டமாயும், செவ்வாய்உடுக்கைப்போல் நடுவிற் சிறுத்துஇருபுறமு மகன்றும், புதன் முக்கோணமாயும், குரு நீண்ட வட்டமாயும், சுக்கிரன்

எண்கோணமாயும், சனி நீண்ட சதுரமாயும், இராகு நீளமாயும் உள்ள வடிவுடையவர்களாம்.

அத க்ரஹாணாங்கிரணாநாஹ.

பஞ்சைகவிம்ஶதிரயோ நவாஶாஷோடஶாப்தய: |
ஸூர்யாதிக்ரஹாணாஞ்ச கிரணா: பரிகீர்திதா: ||௨௦||

(என்+ள்) சூரியனுக்குக் கிரணங்கள் (ரு), சந்திரனுக்கு (உக), செவ்வாய்க்கு (எ), புதனுக்கு (கூ), குருவுக்கு (அ), சுக்கிரனுக்கு (கசா), சனிக்கு (ச).

அத ராஶிகிரணாநாஹ.

மேஷகர்கிதுலாகும்பா கிரணாஷ்டஸம்யுதா: |
த்ரயாணாம் வ்ருஷமுக்யாநாம் கிரணாஸ்தத்ஸம்யுதா: ||௨௧||
ஸிம்ஹஸ்ய கிரணா: ஸப்த கந்யாகார்முகயோஸ்ததா |
சதுரோவ்ருஶ்சிகஸ்யாஹு: ஸப்தவிம்ஶாஜ்ஜஷஸ்ய ச ||௨௨||

(என்+ள்) மேஷம், கடகம், துலாம், கும்பம் இந்நான்கிற்கும் தனித்தனியே கிரணங்கள் (அ). விருஷபம், மிதுனம், மகரம் இம்மூன்றிற்கும் தனித்தனியே கிரணங்கள் (கூ). சிம்மம், கன்னி, தனுசு இம்மூன்றிற்கும் தனித்தனியே கிரணங்கள் (எ). விருச்சிகத்திற்கு (ச). மீனத்திற்கு (உஎ).

இக்காண்டம் ௨௦-வது சுலோகத்திற் சொல்லிய கிரகங்களின் கிரணங்களுக்கும், ௨௧, ௨௨-வது சுலோகங்களிற் சொல்லிய இராசிகளுடைய கிரணங்களுக்கும், பிரயோஜனத்தைப் பூசல்லிய காண்டம், கூபகாண்டம் இவைகளிற் காண்க.

மதாந்தரே ராஶிகிரணாநாஹ.

ஸப்தாஷ்டபஞ்சநவஸப்தருத்ரா த்வௌ யுகமாப்தீஷ்டபிஶ: |
ஸப்தாதாராஶ்வஸம்யுக்தா: ஸ்யு: மேஷாதீநாம் ச ரோஜம: ||௨௩||

(என்+ள்) மேஷத்திற்கு (எ). விருஷபத்திற்கு (அ). மிதுனத்திற்கு (ரு). கடகத்திற்கு (கூ). சிம்மத்திற்கு (எ). கன்னிக்கு (கக). துலாத்திற்கு (உ). விருச்சிகத்திற்கு (ச). தனுசிற்கு (கூ). மகரத்திற்கு (அ). கும்பத்திற்கு (அ). மீனத்திற்கு (உஎ). இப்படிக்குப் பக்ஷாந்திரங்களிற் கிரணங்களைக் கூறியிருக்கின்றன.

அத ராசீநாம் யோஜநாந்யாஹ.

வஸுருத்ரநவருத்ரவேதநந்த வஹ்நிவஹ்நிவஸுஸாயகா: |
விஶ்வாஸாஸாவேதாஶ்வியோஜநம் க்ரமேண மேஷாதிகே ||கூச||

(என்+ள்) மேஷத்திற்கு (அ). விருஷபத்திற்கு (கக). மிதுனத்திற்கு (கூ). கடகத்திற்கு (கக). சிம்மத்திற்கு (ச). கன்னிக்கு (கூ). துலாத்திற்கு (ங). விருச்சிகத்திற்கு (ங). தனுசிற்கு (அ). மகரத்திற்கு (ரு). கும்பத்திற்கு (ச). மீனத்திற்கு (உ). இவைகள் மேஷாதி மீன பரியந்தம் இராசிகளின் யோஜனைகளாம்.

யோஜனை யாவது பத்துநாழிகை கொண்டுள்ள வழியின் தூரமாம்.

அத க்ரஹாணாம் யோஜநாந்யாஹ.

ஸூர்யஸ்ய நிஶாகரஸ்ய யோஜநாந்யஷ்டஸம்க்யயா |
சந்த்ரஸ்யைகம் பௌமஸ்ய ஸப்த ஜ்ஞஸ்யாஷ்டயோஜநம் ||கரு||
குருஸ்யாஷ்டவிம்ஶதம் ஶுக்ரஸ்யைகோநவிம்ஶதி யோஜநம் ||கருஉ||

(என்+ள்) சூரியனுக்கு (அ). சந்திரனுக்கு (க). செவ்வாய்க்கு (ஏ). புதனுக்கு (அ). குருவுக்கு (கூ). சுக்கிரனுக்கு (ககூ). சனிக்கு (அ). இவைகள் கிரகங்களின் யோஜனைகளாம்.

அத க்ரஹாணாம் வயோ ஜ்ஞாநமாஹ.

ஹேலிர்ஜஷோடஶவயா ஶஶாங்க: ஸப்ததவயா: ஸ்ம்ருதா |
விம்ஶத்யா ஶஶிஸுதோ குரு: த்ரிம்ஶத்வயா: ஸ்ம்ருதா ।
ஶஸாங்கஸ்ய ஸப்ததிவயா: வக்ராஸஹாஸுதோவிதி: ||கூஎ||
ஶநைஶ்சரஸ்யராஹோ ஶதஸம்வத்ஸரவயோ ஸ்ம்ருத: ||கூஎஉ||

(என்+ள்) சூரியனுக்கு வயது (ருO). சந்திரனுக்கு வயது (எO). செவ்வாய்க்கு வயது (ககூ). புதனுக்கு வயது (உO). குருவுக்கு வயது (ஙO) சுக்கிரனுக்கு வயது (எ). சனி, இராகு இவ்விருவர்களுக்குத் தனித்தனியே வயது (ா). மேற்கூறிய கிரகங்களின் வயதுகளினாற் இளமை முதுமைகளைக் கூறியதாகக் காண்க.

அத ஹஸ்வாதிக்ரஹாநாஹ.

சந்த்ரஜேந்துஸநயோ ஹ்ரஸ்வா தீர்கஜீவபலயோர்மதா: ||கூஅ||
ரவிஶுக்ரௌ ஸமௌ ப்ரோக்தௌ ஶநிஶ்சைஜாநந்தீர்கௌ ||கூஅஉ||

(என் + ள்) சந்திரன், செவ்வாய், சனி இம்மூவர்களும் குட்டை; புதன், குரு, இராகு இம்மூவர்களும் நெட்டை; சூரியன், சுக்கிரன் இவ்விருவர்களும் குட்டையன்றியிலும் நெட்டையன்றியிலும் சம தேகமுள்ளவர்கள்.

அத க்ரஹாணாம் ரஸஸமாஹ.

திக்தம் ஸூர்யஸ்ய ஸோமஸ்ய லவணம் வக்ரஸ்ய து ||௬௯||
க்ஷாரம் ஸௌம்யஸ்ய மதுரம் ஜீவஸ்யாம்லம் ஸிதஸ்ய ச |
கஷாயம் மந்தராஹ்வோஶ்ச வத்ஸராஸ்துர்தஸா ஹி ச ||௭0||

(என் + ள்) சூரியனுக்கு உறைப்பு, சந்திரனுக்கு உவர்ப்பு, அங்காரகனுக்கு உப்பு, புதனுக்குத் துவர்ப்பு, குருவுக்குத் தித்திப்பு, சுக்கிரனுக்குப் புளிப்பு, சனி இராகு இவர்களுக்குக் கசப்பு என்றறிவதாம்.

அத வாமதக்ஷிணதிலகமாஹ.

ஸூர்யாங்காரகஜீவாநாம் தக்ஷிணாங்கம் ஸமாதிஶேத் |
சந்த்ரபார்கவமந்தாநாம் வாமபாகம் ஸமாதிஶேத் ||௭௧||

(என் + ள்) சூரியன், செவ்வாய், புதன், குரு இந்நால்வர்களுக்கும் வலது பக்கத்தில் மறுக்கள். சந்திரன், சுக்கிரன், சனி, இராகு இந்நால்வர்களுக்கும் இடதுபக்கத்தில் மறுக்கள். மேற்கூறிய பக்கங்களிலேயே வடுக்களு மிருப்பனவாம். மறுவாவது பிறப்புமுதல் சரீரத்தோடே கறுப்பாகவும், பச்சைநிறமாகவும், அல்லது நானு வர்ணங்களாகவு மிருப்பனவாம். வடுவாவது சரீரத்திற்கு மேல் கொஞ்சம் தடிப்பாகவும் அல்லது கழலையாகவும் பாலுண்ணி போன்றும் நானுவர்ணங்களாக ஜனனகாலமுதற் கொண்டிருப்பனவாம்.

அத க்ரஹாணாம் ஸ்தாநலக்ஷணமாஹ.

ஶுக்ரஸ்ய வதநே விந்த்யாத் குஜஸ்யாம் ஸோபரி த்ருஹஸ்பதே: |
கக்ஷயோர்புதஸ்ய த்ரு மஸ்ய ச கடிஹாநௌ கடித்வயே ||௭௨||
ஶநேஸ்ச பாதயோர் ராஹோ: ஸ்தாநாநிவதஷிஹி ||௭௨½||

(என் + ள்) சுக்கிரனுக்கு முகத்திலும், செவ்வாய்க்குப் பின்புறத்திலும், குருவுக்குத் தோளிலும், புதனுக்குக் கைக் கீழிலும்; சந்

திரனுக்குத் தலையிலும், சூரியனுக்கு இடுப்பிலும், சனிக்குத் தொடையிலும், இராகுவுக்குக் காலிலும் மறு, அல்லது வடுக்களென்க.

அத² க்³ரஹாணாம் ஶ்ருங்க³ஸம்ஸ்தா²நமாஹ.

பா⁴நுபுத்ரௌ ஹ்ரஸ்வஶ்ருங்கௌ³ சந்த்³ர꞉ ஶ்ருங்க³விவர்ஜித꞉ ॥௭௩॥
ஹ்ரஸ்வஶ்ருங்க³꞉ குஜோ தீ³ர்க⁴ஶ்ருங்கௌ³ ஜீவகவீ ததா² ।
ஶநிராஹூ ச ப⁴க்³நஶ்ருங்கௌ³ ஶ்ருங்க³ஸம்ஸ்தா² உதா³ஹ்ருதா꞉ ॥௭௪॥

(என் + ள்) சூரியன், புதன் இவ்விருவர்களுக்கும் வளைந்த கொம்பு. சந்திரனுக்குக் கொம்பில்லை. செவ்வாய்க்குக் குட்டைக் கொம்பு. குரு, சுக்கிரன் இவ்விருவர்களுக்கும் நெட்டைக்கொம்பு. சனி, இராகு இவ்விருவர்களுக்கும் ஒடிந்த கொம்பு. இப்படிக்குக் கிரகங்களின் கொம்புகள் விதிக்கப்படும்.

அத² ராஶீநாம் சரஸ்தி²ரோப⁴யஸம்ஜ்ஞாமாஹ.

வ்ருஷஸிம்ஹாலிகும்பா⁴ஸ்து ஸ்தி²ரா꞉ ஸ்தி²ரராஶய꞉ ।
கர்கநக்ரதுலாமேஷா꞉ ஶ்ரேஷ்டா²ஶ்சரராஶய꞉ ॥௭௫॥
த⁴நுஷ்கந்யா ச மீநஶ்ச த்³வந்த்³வாஸ்தூப⁴யராஶய꞉ ॥௭௫½॥

(என் + ள்) மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இந்நான்கு ராசிகளும் சரங்களாம். விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய இந்நான்கு ராசிகளும் ஸ்திரங்களாம். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய இந்நான்கு ராசிகளும் உபயங்களாம்.

அத² ராஶீநாம் வஸதிஸ்தா²நாந்யாஹ.

யநாம்ஶூஷாவநே வநேக்ஷேத்ரே கந்யாகாமிது²நே புரே ॥௭௬॥
ஸரிம்ஸீரகர்கடேஸிம்ஹ꞉ ஶைலராஶிர்விஶேஷத꞉ ।
நத்³யாம் துலாமகரமீநா꞉ வ்ருஷ꞉ க்ஷேத்ரே ஜலே வ்ருஷ꞉ ॥௭௭॥
வ்ருஶ்சிக꞉ கூபஸலிலே ராஶீநாம் வஸதிரீரிதா꞉ ॥௭௭½॥

(என் + ள்) மேஷம், தனுசு ஆகிய இவை இரண்டிற்கும் காடு. விருஷபத்திற்கு வயல். மிதுனம், கன்னி ஆகிய இவை இரண்டிற்கும் ஊர். கடகத்திற்கு வாய்க்கால். சிம்மத்திற்கு மலை. துலாம், மகரம், மீனம் ஆகிய இம்மூன்றிற்கும் நதியினுடைய ஜலம். விருச்சிகத்திற்கு கிணற்று ஜலம். கும்பத்திற்கு நிலைபெற்ற நீர். இவ்விதியால் இராசிகள் வசிக்குமிடங்களாகிக.

स्थानविभागश्लोकानाह.

वने केदारकोद्याने कुल्याद्रिवनसंश्रये ॥७८॥
कूपान्तीरं नदीनाञ्च तटाकं सरितस्तथा ।
कूपवापीसमुद्राश्च नष्टद्रव्याश्रयाः स्मृताः ॥७९॥

(என் + ள்) மேஷத்திற்குக் காடு. விருஷபத்திற்குப் பயிருடன் கூடின வயல். மிதுனத்திற்குப் பூந்தோட்டம். கடகத்திற்கு வாய்க்கால். சிம்மத்திற்கு மலை. கன்னிக்கு வனசமீபமாயுள்ள விடம் துலாத்திற்கு நதிக்கரை. விருச்சிகத்திற்கு ஆறு. தனுசிற்கு குளம். மகரத்திற்கு ஆற்றோடை. கும்பத்திற்குக் கிணறு, நடபாவி முதலிய வைகள். மீனத்திற்குச் சமுத்திரம்.

स्थानविभागश्लोकानाह.

वटकन्यायुग्मतुला ग्रामे जालेऽयनं ह्युभौ ।
वनेऽरा: कण्टकोरक्षा नक्री नाजलेषु ताः ॥८०॥

(என் + ள்) மிதுனம், கன்னி, துலாம், கும்பம் ஆகிய இந்நான்கிற்கும் ஊர். மேஷம், சிம்மம், விருச்சிகம், தனுசு ஆகிய இந்நான்கிற்கும் காடு. விருஷபம், கடகம், மகரம், மீனம் ஆகிய இந்நான்கிற்கும் நீர்.

अथ ग्रहाणां श्लोकानाह.

विविनेऽशनिभौमार्का ह्युमावन्द्राजलेषु तौ ।
ग्रामे जीवबुधौ नष्टद्रव्याश्रयकाः ॥८१॥

(என் + ள்) சூரியன், செவ்வாய், சனி ஆகிய இம்மூவர்களுக்கும் வனம். சந்திரன், சுக்கிரன் இவ்விருவர்களுக்கும் நீர். புதன் குரு ஆகிய இவ்விருவர்களுக்கும் ஊர். இவ்விதங்களாக மேற்கூறிய கிரகங்களைக் கொண்டு நஷ்ட வஸ்துக்கள் சேருமிடங்களைச் சொல்வதாம். (இந்தச்சுலோகத்தில் இராகுவுக்குச் சொல்லாததால் சனிக்குக் கூறிய வனத்தையே வருவித்துக்கொள்க.)

स्थानविग्रहश्लोकानाह.

सौरे सौजन्यकाव्यौ शशिनौ बन्धुयोगिनः ।
कण्टके केतौ चैव सारं साक्षात्योगिनः ॥८२॥
उदयस्यबलाधिक्येन बलोत्तरवशात्क्षितिः ॥८३॥

(என் + ள்) சூரியன், குரு ஆகிய இவ்விருவர்கட்கும் மேலிடம். சந்திரன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்கட்கும் ஜலம். செவ்வாய்க்குப் பூமி. புதனுக்குப்பாய். சனிக்கு உயுத்தஞ்செய்யுமிடம். இராகுவுக்கு மரப்பொந்து. இவ்விதிகளாற் கிரகங்கள் வசிக்குமிடங்களைச் சொல்வது. சனிக்கு உயுத்தஞ் செய்யுமிட மென்பதைப் பலர்கள் கூடிச் சிலம்பவரிசை, கத்திவரிசை இவை முதலானவைகள் செய்யுமிடமெனக் காண்க.

கிரஹாணாம் பலானி.

ஸூர்யாரராஹவோ பூமௌ குருசுக்ரௌ ததா திவி ||
ஸோமஸௌம்யௌ ததாகாசே கேசித்ஏவம் வதந்தி ஹி ||

(என் + ள்) சூரியன், செவ்வாய், இராகு ஆகிய இம்மூவர்கட்கும் பூமியிற் பலமென்றும்; குரு, சுக்கிரன் ஆகிய இவ்விருவர்கட்கும் ஆகாசத்திற் பலமென்றும்; சந்திரன், புதன் ஆகிய இவ்விருவர்கட்கும் அந்தரத்திற் பலமென்றும் பக்ஷாந்தரங்களிற் சொல்லப்படுகின்றன.

முன் 81 - வது சுலோகத்தில், சனியைச் சொல்லி இராகுவைச் சொல்லாதது போலவே, இச்சுலோகத்தில் இராகுவைச் சொல்லிச் சனியைச்சொல்லாததால் இராகுவுக்குச்சொன்ன பூமியையே சனிக்கும் வருவித்துக்கொள்க.

இக்கிரந்தத்தினுள் இராகு, சனி ஆகிய இவ்விருவர்களுக்குள் ஒருவருக்கு மாத்திரம் பலஞ்சொல்லி மற்றொருவருக்குச் சொல்லாதொழிந்த இடங்களில் ஒருவருக்குச் சொன்ன பலனையே மற்றொருவருக்கும் வருவித்துக்கொள்க.

கிரஹாணாம்ராசீநாஞ்ச நிசாதிவஸம்ஜ்ஞாஹ.

நிசாதிவஸஸந்த்யாஸு ப்ருஷ்டசீர்ஷோபயோதயை: ||அ௪||

(என் + ள்) இராத்திரியில், பிரஷ்டோதய கிரகங்களுக்கும் அவ்விராசிகளுக்கும் பலம். பகலில் சீர்ஷோதய கிரகங்களுக்கும் அவ்விராசிகளுக்கும் பலம். இருசந்திகளிலும் சிரபிரஷ்டோதயகிரகங்களுக்கும் அவ்விராசிகளுக்கும் பலம்.

க்ஷபக்ஷ.

ராத்ர்யஹஸ்ஸந்த்யயோ: கேசிச் சரஸ்திரத்வயம் பலம் ||அ௫||

(என் + ள்) இராத்திரி, பகல், இருசந்திகள் என்கிற இவைகளில் முறையே சரஸ்திர உபயராசிகளுக்குப் பலங்களென்று சிலர் பக்ஷம்.

அத² க்³ரஹப³லாப³லநிர்ணயமாஹ.

க்³ரஹேஷு ப³லவாந் யஸ்து தத்³வஶாத் ப²லமாதி³ஶேத் ॥ ௮௫ ॥

(என் + ள்) இராசிமண்டலத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களுக்குள், எந்தக் கிரகம் பலத்துடன் கூடினதோ அதைக் கொண்டு பலாபலன் சொல்லவும்.

அத² க்³ரஹாணாம் காலநிர்ணயமாஹ.

ஶநேர்வர்ஷம் ததா²யநம் ஸூர்யஸ்ய ஹரேர்ருதுஸ்ததா²யநம் ப³ல: |
ஶுக்ரஸ்ய பக்ஷம் ஜீவஸ்ய மாஸோ பௌ⁴மஸ்ய வாஸர: ॥ ௮௬ ॥
இந்தோர்முஹூர்த்தமித்யுக்தம் க்³ரஹாணாம் ப³லதோ வயஸ் ॥

(என் + ள்) சனிக்கு ஒரு வருஷம்; சூரியனுக்கு (௩) மாதம்; அதாவது ஒரு அயனம். புதனுக்கு (௨) மாதம்; அதாவது ஒரு இருது. சுக்கிரனுக்கு ஒரு பக்ஷம்; அதாவது பதினைந்து நாள். குருவுக்கு ஒரு மாதம். செவ்வாய்க்கு ஒரு தினம். சந்திரனுக்கு ஒரு முகூர்த்தம். இப்படிக்கு கிரகங்களுடைய பலத்தாலே வருஷாதி காலங்களை நிருபிக்கவும்.

அத² காலப³லாப³லவிதா⁴நமாஹ.

உச்சே தேஷாம் க⁴டிகா: ப்ரோக்தா உச்சஸ்தா²நஜுஷாம் க்ரமாத் ॥
ஸ்வக்³ருஹேஷு தி³நம் ப்ரோக்தம் மித்ரகே³ஹே து மாஸஶ: |
ஶத்ருக்ஷேத்ரேஷு நீசேஷு வத்ஸரா நாஹுராந்ததா: ॥ ௮௭ ॥

(என் + ள்) மேற் கூறிய கிரகங்களுக்குள் எந்தக் கிரகமாவது உச்சஸ்தானத்தை யடைந்திருக்கில் அந்தக் கிரகத்திற்கு நாழிகையையும், ஸ்வக்ஷேத்திரத்தை யடைந்திருக்கில் நாளையும், மித்திர க்ஷேத்திரத்தை யடைந்திருக்கில் மாசத்தையும், சத்துரு க்ஷேத்திரத்தையாவது (அல்லது) நீச க்ஷேத்திரத்தையாவது அடைந்திருக்கில் வருஷத்தையும் கிரமமாகச் சொல்லவேண்டு மென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது. (நாழிகை, நாள், மாசம், வருஷம் என்ற இவைகளை ஒருநாழிகை, ஒருநாள், ஒரு மாசம், ஒருவருஷம் என்று பொருள் கொள்ளவும்.) கிரமமாய்ச் சொல்லவேண்டுமென்று சொல்லியிருப்பதைக்கொண்டு அந்தந்தக் கிரகங்களுக்கு ஏற்பட்ட கிரணங்களின் எண்களைக் கொண்டு வருஷாதி காலங்களை நிர்ணயிக்க வேண்டுமென்றும் (அல்லது) அவரவர்களுக்கு ஏற்பட்ட வருஷ, மாச, தின, முகூர்த்தங்களின் கணக்குக்குத் தக்கதான நாழிகை நாள், மாசம், வருஷம் இவைகளைச் சொல்லவேண்டுமென்றுஞ் சிலர்களின் மதமாம்.

அத யாமாஷ்டக க்ரஹஸஞ்சாரக்ரம:

அர்காரஜீவவிதுஜ்ஞ ஸித ஶநி சந்த்ர ராஹூ ஜ்ஞமஹாஸ் |
ப்ராகாதிதிக்ஷு க்ரமஶ ஸ்துரேய யாமஸம்பவயா ||௧௯||
ப்ராகாதிதக்ஷ ஹரேவெஷ்டு த்ருதீயெ நைருத்யாதிகோணத: |
ஸர்வம்யாமேஷ்வதி தீயெவ க்ரமேணவஸிகல்பயேத் ||௨௰||
ப்ரவேஶ்ய ஶ்க்ர ஜ்ஞஸ்ய ஆகிர மந்தரோஸிந்து ராஹவஸ்தய: |
வ்ருஷாதிஷ க்ரமாதிக்ஷு தத்த காலம்விநிர்திஶேத் ||௨௰௧||
ஹ்ருதம்ஹவ்யம்வ தஸ்ய நம வாரேஶாத்யாஹவஷிஹி ||௨௰௨||

(என் + ள்) சூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், இராகு ஆகிய இவ்வெட்டுக் கிரகங்களும் உதித்து ஒரு யாமத்திற்குக் கிழக்கு முதலிய திக்குக ளெட்டிலேயும், இரண்டாவது யாமத்திற்குத் தென்கிழக்கு முதலிய திக்குகளெட்டிலேயும், மூன்றாவது யாமத்திற்குத் தெற்குமுதலியதிக்குகளெட்டிலேயும், இவ்விதமாகஇராத்திரி பகல்களாகிற யாமங்கள் எட்டுக்கும்எட்டுத் திக்குகளிலேயுஞ் சஞ்சரிப்பார்கள். இப்படிச் சஞ்சரிப்பதில் சூரியனுக்கு எதிராகச் சுக்கிரனும், செவ்வாய்க்கு எதிராகச் சனியும், குருவுக்கு எதிராகச் சந்திரனும், இராகுவுக்கு எதிராகப்புதனும், இருப்பவர்களாம். உதித்து ஒரு யாமத்திற்குக் கிழக்கு இராசியாகிற விருஷபராசிமுதற்கொண்டு, எட்டுத்திக்குகளிலேயும் எட்டுக் கிரகங்களையும் எப்படிஸ்தாபிக்கின்றேமோ, அதுபோல் ஆரூடம் எத்தனையாவது யாமத்திலேயோ, அச்சாமத்திற்குக் கிழக்குத்திக்கில் எந்தக்கிரக மிருக்கின்றதோ, அந்தக்கிரகம்முதல் மற்றயகிரகங்களையும் பிரதக்ஷிணமாகஎட்டுத் திக்குக்களிலேயும் போடவும். மேற்கூறிய சக்கிரவிதியையும் எதிற்கயிற்றையும் ஆதித்திய வாரத்திற்குஉபமானமாகக் காட்டிச் சொல்லிஇருப்பதால், மற்றைய வாரங்களுக்கும் பூத பவிஷியத் வர்த்தமான விஷயப் பிரச்னங்களில் அன்றைய வாராதிபனைக் கிழக்கு இராசியாகிற விருஷபத்தில் வைத்து மற்றத் திக்குகளிலே மேற்கூறிய விதிப்படிக்குக் கிரமமாக மற்றைய கிரகங்களை ஸ்தாபித்துக்கொள்க. அந்தந்த வாரங்களுக்குக் கிரகங்களடைக்கும்மார்க்கங்களை இதன்பின் ஏற்படுத்தியிருக்கும் ஆதித்தியவாராதி சக்கிரங்களிற் காண்க.

அத வாஸ்வவிதிகாலகதநம்.

த்ரிதெநவத்ய யக்ஷ்யத்ர த்ர்யாவஹ்ரிஷ்யாதிகம் ||௨௰௩||
தாவத்திவஸ்ராவஸரெவஸ்தி: கெவிஶம்ஶாயிவாதிஷ: ||௨௰௪||

(என் + ள்) பிரச்னகாலத்தில் சந்திரன் கணிதசாரப்பிரகாரம், எந்த நக்ஷத்திரத்தி லிருக்கின்றாரோ, அந்த நக்ஷத்திரத்தில் நின்றும் பிரச்னகாலத்தி லுதயமான இராசிக்குவர எத்தனை நாள் செல்லுமோ, அத்தனை நாட்களில் நஷ்ட வஸ்துக்கள் கிடைக்குமென்றறிவது. பிரச்னகாலத்தில் சந்திரன் நவாம்சகத்தில் எந்தக் கிரகத்தின்வீட்டிலிருக்கின்றாரோ, அந்த வீட்டதிபன் பிரச்னகாலத்தில் உதயமான இராசிக்குக் கணிதசார ரீதியாய் எப்பொழுது வருகின்றாரோ அத்தனை நாளையில் நஷ்டவஸ்துக்கள் கிடைக்குங்காலமென்று சிலர்கள் பக்ஷம்.

அத ஆரூடப்ரஶ்நயோகா:

ப்ரஶ்நஸ்ய கடிகாம் ஸார்தத்விகடிகாக்ரமாத் ||௧௩||
ஸார்தத்விநாடிகாயாந்து ஸூர்யலக்நம் ப்ரவக்ஷ்யதே |
காலலக்நம் தத்தத்ஸங்க்யா வ்ருஷாதிகணயேத்யதா ||௧௪||
தத்ராஸ்வஷ்டாரரூடம் ஜ்ஞாத்வா வாரூடவேவராத் |
ஆரூடாதிபதிக்ருத்ப்யாதோ நஷ்டம் நிர்திசேத் ||௧௫||

இதி ஜைமிநிவிரசித ஜ்ஞானப்ரதீபிகாயாம்.

ஆரூடவிசேஷஸம்ஜ்ஞாப்ரகரணநாம

த்விதீயகாண்ட:.

(என் + ள்.) பிரச்ன காலத்தின் நாழிகையை நிச்சயித்துச் சூரியனிருக்கிற இராசிமுதல் இரண்டரை நாழிகைவீதம் எண்ண முதலாவது இரண்டரை நாழிகைக்குச் சூரியலக்கினமாம். இந்தப் பிரகாரம் பிரச்ன கால நாழிகைக்குச் சூரியலக்கின முதல் மேற்கண்ட இரண்டரை நாழிகை வீதத்தில் எண்ண எத்தனை இராசியாகிறதோ அந்தத்தொகைக்கு விருஷப இராசி முதற்கொண்டெண்ணக் கண்டஇராசி யெதுவோ, அது ஆரூட இராசியாம். அதில் நின்ற கிரகம் ஆதித்தியவாராதி யாமசக்கிரத்தில் எந்தத்திக்கிலிருக்கின்றதோ அந்தத்திக்கிலேயே நஷ்டவஸ்துக்க ளிருப்பனவாம். அவ்வாரூட இராசியில் கிரகமில்லாவிடில் மேற்கூறிய ஆரூடலக்கினாதிபதி ஷடி சக்கிரத்தி லெந்தத்திக்கி லிருக்கின்றாரோ, அந்தத் திக்கிலேயும் நஷ்டவஸ்துக்களிருக்குமென்க.

ஆருடஸம்ஞ்ஞாகாண்டம் முற்றிற்று.

மீனம் வட கிழக்கு இராகு	மேஷம்	விருஷபம் கிழக்கு சூரியன்	மிதுனம் தென் கிழக்கு செவ்வாய்
கும்பம் வடக்கு சந்திரன்	௧-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு குரு
தனுசு வட மேற்கு சனி	விருச்சிகம் மேற்கு சுக்கிரன்	துலாம்	கன்னி தென் மேற்கு புதன்

சந்தி		இரா	சூ
சனி	௨-வது ஜாமம்		
			செ
சு	புத		குரு

சனி		சந்தி	இரா
சு	௩-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

சு		சனி	சந்தி
பு	௪-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

பு		சு	சனி
குரு	௫-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

குரு		பு	சு
செ	௬-வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

செ		குரு	பு
சூ	௭-வது ஜரிமம்		
			சு
இரா	சந்தி		சனி

சூ		செ	குரு
இரா	௮-வது ஜாமம்		
			பு
சந்தி	சனி		சு

சோமவார ஜாமசக்கிரங்கள்.

மீனம் வட கிழக்கு சனி	மேஷம்	விருஷபம் கிழக்கு சந்திரன்	மிதுனம் தென் கிழக்கு இராகு
கும்பம் வடக்கு சுக்கிரன்	க-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு சூரியன்
தனுசு வட மேற்கு புதன்	விருச்சிகம் மேற்கு குரு	துலாம்	கன்னி தென் மேற்கு செவ்வாய்

சு		சனி	க[illegible]ம், சந்தி[illegible]
பு	உ-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

புத		சுக்	சனி
குரு	ந-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

குரு		புத	சுக்
செ	[illegible]வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

செ		குரு	புத
சூ	ரு-வது ஜாமம்		
			சுக்
இரா	சந்தி		சனி

சூ		செ	குரு
இரா	சு வது ஜாமம்		
			புத
சந்தி	சனி		சுக்

இரா		சூ	செ
சந்தி	எ-வது ஜாமம்		
			குரு
சனி	சுக்		புத

சந்தி		இரா	சூ
சனி	அ-வது ஜாமம்		
			செ
சுக்	புத		குரு

பௌமவார ஜாமசக்கிரங்கள்.

மீனம் வடகிழக்கு சூரியன்	மேஷம்	விருஷபம் கிழக்கு செவ்வா	மிதுனம் தென்கிழக்கு குரு
கும்பம் வடக்கு இராகு	௧-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு புதன்
தனுசு வடமேற்கு சந்திரன்	விருச்சிகம் மேற்கு சனி	துலாம்	கன்னி தென்மேற்கு சுக்கிரன்

இரா		சூ	செ
சந்தி	௨-வது ஜாமம்		
			குரு
சனி	சு		பு

சந்தி		இரா	சூ
சனி	௩-வது ஜாமம்		
			செ
சு	பு		குரு

சனி		சந்தி	இரா
சு	௪-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

சு		சனி	சந்தி
பு	௫-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

பு		சு	சனி
குரு	௬-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

குரு		பு	சு
செ	௭-வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

செ		குரு	பு
சூ	௮-வது ஜாமம்		
			சு
இரா	சந்தி		சனி

சௌமியவார ஜாமசக்கிரங்கள்.

மீனம் வடகிழக்கு குரு	மேஷம்	விருஷபம் கிழக்கு புதன்	மிதுனம் தென்கிழக்கு சுக்கிரன்
கும்பம் வடக்கு செவ்வாய்	க-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு சனி
தனுசு வடமேற்கு சூரியன்	விருச்சிகம் மேற்கு இராகு	துலாம்	கன்னி தென்மேற்கு சந்திரன்

செ		குரு	பு
சூ	உ-வது ஜாமம்		
			சு
இரா	சந்தி		சனி

சூ		செ	குரு
இரா	௩-வது ஜாமம்		
			பு
சந்தி	சனி		சு

இரா		சூ	செ
சந்தி	௪-வது ஜாமம்		
			குரு
சனி	சு		பு

சந்தி		இரா	சூ
சனி	௫-வது ஜாமம்		
			செ
சு	பு		குரு

சனி		சந்தி	இரா
சு	௬-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

சு		சனி	சந்தி
பு	௭-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

பு		சு	சனி
குரு	௮-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

மீனம் வடகிழக்கு செவ்வாய்	மேஷம்	விருஷபம் கிழக்கு குரு	மிதுனம் தென்கிழக்கு புதன்
கும்பம் வடக்கு சூரியன்	௧-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு சுக்கிரன்
தனுசு வடமேற்கு இராகு	விருச்சிகம் மேற்கு சந்திரன்	துலாம்	கன்னி தென்மேற்கு சனி

சூ		செ	குரு
இரா	௨-வது ஜாமம்		
			பு
சந்தி	சனி		சு

இரா		சூ	செ
சந்தி	௩-வது ஜாமம்		
			குரு
சனி	சு		பு

சந்தி		இரா	சூ
சனி	௪-வது ஜாமம்		
			செ
சு	பு		குரு

சனி		சந்தி	இரா
சு	௫-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

சு		சனி	சந்தி
பு	௬-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

பு		சு	சனி
குரு	௭-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

குரு		பு	சு
செ	௮-வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

பிருகுவார ஜாமசக்கிரங்கள்.

மீனம் வடகிழக்கு புதன்	மேஷம்	விருஷபம் கிழக்கு சுக்கிர	மிதுனம் தென்கிழக்கு சனி
கும்பம் வடக்கு குரு	௧-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு சந்திரன்
தனுசு வடமேற்கு செவ்வாய்	விருச்சிகம் மேற்கு சூரியன்	துலாம்	கன்னி தென்மேற்கு இராகு

குரு		பு	சு
செ	௨-வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

செ		குரு	பு
சூ	௩-வது ஜாமம்		
			சு
இரா	சந்தி		சனி

சூ		செ	குரு
இரா	௪-வது ஜாமம்		
			பு
சந்தி	சனி		சு

இரா		சூ	செ
சனி சந்தி	௫-வது ஜாமம்		
			குரு
சனி	சு		பு

சந்தி		இரா	சூ
சனி	௬-வது ஜாமம்		
			செ
சு	பு		குரு

சனி		சந்தி	இரா
சு	௭-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

சு		சனி	சந்தி
பு	௮-வது ஜாமம்		
			இரா
குரு	செ		சூ

மீனம் வடகிழக்கு சுக்கிரன்	மேஷம்	விருஷபம் கிழக்கு சனி	மிதுனம் தென்கிழக்கு சந்திரன்
கும்பம் வடக்கு புதன்	க-வது ஜாமம்		கடகம்
மகரம்			சிம்மம் தெற்கு இராகு
தனுசு வடமேற்கு குரு	விருச்சிகம் மேற்கு செவ்வா	துலாம்	கன்னி தென்மேற்கு சூரியன்

புத			சனி
குரு	உ-வது ஜாமம்		
			சந்தி
செ	சூ		இரா

குரு		பு	சு
செ	ங-வது ஜாமம்		
			சனி
சூ	இரா		சந்தி

செ		குரு	பு
சூ	ச-வது ஜாமம்		
			சு
இரா	சந்தி		சனி

சூ		செ	குரு
இரா	ரு-வது ஜாமம்		
			பு
சந்தி	சனி		சு

இரா		சூ	செ
சந்தி	சா-வது ஜாமம்		
			குரு
சனி	சு		பு

சந்தி		இரா	சூ
சனி	எ-வது ஜாமம்		
			செ
சு	பு		குரு

சனி		சந்தி	இரா
சு	அ-வது ஜாமம்		
			சூ
பு	குரு		செ

ஜ்ஞாநவ்ருத்திகாயாம்.

தாதுகாண்டப்ரகரணம்:

ச்லோ॥ மேஷகர்க்கிதுலாநக்ரா தாதுராசய ஸம்ஸ்திதா:|

கும்பஸிம்ஹாலிவ்ருஷபா மூலராசய: ॥௧॥

த்வந்த்வகந்யா தநுர்மீநா ராசயோ ஜீவஸம்ஜ்ஞகா: ॥௧॥

(என்+ள்) மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இந்நான்கும் தாது ராசிகள். விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய இந்நான்கும் மூலராசிகள்; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய இந்நான்கும் ஜீவராசிகள்.

சந்த்ராரஸௌரிஸ்வர்பாநவோ தாதவ: ப்ரகீர்த்திதா: ॥௨॥

மூலம் ஸூர்யஸ்ஸிதஸ்சைவ ஜீவௌ புதகுரூ ஸ்ம்ருதௌ ॥௨॥

(என்+ள்) சந்திரன், செவ்வாய், சனி, இராகு ஆகிய இந்நால்வர்களும் தாது கிரகங்கள். சூரியன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்களும் மூலகிரகங்கள். புதன், குரு ஆகிய இவ்விருவர்களும் ஜீவகிரகங்கள்.

ஸ்வக்ஷேத்ரே ஸூர்யசந்த்ராவபி ஸ்வக்ஷேத்ரே தாதுரூபத: ॥

ஸ்வக்ஷேத்ரே சநிமந்தௌ ச தாதுரந்யத்ர மூலக: ॥௩॥

(என்+ள்) சூரியன் தன் ஸ்வக்ஷேத்திரமாகிய சிம்மத்திலிருக்கினும், சந்திரன் தன் ஸ்வக்ஷேத்திரமாகிய கடகத்திலிருக்கினும் தாதுவாம்; மற்றைய விராசிகளி லிருக்கின் மூலமாம்; சனி தன் ஸ்வக்ஷேத்திரங்களாகிய மகர, கும்பங்களி லிருக்கின் கொடிகளாம்; மற்றைய விராசிகளி லிருக்கின் தாதுவாம்; புதன் தன் ஸ்வக்ஷேத்திரங்களாகிய மிதுன, கன்னிகளி லிருக்கின் தாதுவாம்; மற்றைய விராசிகளி லிருக்கின் ஜீவனும்.

மூலகிரகமாயுள்ள சூரியன் ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கின் தாதுவாகியும், தாதுகிரகமாயுள்ள சந்திரன் அந்நிய க்ஷேத்திரங்களிலிருக்கின் மூலமாகியும், ஜீவக்கிரகமாயுள்ள புதன் ஸ்வக்ஷேத்திரங்களிலிருக்கின் தாதுவாகியும், தாதுக்கிரகமாயுள்ள சனி ஸ்வக்ஷேத்திரங்களி லிருக்கின் மூலமாகியும் ஆக இவ்விதங்களாக இராசிகளின் பலத்தினால் கிரகங்களுக்கு அவஸ்தாபேதங்க ளேற்படுகின்றன.

மற்றைய கிரகங்களுக்கு அங்ஙனம் வித்தியாசங்களில்லை யெனக் காண்க.

தாம்ரம் ஸௌவர்ணரௌப்யம் ரீதி த்ரபு ராஸ்வர்ணம் த்ரபு வர்ணம் ப்ரயஃ||
ரௌப்யம் ரூக்ஷஸ்ய ச காம்ஸ்யம் சூர்யஸ்யாயஸம் ஹோமிநௌ ||௪||

(என்+ள்) சூரியனுக்குப் பித்தளை, சந்திரனுக்கு வெண்கலம், செவ்வாய்க்குத் தாம்பரம், புதனுக்குத் தரா, குருவுக்குப் பொன், சுக்கிரனுக்கு வெள்ளி, சனி, இராகு ஆகிய இவ்விருவர்களுக்கும் இரும்பு.

ஸர்வாக்ரஹா ராஸிஸ்தா ஸ்வஸ்வலோஹேஷு ஸூசிதாஃ ||௫||
சந்த்ரஜ்ஞகுரவஸ்ஸ்வ லோஹா ஸ்வக்ஷேத்ர மித்ரமாஃ |
மிஸ்ரமிஸ்ரஹலம்ப்ரயோகே ஹாணாநுவர்க்க ரோக ||௬||

(என்+ள்) சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி ஆகிய இந்நால்வர்களும் எந்த விராசிகளி லிருக்கினும் அவர்களுக்குச் சொன்ன உலோகங்களையே சொல்லவும். சந்திரன், புதன், குரு, ஆகிய இம்மூவர்களும் ஸ்வக்ஷேத்திர, மித்திரக்ஷேத்திரங்களி லிருக்கின், அவர்களுக்குச் சொன்ன உலோக வர்க்கங்களைச் சொல்வது. மேற்கூறிய சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி ஆகிய இவர்களும்; சந்திரன், புதன், குரு ஆகிய இவர்களும்; ஒருவருடனொருவர் சேரின், இருவித உலோகங்களும் கலப்பாம். அநேகர்கள் கூடி ஒரு விராசியில் நின்றவிடத்து, அதில் பலவான் யாரோ அவனுக்குச் சொன்ன உலோக வர்க்கங்களைச் சொல்லவேண்டியது.

இதில் அநேகர்கள் கூடி நின்றால், அதில் பலவானுடைய வர்ணத்தை முக்கியமாகவும், மற்றக்கிரகங்கள் எவ்வளவு சேர்ந்திருக்கின்றனவோ அவ்வளவு நிறங்களும் கொண்டுள்ள பதார்த்தம் நஷ்டவஸ்துவென்றும் சில பெரியோர்களாகிய சோதிட வித்வான்கள் கூறுகின்றனர்.

ஸிலாஸம்ஹாநாவநீயஸ்ய ஹரேஸ்த்வதாத்ரமேஷாரம் விதயோஃ|
ஸிதஸ்ய ஸ்தாஸ்திகாஃ ப்ரவாளம் ஹேமஸ்தஸ்ய ||௭||
ஸூர்யஸம்ஹாநம் த்ரஸ்ய ரம்த்ரீண்ஸ்வ ஸ்நிஸ்யாஃ ||௮||

(என்+ள்) சூரியனுக்குக் கல்சம்பந்தமான பூமி, சந்திரனுக்கு உவர்மண், செவ்வாய்க்குப் பவளநிறமுள்ள மண், புதனுக்கு மண்ணாலாகிய பாண்டம், குருவுக்கு மஞ்சள் நிறமுள்ள பூமி,

சுக்கிரனுக்கு முத்துக்களுண்டாவதற் காதாரமானதும், படிகங்களுண்டாவதற்கு ஆதாரமானதுமான மண், அல்லது அவ்வித நிறமுள்ள மண்ணெனினு மொக்கும். சனி, இராகு இவ்விருவர்களுக்கும் இரும்பு உண்டாவதான மண். இச்சுலோகத்தி லிராகுவைச் சொல்லாவிடினும் சனிக்குச் சொல்லியவற்றையே வருவித் துரைத்தமை காண்க. மேலே ஒவ்வொரு கிரகத்துக்கும் பாஷாண வர்க்கஞ் சொல்லி யிருக்கின்றமையால், இவ்விடத்தில் கல் முதலிய சம்பந்தமுள்ள பூமிகளைச் சொல்ல லாயிற்று.

மாணிக்ய முக்தா ப்ரவாள மாரகதம் புஷ்பராகம் ||௮||
வஜ்ரம் நீலஞ்ச கோமேதம் வைடூர்யஞ்சார்கத꞉ க்ரமாத் ||௮½||

(என் + ள்) சூரியனுக்கு மாணிக்கம், சந்திரனுக்கு முத்து, செவ்வாய்க்குப்பவளம், புதனுக்குமரகதம், குருவுக்குப்புஷ்யராகம், சுக்கிரனுக்கு வச்சிரம், சனிக்கு நீலம், இராகுவுக்குக் கோமேதகம், கேதுவுக்கு வைடூர்யம்.

[illegible] ||௯||
[illegible] |
[illegible] ||௧௦||
[illegible] |
[illegible] ||௧௧||
[illegible] ||௧௧½||

(என் + ள்) சூரியனுக்குச்சூரியகாந்தமும், சந்திரனுக்குச்சந்திரகாந்தமும், செவ்வாய்க்குப் பவளம்போன்ற கல்லும், புதனுக்கு மரகதம்போன்ற கல்லும், குருவுக்குப் புஷ்யராகம்போன்ற கல்லும், சுக்கிரனுக்கு வைடூர்யம்போன்ற கல்லும், சனிக்கு நீலம் போன்ற கல்லும், இராகுவுக்குக் கோமேதகம்போன்ற கல்லும், இப்படி அவரவர்களுக்குரிய இரத்தினங்களின் நிறமான கற்களைச் சொல்வதாம். கேதுவுக்குக்கற்கள் சொல்லாததனால், சுக்கிரனுக்குச் சொல்லிய வைடூர்யம் போன்றுள்ள கற்களையே சொல்க.

தவிரவும், கிரகங்களுக்குரிய வர்ணங்களையும், கிரகங்களிருக்கு மிராசிகளின் வர்ணங்களையு மறிந்து, பலாபலத்தாலே கிரகங்கள் தனியாக விருக்கின் தனிவர்ணமாகவாவது, கிரகங்கள் சேர்ந்திருக்கின் அவரவர்களுக் குரிய வர்ணங்கள் கலப்பாகவாவது யூகித்துச் சொல்லவும்.

ந்ருராசௌ ந்ருவர்மயந்த்ரே பூஷாவாஸதத்ருஷ்டிபூஷணம் ||௧௨||
தத்ர ராசிவசாதேவ தத்ரைவம் விநிர்திசேத் ||௧௨||

(என் + ள்) மனுஷ்யராசி உதயமாகி, அவ்விராசியில் மனுஷ்ய கிரக மிருக்கினும் பார்க்கினும் மனிதர்கள் அணிகிற நகைகளாம். இப்படி உதயவிராசியையும் உதயத்தில் நின்றுள்ள கோளை யும், பார்த்தகோளையும் அறிந்து, அவைகளுக்குத் தக்க நகையைச் சொல்வதா மென்றமையால், நாற்காலிராசி உதயமாகி, நாற்கால் கிரகங்கள் அவ்விராசியி லிருக்கினும், பார்க்கினும், நாற்கால் கொண்டுள்ள மாடு முதலியவை அணிவதான நகையா மென்றும்; பக்ஷிராசிக ளுதயமாகி, பக்ஷி கிரகங்கள் அவ்விராசியி லிருக்கினும் பார்க்கினும், பக்ஷிகள் வைப்பதற்கான கூடுகளென்றும், அல்லது அவைக ளணிகிற நகைகளென்றும் பொருள்படுகின்றமை காண்க.

ஸூர்யாரமந்த்ரிணாம் க்ரீவா கண்டபூஷணம் ||௧௩||
சந்த்ரஜ்ஞயோ: ச்ரோத்ரபூஷா சிரோபூஷா ப்ருகோர்பவேத் |
சனிராஹ்வோஸ்து ஹஸ்தே பாதயோ பூஷணம் விதுஹு ||௧௪||

(என் + ள்) சூரியன், செவ்வாய், குரு இம்மூவர்களுக்கும் கழுத்தி லணிவதான நகையாம்; சந்திரன், புதன் இவ்விருவர்களு க்கும் காதி லணிவதான நகையாம்; சுக்கிரனுக்குச்சிரசில் தரிக்கக் கூடியதான நகையாம்; சனி, இராகு இவ்விருவர்களுக்கும் கை, கால் இவைகளி லணிவதான நகையாம்.

ஸுவர்ணமணிரத்நாதி நிர்மிதம் பூஷணஸ்ய து |
சாந்த்ரம் நாவரத்நாதி மயம் ஸம்பூஷணம் விது: ||௧௫||
சந்த்ரஸ்ய ராக்ஷாமாலா வா வஹ்நிதத்ரீணி ஹீரிகா |
பௌமாய மாலா ப்ரவாளமணிக்ருதபூஷணம் ||௧௬||
மாரகதம் போதஸ்ய ஸ்வர்ணே ப்ருகோ: ஹீரமயம் ...கம் |
சனே: நீலமணீநாம் பூஷணம் வைடூர்யமேவ ச ராஹோ: ||௧௭||

(என் + ள்) (கிரகங்களுக்கு மேற்கூறிய அங்கபூஷணங்களுக் குள் சிறப்பு விதி கூறுகின்றனர்.) சூரியனுக்கு மாணிக்க ரத்தின த்தா லாயவும், அல்லது மாணிக்கம் போன்றுள்ள கற்களா லாயவும். கழுத்தி லணிவனவுமான நகைகளாம்; சந்திரனுக்குப் பொன்னாலாயவும், எழுத்துக்க ளுள்ளவுமான மாலைகளும், நவரத் தினத்தி லொன்றாகிய முத்துமாலையுமாம்; செவ்வாய்க்குப் பவழத்

திஞலாகியதும், கழுத்தி லணிவதுமான நகையாம்; புதனுக்குக் கருடகாந்தப் பச்சையென்கிற ரத்தினத்திஞலாயவும், அல்லது அவ்விதம் போன்றுள்ள கற்களாலாயவும், காதிலணிவனவுமான நகைகளாம்; குருவுக்குத்தங்கத்தாலாகிய மணிகளும், புஷ்யராகம் பதித்தனவும், அவ்விதம் போன்றுள்ள கற்களா லாயவும், கழுத்தி லணிவனவுமான நகைகளாம்; சுக்கிரனுக்கு வைடூர்யத்திஞ லாயவும், அவ்விதம் போன்றுள்ள கற்களாலாயவும், தலையிலணிவனவுமான நகைகளாம்; சனிக்குச்சவிரிகளும், நகத்தா லாயவும், பற்களாலாகியவும், நீலரத்தினத்திஞ லாயவும், அவ்விதம் போன்றுள்ள கற்களாலாகியதும், இரும்பிஞ லாகியதுமான நகைகளாம். இதிற் கூறுதனவாகிய கிரகங்களுக்கும் இவ்வாறு ஆலோசித்துச் சொல்லவேண்டு மென்று கூறியிருப்பதால், சனிக்குச் சொன்ன பூஷணங்களுடன் கோமேதகத்திஞ லாகியவும், அவ்விதம் போன்றுள்ள கற்களாலாயவுமான நகைகளையும், இராகுவுக்குச் சேர்த்தும் சொல்வதாம்.

மாணிக்க வர்க்கத்தாலாகிய ஆபரணங்களைச் சொல்ல வந்தவர் உலோக வர்க்கமாகிற பொன்னைக் குருவுக்கும், இரும்பைச் சனிக்கும் இவ்விடத்தி லாபரண மென்று கூறின யுத்தியைக்கொண்டு, சூரியனுக்குப் பித்தளையிஞ லாகியதும், சந்திரனுக்கு வெண்கலத்தா லாகியதும், செவ்வாய்க்குத் தாம்பரத்திஞ லாகியதும், புதனுக்குத் தாரவிஞ லாகியதும், சுக்கிரனுக்கு வெள்ளியிஞலாகியதும், இவை முதலாயுள்ள நகைகளைச் சொல்லிஞ மொக்கும். சந்திரனுக்குக் காதி லணிவதான நகைகளைச் சொலலவேண்டியதிருக்கக் கழுத்தி லணிவதான நகைகளைச் சொல்லியும்; சனி, இராகு இவ்விருவர்களுக்கும், கை கால்களி லணிவதான நகைகளைச் சொல்வதைத் தவிர்த்து, தலையிலணிவதான சவிரியையும், மார்பி லணிவதான நகம் பல் இவைகளாலாகிய ஆபரணங்களையும் சொல்லியிருப்பதை நிதானிக்கையில் சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கையில், எழுத்துக்களுடன் கூடியனவும், முத்துக்களா லாகியனவும், காதி லணிவனவுமான நகைகளென்றும்; அந்நியக்ஷேத்திரங்களி லிருக்கையில், அவ்விதமான கழுத்திஞபரணங்களென்றும்; சனி ஸ்வக்ஷேத்திரத்தி லிருக்கையில், நீல ரத்தினத்திஞலாவது, அல்லது அவை போன்றுள்ள கற்களாலாகிய ஆபரண மென்றும்; அதுவும் கை கால்களி லணிவ தென்றும், அந்நிய க்ஷேத்திரங்

களி லிருக்கையில், சவிரி, நகம், பல், இரும்பு இவைகளாலாகிய ஆபரணங்களென்றும்; அதுவும் தலை, கழுத்து, இடுப்பு முதலிய விடங்களி லணிவதென்றுஞ் சொல்வது மிகச் சிறப்புடைத்தாம். ௧௭, ௧௮, ௧௯ ஆகிய மூன்று சுலோகங்களுக்கும், பதத்தினுடைய அர்த்தத்தைத் தவிர ஜாஸ்தியாக எழுதியிருப்பவைகள் யாவற்றையும் விளங்கவைத்த லென்னும் யுத்தியாம்.

[illegible] |
[illegible] ||௧௯||
[illegible] |
[illegible] ||௧௯||
[illegible] ||

(என் + ள்) குருவுடன் இராகு சேர்ந்திருக்கின் கழுத்தி லணிவதான பொற்சரடாம்; குருவுடன் சுக்கிரன் சேர்ந்திருக்கின், முத்து, ஸ்படிகம் இவைகளாலிழைத் துள்ளனவும், கழுத்தி லணிவனவுமான நகைகளாம். குருவுடன் சந்திரன் கூடி நிற்கின், தங்கத்தாலாகியதும், மருதங்கம் போன்றுள்ளதுமான தாயத்தாம்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், சனி, இராகு இவ்வேழு கிரகங்களுக்குள் எந்தக்கிரகத்தோடாவது, குரு கூடினு லெப்பொழுது மணிவதான நகையாம். குரு சேராது மேற்கூறிய ஏழு கிரகங்களுக்குள் ஒருவரோ டொருவர் சேரின் ஒருகாலத்தி லணிவதான நகையாம்.

ஒருகாலத்தி லணிகிற தென்றதை விசேஷ காலங்களி லெடுத்து அணிவதும், மற்றையகாலங்களில் பேழையில் வைத்திருப்பதுமெனப் பொருள்படுத்திக்கொள்க.

[illegible] ||௨௦||
[illegible] ||
[illegible] ||௨௧||

[illegible]

[illegible]

(என் + ள்) சூரியன் அக்கினி போன்றும், சந்திரன் படிகம் போன்றும், செவ்வாய் இரத்தம் போன்றும், புதன் பசுமையான கிளிபோன்றும், குரு பொன் போன்றும், சுக்கிரன் பால் போன்றும், சனி, இராகு இவ்விருவர்களும் இந்திர நீலம் போன்றுமுள்ள நிறங்களை யுடையவர்களாம்.

தாதுகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

ஔஷதகாண்டப்ராரம்ப:.

ஶ்லோ|| ஔஷதீநாமதீநாநி பூர்வஶாஸ்த்ராநுஸாரத: |
வ்ருக்ஷாணி ஸூர்யஸ்ய லதா: சந்த்ரஸ்ய பூஜயோ: ||௧||
க்ஷுத்ரதாந்யாநி பௌமஸ்ய வ்ரீஹயஸ்து புதஸ்ய ச |
குரோரிக்ஷுர்பார்கவஸ்ய ஸஸ்யதிந்த்ரிணிகா: ||
ஶநைஶ்சரஸ்ய ராஹோஶ்ச ஸஞ்ஜாதாஸ்ஸுகண்டகா: ||௨||

(என் + ள்.) (முன்னோர்களுடைய சாஸ்திரங்களை அனுசரித்து மூலசிந்தனைகள் சொல்லப்படுகின்றன.)

சூரியனுக்கு மரங்களும், சந்திரனுக்குக் கொடிகளும், செவ்வாய்க்கு வரகு முதலியபுன்செய்ப் பயிர்களும், புதனுக்கு நெல் முதலிய நன்செய்ப் பயிர்களும் அல்லது சிறுசெடிகளும், குருவுக்குக் கரும்பும், சுக்கிரனுக்கு நெல் முதலிய நன்செய்ப் பயிர்களுடன் புளியமரங்களும், சனி, இராகு ஆகிய இவ்விருவர்களுக்கும் வளைந்த முள்ளுள்ளமரங்களுமாம்.

அஜாலீக்ஷுத்ரதாந்யாநி வ்ருஷகர்கிதுலாலதா: ||௩||
கந்யாமிதுநயோர்குல்மம் தநுஸ்ஸிம்ஹயோர்த்ருமா: |
இக்ஷுர்மீநே நக்ரகும்பே கண்டகத்ருமவ்ருக்ஷகே ||௪||

(என் + ள்.) மேஷம், விருச்சிகம் ஆகிய இவ்விரண்டிற்கும் வரகு முதலிய புன்செய்ப் பயிர்கள்; விருஷபம், கடகம், துலாம் ஆகிய இம்மூன்றிற்கும் கொடிகள்; மிதுனம், கன்னி ஆகிய இவ்விரண்டிற்கும் புதர்கள்; தனுசு, சிம்மம் ஆகிய இவ்விரண்டிற்கும் விருக்ஷங்கள்; மீனத்திற்குக் கரும்பு; மகர, கும்பங்கட்கு முள்ளுள்ள மரங்களாம்.

ஶுக்ரேந்த்வோர்ஜீவஸௌம்யாநாம் க்ரூராணாம் கண்டகத்ருமா: |
யஸ்ய கண்டகக்ருதம் தஸ்ய ஸஜீவா ஸ்யு: கண்டகா: ||௫||
வக்ராஸ்தகாஶ்சோபதாஶ்ச ஸ்வநவரஸோஜஸம்பவா: |
பாபக்ரஹாணாம் க்ஷேத்ராணி தயா கண்டகிநாஶ்ரிதா: ||௬||

(என் + ள்) சுபக்கிரகங்களாகிய சுக்கிரன், குரு, புதன், சந்திரன் ஆகிய இந்நால்வர்களுக்கும் இவர்களுடைய இராசிகளாகிய

விருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய இவ்வேழு இராசிகளுக்கும் முள்ளில்லாத மரங்கள். பாபக் கிரகங்களாகிற சூரியன், செவ்வாய், சனி, இராகு ஆகிய இந்நால் வர்களுக்கும் இதில் இராகு நீங்கலான மற்றவர்களுடைய இராசி களாகிற சிம்மம், விருச்சிகம், மகரம், கும்பம், மேஷம் ஆகிய இவ்வைந்து இராசிகளுக்கும் முள்ளுள்ளமரங்களாம். (பாபக்கிரங் களுக்கு முள்ளுள்ள மரங்களென்றதற்குச் சிறப்புவிதி கூறுகின் றார்.) சூரியனுக்கு இரண்டு முட்கள் சேர்ந்துள்ள மரங்களாம். செவ்வாய்க்குச் சிறுமுட்களுள்ள மரங்களாம். சனி, இராகு ஆகிய இவ்விருவர்களுக்கும் கோணமுட்களுள்ள மரங்களாம்.

க்ஷீரிணோஷதீஶஸ்ய லதாவ்ருக்ஷாஸ்ததாவிதஃ |
ஸுராஸ்ய ஶிம்பிவ்ருக்ஷாஶ்ச நாலிகேராதயோ ஶுரோஃ ||௭||
தாலாஶோகஸ்நேஹஶ்சைவ வ்ருஹத்த்ருயந்தாஸ்ரமோஃ |

(என் + ள்) சந்திரனுக்கு வாழை. புதனுக்குக் கொடிபோன்ற மரம். குருவுக்குத் தென்னமர முதலியவைகள். சுக்கிரனுக்கு இலை பெரிதாயுள்ள தேக்கு முதலிய மரங்கள். முற்சுலோகத்தில் பாபர் களுக்கு விருக்ஷங்கள் கூறினதைப்போல் சுபர்களுக்கு விருக்ஷங் களில் சிறப்பு விதியாமென அறியவும். அன்றியும் சூரியனுக்கு மலையிலுள்ள மரங்களும்; சனி, இராகு ஆகியஇவ்விருவர்களுக்கும் பனைமரங்களும் ஒட்டிக்கொள்க. புதனுக்குக் கொடிபோன்ற மர மென்றது கெட்டிலிங்கை, சவுக்கு முதலிய மரங்கள் போன்றுள் ளதாம்.

ஸாரஹீநாஶ்ஶநிஞ்சந்த்ரா ஸுஸாரஸ்கவிமந்த்ரிணஃ ||அ||
பஹிஸ்ஸாரா ஸ்வஸாரஸ்தா பாயஸஞ்ஜ்ஜவஜுமாஃ |
அஸ்ஸாராஸ்வஸாரஸ்தாஃ பஹிஸ்ஸாராஸ்த்வந்யமாஃ ||௯||

(என் + ள்) சூரியன், சந்திரன், சனி ஆகிய இம்மூவர்களுக் கும் ஜலசத்தில்லாத மரங்கள். குரு, சுக்கிரன் ஆகிய இவ்விருவர் களுக்கும் ஜலசத்தை உள்ளிற்கொண்டுள்ள மரங்கள். மேற்கூறிய சூரியன், சந்திரன், குரு, சுக்கிரன், சனி ஆகிய இவர்கள் ஸ்வக்ஷே த்திரங்களி லிருக்கில் மேலே ஜலசத்தையுடைய மரங்கள். செவ் வாய், புதன், இராகு ஆகிய இம்மூவர்களும் ஸ்வக்ஷேத்திரங்களி லிருக்கில் உள்ளிற் ஜலசத்தைக் கொண்டுள்ள மரங்கள். அன்னிய க்ஷேத்திரங்களி லிருக்கில் மேலே ஜலசத்தையுடைய மரங்களாம்;

ஸ்வக்ஷேத்ரேத்வக் புஷ்பபத்ரேஷு பக்வபலாநி ச |
கந்தம் லதா ச வஸ்யுர்ஜாத்யா ஸ்வாம்யாத்யா ஸாஃக்ரமாத் ||௧௦||

(என்+ள்) சூரியாதிகளான எட்டு கிரகங்களும் அவரவர்களின் ஆகுதி வீடுகளிலிருக்கில் சூரியன் பட்டைக்கும், சந்திரன் கிழங்கிற்கும், செவ்வாய் புஷ்பத்திற்கும், புதன் இலைகளுக்கும், குரு பழத்திற்கும், சுக்கிரன் மிகவுங்கனிந்துள்ள பழத்திற்கும், சனி வேரிற்கும், இராகு கொடிக்கும் அதிகாரிகளாம்.

சுஜஸ்ய சணகாஸ்தூர ஜஸ்ய ஸ்தாபகாஹ்ரமோ: |
பாநம்ருஜஸ்ய நிஷ்பாவம் ரவேர்ஜீர்வோர்ணாபகீ ||௧௧||
ஸத்ரஹ்ரீஹேஸ்ரகாஷம் தயாநம்யாநஸஹயேக ||௧௧௨||

(என்+ள்) சூரியனுக்கு மொச்சை, சந்திரனுக்கு நெல், செவ்வாய்க்குக் கடலை, புதனுக்குப் பாசிப்பயறு, குருவுக்குச் செந்துவரை, சுக்கிரனுக்கு வெண்துவரை, சனிக்கு எள், இராகுவுக்கு உளுந்து இப்படி அவரவர்களின் தானியங்களை யறியவும்.

ஊஷரோ ஸாநு சுஜயோ: வத்ஸ்கேபயோர்ஜிநா: ||௧௨||
ஸர்வோத்ரவிதயோ ம ரோஸ்ரதுதயா |
ஸநீக்ருஷ்ணதிஷ்யாநே ஶரோதாஸ ஹிஷ ||௧௩||

இதி ஜைமிநிவிரசித ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
ஶரீவிசாராத்யாநம் நாம ப்ரதமகாண்டம்.

(என்+ள்) சூரியன், செவ்வாய் ஆகிய இவ்விருவர்களுக்கும் உவர் பூமி. சந்திரன், சுக்கிரன் ஆகிய இவ்விருவர்களுக்கும் ஜலத்திற்குள்ளுள்ள பூமி. குருவுக்கு மலையை யடுத்த பூமி. சனிக்குக் கறுப்பு எள்விளைகிற பூமி. மேற்கூறிய பூமிகளிலுள்ள மூலவர்க்கங்களுக்கு அவரவர்களே காரகர்களாம்.

மூலகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

ஜீவகாண்டப்ராரம்ப:.

ஶ்லோ॥ சந்த்ரோ மாதா பிதா ஸூர்ய: ஸர்வேஷாம் ஜகதாமபி |
குருர்பூ: ஶுக்ர ஆபோ வஹ்நி: [illegible] ||௧||

(என் + ள்) சர்வ லோகங்களுக்கும் சூரியன் பிதா, சந்திரன் மாதா, குரு பிருதிவி, சுக்கிரன் அப்பு, செவ்வாய் தேயு, புதன் வாயு, சனி ஆகாசம்.

ஶ்ரோத்ர த்வக் சக்ஷு ஜிஹ்வா நாஸா ப்ராணம் பஞ்சேந்த்ரியாணி ச |
ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தாஶ்ச விஷயா: க்ரமாத் ||௨||
ஜ்ஞாநம் ஸௌராதி பஞ்சாநாம் [illegible] ||௨அ||

(என் + ள்) காது, தோல், கண், நாக்கு, மூக்கு இவைகளைந்தும் பஞ்சேந்திரியங்கள். அவைகளில் காதுக்குச் சப்தமும், தோலுக்கு ஸ்பரிசமும், கண்ணுக்கு ரூபமும், நாக்குக்கு இரசமும், மூக்குக்கு வாசனையும் அறிவது பஞ்சேந்திரியங்களின் விஷயங்கள். சப்தத்திற்குச் சனியும், ஸ்பரிசத்திற்குப் புதனும், ரூபத்திற்குச் செவ்வாயும், இரஸத்திற்குச் சுக்கிரனும், வாசனைக்குக் குருவும் அதிகாரிகளாம்.

[illegible] ||௩||
[illegible] ||௩அ||

(என் + ள்) குருவுக்கு ஐயறிவு, சுக்கிரனுக்கு நாலறிவு, செவ்வாய்க்கு மூன்றறிவு, புதனுக்கு இரண்டறிவு, சனிக்கு ஓரறிவு.

[illegible] ||௪||
[illegible] |
[illegible] ||௫||
[illegible] |
[illegible] ||௬||

(என் + ள்.) சனி ஓரறிவுடையவனதலால் விருக்ஷங்களையும்; புதன் ஈரறிவுடையவனதலால் சங்கு, முத்துச்சிப்பி, பல

க்றை முதலியவைகளையும்; செவ்வாய் மூவறிவுடையவனாதலால் மூட்டுப்பூச்சி, கறையான், பேன், ஈ, எறும்பு முதலியவைகளையும்; சுக்கிரன் நாலறிவுடையவனாதலால் வண்டு, தும்பி முதலியவைகளையும்; குரு ஐயறிவுடையவனாதலால் தேவர், மனுஷ்யர், மிருகம், பக்ஷி, பாம்பு இவை முதலியவைகளையும் சொல்லவும். தொட்டதை அறிகிற சக்திமாத்திர மிருப்பதால் விருக்ஷங்களை ஓரறிவென்றும்; தொட்டதை யறிவதும், இரஸத்தைக் கிரகிப்பதுமான குணங்கள்மாத்திர மிருப்பதால் முத்துச்சிப்பி, கிளிஞ்சில் முதலானவைகளை ஈரறிவென்றும்; இரஸத்தைக் கிரகிப்பது, தொட்டாலறிவது, ரூபத்தைப்பார்ப்பது முதலான குணங்கள் மாத்திர மிருப்பதால் மூட்டுப்பூச்சி, கறையான் முதலானவைகளை மூவறிவென்றும்; இரஸத்தைக் கிரகிப்பது, தொட்டாலறிவது, ரூபத்தைப் பார்ப்பது, வாசனை கிரகிப்பது முதலான குணங்கள்மாத்திர மிருப்பதால் வண்டு, தும்பி முதலானவைகளை நாலறிவென்றும்; இரஸத்தைக் கிரகிப்பது, தொட்டாலறிவது, ரூபத்தைப் பார்ப்பது, வாசனை கிரகிப்பது, சப்தத்தை யறிவது முதலான பஞ்சபூதங்களின் குணங்கள் யாவு மிருப்பதால் தேவர், மனுஷ்யர், மிருகம், பக்ஷி, உரகம் முதலானவைகளை ஐயறிவென்றும் இக்கிரந்தகர்த்தர் கூறினர்.

தேஹோ ஜீவஸ்ஸிதோ ஜிஹ்வா புதோ நாஸேக்ஷணம் குஜ: |
ச்ரோத்ரம் ஸௌரேஸ்த்வேவம் ஹ்யவயவேசிதம் ||௭||

(என் + ள்) சரீரத்திற்குக் குருவும், நாவிற்குச் சுக்கிரனும், மூக்கிற்குப் புதனும், கண்ணிற்குச் செவ்வாயும், காதிற்குச் சனியும் அதிபதிகளாம்.

த்விபாச்சதுஷ்பாத்பஹுபாத் விஹகாஜாந்துகா: க்ரமாத் |
ஸத்த்வஸம்பேதகம் ஸாம்ஸ்வ பாதஹீநா நிநிஷிம்ஸேக ||௮||

யத்ஸக்தாங்கா ஸ்சவப்ரர்த்வ பஹுபாதாதாஹ்ருதா: |
ஸோயாஸ்ஸங்கா ஸ்சவப்ராத்ஸ்தயா வம்க்ரமேணோதிதா: ||௯||

(என் + ள்) ஜீவகோடிகளில் இருகாலுள்ளவை, நாற்காலுள்ளவை, பலகாலுள்ளவை, சிறகுள்ளவை, முழங்காலால் தவழ்தலுள்ளவை என ஐந்துவிதங்களாம். இவைகளில் மானிடர்கள் இருகாலுள்ளவர்கள்; மிருகம் முதலானவைகள் நாற்காலுள்ளவை

கள்; பக்ஷிகள் சிறகுள்ளவைகள்; பேன், மூட்டுப் பூச்சி இவை முதலானவைகள் பலகா லுள்ளவைகள்; ஓணான், பல்லி, உடும்பு இவை முதலானவைகள் முழங்காலால் நடப்பவைகள்; சங்கு, சிப்பி, பல்கறை, கிளிஞ்சில், நத்தை இவை முதலானவைகள் பாத மில்லாம லூர்கின்றவைகள்.

ம்ருகமீநௌ தத்ரபக்ஷி ராசீ ஸம்ப்ரோக்தௌ புரா |
தத்ர குக்குடயோநிஸ்ஸ்யாத் பௌமே காகோ யமே பவேத் ||கo||

(என் + ள்) மகரம், மீனம் ஆகிய இவைகளிரண்டும் பக்ஷி ராசிகளாம். அவ்விராசிகளிலொன்றில் செவ்வாயிருக்கில் கான் கோழியாம். சனியிருக்கில் கான்கோழி அல்லது காகமாம், இச் சாஸ்திரத்தில் பெரும்பான்மையாகக் கிரகங்களிருப்புக்கும் நோக் குக்கும் பலன் வித்தியாசமின்றிச் சொல்லியிருப்பதா லிவ்விடத்தி லும் மேற்கூறிய மகரமீனங்களைச் செவ்வாய், சனி பார்க்கினும் அதுவேயாம். இவ்விதியாகவே வருவனவற்றிற்கும் பொருள் கொள்க.

தத்ர ராசிஷ்வஸிதே ஹம்ஸஸ் ஸௌம்யே சுகஸ்ததா ஸ்ம்ருதஸ் |
வீக்ஷிதே வா ததா ப்ரோக்தா ஸ்ஸோமே மயூர ஸம்பவ: ||கக||

(என் + ள்) மேற்கூறிய மகர மீனங்களில் சுக்கிரனிருக்கில் பார்க்கில் ஹம்ஸம், புதனிருக்கில் கிளி, சந்திரனிருக்கில் மயில்.

தத்ர ராசிஷ்வர்க்கே கருடோ குரௌ ஸாரஸ: ஸ்ம்ருத: |
ராஹௌ வலிஸ்ததா ப்ரோக்தா: ஸ்ரீபதே ஹோரா விதாம்பத: ||கஉ||

(என் + ள்) மேற்கூறிய மகர மீனங்களில் சூரியனிருக்கில் பார்க்கில் கருடன். குருவிருக்கில் பார்க்கில், நாரை. இராகு விருக் கில் பார்க்கில் வலியான். இதைக் கருங்குருவி யென்றுஞ் சொல் வார்கள்.

குக்குடோ ஜ்ஞே ஸுக்ரே வ த்வாதயா: பரிகீர்த்திதா: ||கஉ௩||

(என் + ள்) மேற்கூறிய மகர மீனங்களில் புதனிருக்கில் பார்க்கில் கோழியென்றும், சுக்கிரனிருக்கில் பார்க்கில் ஆந்தை யென்றும் சிலர் பக்ஷமாம்.

அந்யராசிஷ்வப்யேஷு தத்ர ராஸ்யக்ஷஸம்பவ: ||கஈ||

(என் + ள்) மேற்கூறிய மகர மீனங்களைத் தவிர மற்றைய விராசிகளில் கிரகங்களிருக்கில் அல்லது பார்க்கில் அந்தந்த இரா

சிகளின் நிறமொத்த பக்ஷிகளையும், குணமொத்த பக்ஷிகளையும் சொல்லவும். இருந்த கிரகம், பார்த்த கிரகம் இவர்கள் நிறமும் குணமுமுள்ள பக்ஷிகளெனினும் பொருந்தும்.

ஸௌம்யேஷு ஸௌம்யா ஜாயந்தே க்ரூரா: க்ரூரவசாத்ததா: ||

(என்+ள்) மேற்கூறிய மகர மீனங்களைத் தவிர மற்றைய விராசிகளில் சூரியாதி கிரகங்களிருக்கிற் பார்க்கில் அவரவர்களின் நிறங்களுடன் கூடின பக்ஷிகளென்று சொல்லியிருப்பதால் அதினும் சுபக்கிரகங்கள் மகர மீனங்களைத் தவிர மற்றைய விராசிகளிலிருக்கிற் பார்க்கில் நல்ல அழகுள்ள பக்ஷிகளும், நல்ல குணத்தோடு கூடின பக்ஷிகளுமாம். பாபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் பார்க்க குரூபமான பக்ஷிகளும், துஷ்டகுணத்தோடு கூடின பக்ஷிகளுமாம்.

உச்சராஸ்யுதயவேளாயாம் த்ருஷ்டவாரே த்ருஷ்டிசிந்தனம் ||௧௪||
உத்யானே ஸ்திதராஜா சேத் ஸ்வக்ஷேத்ரே ஸம்ஸ்திதே |
ராஜாஸ்ரிதாஸ்து ஸௌம்யே வீக்ஷிதாஸ்து ஹைஹயா: ||௧௫||

குஜராசிஸமாயுக்தே த்ருஷ்டே வா ஸமகாந்விதே |
கம்ஸகாரா: குலாலாஸ்ச சக்ரீ சில்பின: குஜே ||௧௬||

ஸம்புத்தே யாதவா வணிஜ: ஸ்பர்சிநஸ்சித்ரகாரிண: |
வைத்யஜ்ஞஸ்ஸகவிர்வித்வான் ஷஷ்டி: குருஹீனே நாப்யுஹஸ்ததா ||௧௭||

பாபத்ருஷ்டே யவாயுக்தே தஸ்ய ப்ரயோக்தவவின: |
தம்புக்தே தாவணீராணாம் ஸம்கரஸ்ய நிஹோமினோ நா: ||௧௮||

ஸ்வராசிமாநாம் வேடநாம் விசேஷஹமஹோஜிசேஸ |
சந்த்ரஸ்ய ஹிஷி ஜாஜ்ஞஸ்ய வெஸ்யாவோரமணாஸ்ய தா: ||௧௯||

ராஹோமரஜவர்ஜ தக்ஷரா: வரிகீர்த்திதா: |
ஸிதே தத்தம் தவாயஸ்யாக பாயே தத்தத்ஸ்யா ||௨௦||

கவிதாயிஷ்ணெவிஜ்ஞாஸ் சந்த்ரஜ்யோதிஷிகோஹவேஸ |
ஸநேஸ்தரா த்ருஷ்டிர்வைராக்தா ராஹோர்ஸ்வஸம்ஸாயின: ||௨௧||

ஸம்புத்தேர்நட: காரா: சந்த்ரநிஸிநடாஸ்யா |
சமணீதாளக்கிரஹாஹீ ஸாக்ரஸ்யவரிகீர்த்திதா: ||௨௨||

ஸ்வோச்சத்ரவிஶேஷோக்தி ஸ்தாநஸங்க்ஷாநஜஸ்ய து |
தத்ரராஶிவஶாஜ்ஜாதிஸ்தத்ரராஶ்யுக்தகர்மணி ||௨௩||
தத்ரராஶீஶவேடாநாம் பலேநைவ நிர்ணய: ||௨௪||

(என் + ள்) உச்சராசி உதயமாகவந்து அதில் சூரியனிருக்கினும் பார்க்கினும் மனுஷ்யசிந்தனையாம். இவ்விடத்தில் சூரியனைக் குறிப்பிட்டுச் சொல்லி யிருந்தாலும் சூரியன் முதல் இராகு வரையிலுள்ள எட்டுக் கிரகங்களும் தங்கள் தங்கள் உச்சஸ்தானங் களிலிருக்கினும் பார்க்கினும் மனுஷ்யசிந்தனையே யேற்படுகின்ற மையால் மேற்கூறிய விதி யெல்லாக் கிரகத்திற்கும் பொதுவாம். அதினும் சூரியாதி கிரகங்களுககுச் சிறப்புவிதி கூறுகின்றது.

(1) சூரியன் உச்சராசியிலிருக்கிற் பார்க்கில் இராஜா. ஸ்வ க்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் இராஜாவை ஆசிருதம் பண்ணி னவன்; அதாவது மந்திரி, பிரதானி முதலானவர்கள். மித்திர க்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் சேவகன். மேற்கூறிய விராசி கள் நீங்கலான மற்றைய விராசிகளிலிருக்கிற் பார்க்கில், இராஜா விடம் தேசசமாசாரங்களைச் சொல்லும் வேவுகாரர்.

(2) சந்திரன், உச்சராசியிலிருக்கிற் பார்க்கில் சங்கு செய் பவன். ஸ்வக்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் வைத்தியன், சோதி டன், இராத்திரியில் நாடகம் ஆடுகிறவன். இவர்கள் முதலாயுள்ள வர்களாம். மித்திர க்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் வர்ணப் பொடி செய்கிறவன். அன்னிய க்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் தோற்கருவி செய்பவர்.

(3) செவ்வாய், உச்சராசியிலிருக்கிற் பார்க்கில் கன்னன். ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் குயவன். மித்திரக்ஷேத்தி ரத்தி லிருக்கிற் பார்க்கில் வியாபாரி. அன்னியக்ஷேத்திரத்திலிருக் கிற் பார்க்கில் சித்திரவேலைக்காரன்.

(4) புதன், உச்சராசியிலிருக்கிற் பார்க்கில் யோகாப்பியா சம் செய்து தேர்ந்துள்ள தபசி. ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க் கில் யோகத்தை நாளடைவே அப்பியசிப்போன்; விடபுருஷன்; பக லில் நாட்டியமாடுபவன் முதலியவர்களாம். மித்திரக்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் யோகசாஸ்திரங்களைப் படிப்போனும். அன் னியக்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் தபசிகளுக்குப் பணிவிடை

செய்யு மவர்களாம். (புதனுக்குத் தபசி முதலானவர்களென்று சொன்னவைகளைக் காஷாயம் தரித்த மடாதிபதிகளெனினும் பொருந்தும்.)

(5) குரு உச்சராசியி லிருக்கிற் பார்க்கில் வேதசாஸ்திர சம்பன்னனான பிராமணன். ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் தர்க்கசாஸ்திரம் தெரிந்தவனும் வாசாலகனுமாம். மித்திரக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் பரிசாரகம் செய்கிற பிராமணன். அன்னியக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் ஜாதியில் நின்றும் தள்ளுபட்டவனான பிராமணன்.

(6) சுக்கிரன், உச்சராசியிலிருக்கிற் பார்க்கில் சூத்திரஜாதியானவனும் வெகு கிராமாதிகாரனுமாம். ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் அச்சாதியோரும் அவருக்குக் கீழ்ப்பட்டுக் கப்பங் கட்டுவோருமாம். (தவிரவும்) சேணியன், முத்துவியாபாரி, அவை போன்ற பொடிகள் விற்பவன் இவர் முதலானவர்களாம். மித்திரக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் சூத்திரசாதியானவனும் அடப்பக்காரனுமாம். அன்னியக்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் அச்சாதியோனான அறிக்கைக் காரனும்.

(7) சனி உச்சராசியி லிருக்கிற் பார்க்கில், சூத்திர ஜாதிக்குக் கீழ்ப்பட்டவனும், நீசனுக்கு மேல்பட்டவனுமானவன். ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கிற் பார்க்கில் மரம் வெட்டிப் பிழைப்பவன்; மிகுதியும் மீனைத் தின்பவனாகிய கடையன்.

(8) இராகு உச்சராசியி லிருக்கிற் பார்க்கில், சனிக்குச் சொல்லிய சங்கராஜாதிகளையும்; ஸ்வக்ஷேத்திரத்தி லிருக்கிற் பார்க்கில் விஷத்தினாற் கொல்லும் புலயன், திருட்டுத்தொழிலுடைய கள்ளன், கட்டியங் கூறுகிறவன் இவர்கள் முதலானஜாதிகளையும் சொல்வது. மித்திரக்ஷேத்திரம் அன்னியக்ஷேத்திர மிவைகளி லிருக்கிற் பார்க்கில் சனிக்குச் சொல்லியவைகளையே சொல்வதாம்.

எந்த கிரகம் எந்த இராசியிலிருக்கின்றனவோ, அந்த இராசிக்குச் சொன்ன ஜாதியையும், அந்த கிரகத்திற்குச் சொன்ன ஜாதியையும் அறிந்து, அதில் எது பலத்துடன் கூடினதோ அதைச் சொல்க. கிரகங்களுக்குள் எந்தக் கிரகம் பலவானோ அவனுக்குச் சொன்ன திக்கே நஷ்ட வஸ்துக்கள் சேருந் திக்காம், சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்தி லிருக்கினும், சங்குசெய்பவரேயாம்.

கேதுவுக்கு ஒரு ஜாதியரையும் தொழிலாளிகளையும் சொல்லாததால் இராகுவுக்குச் சொன்ன தொழிலாளிகளையும் ஜாதியார்களையுஞ் சொல்வதாம். சேய்க்குக் கன்னுரென்றதைக் கொல்லன், தச்சன், ஸ்தபதி, தட்டான் என ஐவிதத் தொழிலாளிகளுக்கும் பொதுவாகக்கொள்க.

சூரியன் முதற் சனிவரையில் கிரகங்களுக்குச் சொன்ன ஜாதி பேதத்தாலும், யஜமானன் கீழ்ப்படிந்துளோரென்ற பேதத்தாலும் பிரயோஜனம் யாதோவெனில் நஷ்டவஸ்துக்களின் பிரச்னையில் இன்ன ஜாதியர்களிடம் இவ்வஸ்து இருக்கிறதென்றும் அல்லது அவர்கள் மூலமாய் வெளியாகுமென்றுஞ் சொல்வதற்கு மிகவுபயோகமாம். (தவிரவும்) நான் யாரையடுத்தால் ஜீவிப்பேன், எனக்கு எந்த ஜாதியர்களால் நன்மையுண்டு, அல்லது எனக்கு விரோதிகள் யார், எவர்களால் கெடுதியுண்டென்று கேட்கும் சிந்தனை விஷயமான பிரச்னையில் இன்னரால் சாதகம் பாதகமென்பவைகளை நிர்ணயிக்கத் தக்க ஆதாரமாம்.

மேஷராஶௌ ஸ்திதே ஸூர்யே மேஷே சாந்த்ரே ச நீக்ஷிணஃ ॥ ௨௪ ॥
தஸ்மிந் கேது ஸ்திதே வக்ரே அஜம் ஶஶம் புதே ।
அஶ்வோ குரௌ ப்ருகௌ கோ ச மாரவத்ஸ்து ஶநைஶ்சரம் ॥ ௨௫ ॥
மஹிஷீ ஸ்யாத் கவயம் ராஹௌ மாரவத் ஸ்ம்ருதே ॥ ௨௬ ॥

(என் + ள்.) சூரியன் மேஷத்திலிருக்கில் புலி மந்தி இவைகளாம், சந்திர னிருக்கில் எருது, செவ்வா யிருக்கில் ஆடு, புதன் இருக்கில் முயல், குருவிருக்கில் குதிரை, சுக்கிரனிருக்கில் பசு, சனி இருக்கில் எருமை, இராகு விருக்கில் கவயமென்ற ஓர்வித மிருகம். (கவயமென்றது காட்டுப்பசுவாம்.)

வ்ருஷபஸ்தே ஸஹஸ்ராம்ஶௌ ஶரபஶ் சந்த்ரகே பஶுஃ ॥
பௌமே ம்ருகோ புதே வாநரோ அஶ்வஸ் ஸுரேட்யே கோ ப்ருகௌ ஸ்ம்ருதே ।
குருத்ராஸ்ஸ்ரஃ ப்ராக்தோ மஹிஷஶ் ஶநிராஹ்வயோஃ ॥ ௨௭ ॥

(என் + ள்.) விருஷபத்தில் சூரியனிருக்கில் சரபம், சந்திரனிருக்கில் பசு, செவ்வா யிருக்கில் மான், புதனிருக்கில் குரங்கு, குரு விருக்கில் குதிரை, சுக்கிர னிருக்கினும் பசுவேயாம், சனி, இராகு இவர்களிருக்கில் எருமை.

[illegible] |
[illegible] ‖௨௮‖
[illegible] |
[illegible] ‖௨௯‖

(என் + ள்.) கடகத்தில் செவ்வாயிருக்கில் கழுதை, மகரத்தி லிருக்கில் எருமை, மீனத்தி லிருக்கில் எருது, துலாத்திலிருக் கில் நரி, மிதுனத்தி லிருக்கில் கிரி, கன்னி, கும்பம் இவைகளி லிருக்கில் நாய் முதலான சூரத் தன்மையுள்ள மிருகங்களாம். சூரியன், சனி இவர்களுக்கும் மேற்கூறியவைகளைப்போல் யோஜித்துச் சொல்க.

[illegible] |
[illegible] ‖

(என் + ள்.) செவ்வாய் சிம்மத்திலிருக்கில் புலி, சூரியன் சந்திரனிவர்களிருக்கில் சிங்கம், சுக்கிரனிருக்கில் நாய், புதனிருக்கில் குரங்கு, இதிற்கூறுதொழிந்த குரு, சனி, இராகு இவர்கட்கு அவரவர்களுக்குரிய மிருகங்களைச் சொல்வது.

[illegible] |
[illegible] ‖
[illegible] ‖௩௰‖

(என் + ள்.) துலாத்தில் சுக்கிர னிருக்கில் பசுவின் கன்றும், சந்திரனிருக்கில் பசுவாம், தனுசில் சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இவர்கள் தனியாகவாவது ஒன்றாகவாவ திருக்கில் குதிரையாம், சூரியன், சனி இவர்கள் தனித்தாவது சேர்ந்தாவதிருக்கில் யானையாம்.

[illegible] ‖௩௨‖
[illegible] |
[illegible] ‖௩௩‖
[illegible] |
[illegible] ‖௩௪‖

(என் + ள்.) முற்கூறிய தனுசில் இராகுவிருக்கில் எருமை, புதன், குரு இவர்கள் தனியாகவாவது சேர்ந்தாகவாவ திருக்கில்

குரங்கு, சுக்கிரனிருந்து சந்திரனால் பார்க்கப்பட்டால் பாலுள்ள பசுவாம் அல்லது பால்போன்ற வெண்மையான பசுவாம், சூரியனாவது, குருவாவது பார்க்கில் சினையுடன் கூடிய பசுவாம், சனி, இராகு இவர்கள் பார்க்கில் மலட்டுப் பசுவாம், செவ்வாய் தனுசிலிருக்கில் வரட்டுப்பசு, புதன் மேற்கூறிய ஸ்தானத்தைப் பார்க்கில் பால்குடி மறந்த பசுவின்கன்றும்.

ஜீவே கும்பராஸிஸ்தே தத்த்ரிகோணே புதஸ்ஸிதே ।
தத்ரஸ்தே சந்த்ரஸ்திதே வாபி கஜம் ராஜா ஹ்யதஃ ॥ ௧௫ ॥
ஜீவே ஸ்திதே தநுர்மீநே ராஜாநம் வ்யவஹாரகம் ஜ்ஞாநம் ॥
ஜீவே நான்யத்ர வாக்யேஷ்வதி பூர்வகம் ॥ ௧௬ ॥

(என் + ள்.) குரு கும்பராசியிலிருந்து அவருக்குத் திரிகோணராசிகளில் புதன், சுக்கிரன் இவர்கள் தனியாகவாவது சேர்ந்தாகவாவ திருக்கில் யானையாம், சந்திர னிருக்கில் இராஜாவாம். குரு, தனுசு, மீனம் இவைகளிலிருக்கில் குரங்காம்.

மேஷஸ்தே குருஸூர்யேந்து ஸிதேஷு வாணிஜ்யம் வஸ்த்ரஜீவிதம் ॥
ஸந்தே ஸிம்ஹஸ்தே ஶத்ருசிந்தநம் வ்ருஷபஸ்தே மஹிஷசிந்தநம் ॥ ௧௭ ॥
வ்ருஷபஸ்தே மஹிஷீம் வக்தி துலாவ்ருஶ்சிகயோர் ததா ॥
மேஷே மந்தே து தநயே ஶ்ரேஷ்டம் ரோகமாஹுர் ஸதா ॥ ௧௮ ॥
ஜ்ஞாதவ்யம் ஸர்வக்ரஹாணாம் ஜீவஸஞ்ஜ்ஞாநிர்ணயோ புதைஃ ॥ ௧௮௨ ॥

இதி ஜைமிநிவிரசித ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
ஜீவஸஞ்ஜ்ஞாநிரூபணம் நாம ஷஷ்டகாண்டம்.

(என் + ள்.) குரு, சுக்கிரன், சூரியன், சந்திரன் ஆகிய இந்நால்வர்களும் மேஷ ராசியில் தனியாக வாவது அல்லது ஒன்றாக வாவதிருக்கில் வியாபாரம் செய்பவனென்றும், வஸ்திரம் விற்பவனென்றும் சொல்வதாம். சனி சிம்மத்திலிருக்கில் சத்துருசிந்தனை, விருஷபத்திலிருக்கில் எருமை மாட்டு விஷயமான சிந்தனை, துலாம், விருச்சிகம் ஆகிய இவைகளில் சனி இருக்கில் குயவன் பேரிற்சிந்தனை, மேஷத்தில் சனி இருக்கில் மிகவும் துக்ககரமாயும் மரணத்தைத் தருவதுமான வியாதியின் விஷயமான சிந்தனை. இவ்விதமாகவே மற்றக் கிரகங்களுக்கும் யூகித்துச் சொல்லவும்.

ஜீவகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

நஷ்டத்ரவ்யகாண்டப்ராரம்ப:.

துலோதயே க்ரியாரூடே நஷ்டவித்தம் ந ஸம்ஶய: |
விபரீதே ந நஷ்டாப்தி வ்ருஷாரூடேऽலிஹோதயே ॥௧॥
நஷ்டவித்தம் ஸமாயாதி விபரீதே து விவர்ஜய: |
சாபாரூடே நஷ்டவித்தம் ஸம்ப்ராப்தி த்ருதீயோதயே ॥௨॥
விபரீதே ந வித்தஸ்யாப்தி: கர்க்யாரூடே ம்ருகோதயே |
வித்தஸ்யாப்திர்விபரீதே து நவித்தாப்தி ந ஸம்ஶய: ॥௩॥
ஸிம்ஹோதயே கடாரூடே நஷ்டவித்தஸ்ஸமுவிஶ்யதி |
விபரீதே ந வித்தஸ்யாப்திர்ஜஷாரூடேऽங்கநோதயே ॥௪॥
நஷ்டவித்தஸ்ய வ்ருத்தாந்தே த்ருஷ்டாத்ருஷ்டே நிரூபயேத் ॥௫॥

(என்+ள்.) (1) துலாம் உதயமாகி மேஷம் ஆரூடமாக வரில் நஷ்டவஸ்துவரும்; மேஷம் உதயமாகித் துலாம் ஆரூடமாக வரில் நஷ்டவஸ்து வராது.

(2) விருஷபம் ஆரூடமாகி விருச்சிக முதயமாக வரில் நஷ்டவஸ்துவரும்; விருஷபம் உதயமாகி விருச்சிகம் ஆரூடமாக வரில் நஷ்டவஸ்து வராது.

(3) தனுசு ஆரூடமாகி மிதுன முதயமாகவரில் நஷ்டவஸ்து வரும்; மிதுனம் ஆரூடமாகித் தனுசு உதயமாகவரில் நஷ்டவஸ்து வராது.

(4) கடகம் ஆரூடமாகி மகர முதயமாகவரில் நஷ்ட வஸ்து வரும்; மகரம் ஆரூடமாகிக் கடக முதயமாகவரில் நஷ்டவஸ்து வராது.

(5) சிம்ம முதயமாகிக் கும்பம் ஆரூடமாகவரில் நஷ்டவஸ்து வரும்; கும்ப முதயமாகிச் சிம்மம் ஆரூடமாகவரில் நஷ்டவஸ்து வராது.

(6) மீனம் ஆரூடமாகிக் கன்னி உதயமாகவரில் நஷ்டவஸ்து வரும்; கன்னி ஆரூடமாகி மீன முதயமாக வரில் நஷ்ட வஸ்து வராது. (இப்படி உதயாரூடங்களினால் நஷ்ட வஸ்துக்கள் வரும் வராதென்பதை நிர்ணயிக்கவும்)

[illegible] ‖௫‖
[illegible] ‖௫உ‖

(என்+ள்.) ஸ்திர ராசி உதயமாகவாவது ஆரூடமாகவாவது சத்திரமாகவாவது வரில் மரண மில்லை. நஷ்டவஸ்து கெடாமல் வரும் வியாதி நிவர்த்தியாகாது.

[illegible] ‖௬‖
[illegible] ‖௬உ‖

(என்+ள்.) உபயராசி உதயமாகவாவது ஆரூடமாகவாவது சத்திரமாகவாவதுவரில் ரோகம் தீராது; நஷ்டவஸ்து வராது; சத்துரு சமாதானமாகான், கல்வி அல்பமாகும்.

[illegible] ‖௭‖
[illegible] ।
[illegible] ‖௮‖

(என்+ள்.) சரராசி உதயமாகவாவது, ஆரூடமாகவாவது, சத்திரமாகவாவது வரில் நஷ்டவஸ்து வராது; வியாதி நிவர்த்தியாகும்; சத்துரு. சமாதானமுண்டாகும்; சேனை வரத்துண்டாகும், சந்தேகமில்லை.

[illegible] ।
[illegible] ‖௯‖

(என்+ள்.) சூரியனல் விடுபட்ட இராசி உதயமாக வரில் சர்வ காரியங்களும் சித்தியாம், சூரியனிருக்கிற இராசி உதயமாக வரில் காரியங்களனுகூலமாகாது, சூரியனிருக்கப்போகிற இராசி உதயமாகவரின் வெகு தாமசத்தின்பேரிலும் வெகு பிரயாசத்தின் பேரிலும் காரியானுகூலமாம். ஊர்த்துவமுக மதோமுக திரியங்முக மென்ற இராசிகளின் பேதங்களைப்பலதீபிகை 1-வது அத்தியாயம் 8-வது சுலோகத்திற் காண்க.

[illegible] ।
[illegible] ‖௧௦‖

(என்+ள்.) கிரகங்களின் பலாபலத்துக்குத் தக்கதான சுபா சுப பலன்களைச் சொல்லவும். (எப்படி யெனில்) சரஸ்திரோபய

ராசிகள் சுபக்கிரகங்களுடனிருக்கில் சர்வகாரியங்களும் அனுகூலமாம், சுபக்கிரகங்களிருக்கில் அனுகூலமெனவே மேற்கூறிய இராசிகள் பாபக் கிரகங்களுடன் இருக்கில் சர்வ காரியங்களும் கெடுதலாம்.

[illegible]
[illegible] ||௧௧||

(என் + ள்.) பிரச்நகாலத்தில் உதயாரூட சத்திரங்களில் பாபிகள் அஸ்தங்கதமாக விருக்கில் களவு போனதைப் பற்றிய கேள்வியாம். மேற்கூறிய ஸ்தானங்களில் சுபர்களிருக்கில் திருட்டானவஸ்து அகப்படும், உதயாரூட சத்திரங்களில் என்றதை உதயத்திலாவது ஆரூடத்திலாவது சத்திரத்திலாவது எனப் பொருள் கொள்ளவும்.

[illegible]
[illegible] ||௧௨||
[illegible]
[illegible] ||௧௩||

(என் + ள்.) உதயராசிக்கு ௩-௬-௯-௧௨-ம் இராசிகள் ஆரூடமாகவரில் முன்னடந்ததின் விஷயமான பிரச்நையென்றும் ௪-௭-௧௦-ம் இராசிகள் ஆரூடமாகவரில் இப்போது நடந்துகொண்டிருக்கிற விஷயமான பிரச்நையென்றும் ௫-௮-௨-௧௧-ம் இராசிகள் ஆரூடமாகவரில் இனிமேல் நடக்கப்போகிற விஷயமான பிரச்நையென்றும் அவையவைகளுக்குச் சொல்லிய வருஷ மாச தினங்களிற் காரியசாதகமென்றுஞ் சொல்க.

[illegible]
[illegible] ||௧௪||

(என் + ள்.) உதயாரூட சத்திரங்களிலாவது அவைகளுக்கு ௫-௯ களிலேயாவது சுபக்கிரகங்களிருக்கில் நஷ்டமானபொருள் வரும்; பாபக்கிரகங்களிருக்கில் நஷ்டமானபொருள் வராது.

[illegible]
[illegible] ||௧௫||

(என் + ள்.) உதயாரூட சத்திரங்கட்கு ௮-ம் இடத்தில் பாபிகளும் ௫-ல் சுபர்களும் இருக்கில் நஷ்டமான பொருளை ஒருவன் தானே கொண்டுவந்து கொடுப்பான்.

ப்ரஶ்நகாலே ஶக்ரசாபதூமாணுபரிவேஷகை: |
த்ருஷ்டே நஷ்டம் ந பவதி தத்ராஶாஸு திஷ்டதி ||௧௬||

(என் + ள்.) பிரச்ந காலத்தில் உதயாரூடச் சத்திரங்களை இந்திர தனுசு, தூமம், நுட்பம், பரிவேடம் இவர்கள் பார்த்தால் நஷ்ட வஸ்து போகாது. அவர்கள் தத்காலத்தில் எந்த இராசிகளி லிருக்கின்றார்களோ, அந்த இராசிக்கு எந்தத் திக்கோ அந்தத்திக்கில் நஷ்டவஸ்துக்க ளிருக்கின்றன. இக்கிரந்தத்தில் இந்திரதனுசு, தூமம், நுட்பம், பரிவேடம் இவைகளை இன்ன இராசியில் போடவேண்டுமென்றாவது, இன்ன திக்கில் ஸ்தாபிக்கவேண்டு மென்றாவது சொல்லாமையால் ஸ்புடரீதியாக மேற்கூறிய நாலு கிரகங்களையும் அந்தந்த இராசிகளில் ஸ்தாபித்துப் பலன் சொல்லவும்.

ப்ருஷ்டோதயே ஶஶாங்கஸ்தே நஷ்டத்ரவ்யம் ஸமாப்நுதி |
ஶநித்ருஷ்டே நஷ்டமேவ ந நஷ்டம் வக்ரே தஶமகேந்த்ரகே ||௧௭||

(என் + ள்.) சந்திரன் பிருஷ்டோதய இராசியி லிருக்கில் நஷ்டமான திரவியம்வரும்; அச்சந்திரன் சனியினால் பார்க்கப்பட்டால் நஷ்டமான திரவியம் வராது. சந்திரனுக்கு ௧௦-ல் செவ்வாயிருக்கில் நஷ்டவஸ்து போகாது.

ப்ருஹஸ்பதௌ லக்நயுதே ஸ்வர்ணம் நஷ்டம் நாப்நோதி நிஶ்சிதம் |
ஸப்தமே சுக்ரே தத்ருஷ்டே ரஜதம் நஷ்டம் ந பவதி த்ருவம் ||௧௮||
தஶமே க்ஷ்மாஜே த்ருஷ்டே வா தாம்ரம் நஷ்டம் ந வித்யதே |
ஸப்தஸ்தே ஶநௌ த்ருஷ்டே லோஹம் நஷ்டம் ந ஜாயதே ||௧௯||

(என் + ள்.) உதயத்தில் குரு விருக்கில் பார்க்கில் நஷ்டமான வஸ்து ஸ்வர்ணம், நஷ்டமில்லை வரும். ௪-ம் இடத்தில் சுக்கிரனிருக்கில்பார்க்கில் நஷ்டமான வஸ்து வெள்ளி, நஷ்டமில்லை. ௧௦-ம் இடத்தில் செவ்வாயிருக்கிற் பார்க்கில் தாம்பரம், நஷ்டமில்லை. ௭-ம் இடத்தில் சனியிருக்கிற் பார்க்கில் இரும்பு, நஷ்டமில்லை.

பாபோதயே த்ர்யாம் நஷ்டம் நாப்நோதி சந்த்ரவத் தத்ஸ்த்யுதே |
காம்ஸ்யம் நஷ்டம் பவதி ஸிம்ஹஸம்ஸ்தே த்ருஷ்டே ||௨௦||
ஶுக்ரகேந்த்ரஸ்தே ஸௌம்யே நஷ்டம் ந ஜாயதே ||௨௧||

(என் + ள்.) உதயத்தில் புதன் இருக்கிற் பார்க்கில் நஷ்டமான வஸ்து தரா, நஷ்டமில்லை. ௪-ம் இடத்தில் சந்திரனிருக்கிற் பார்க்கில் நஷ்டமானவஸ்து வெண்கலம், நஷ்டமில்லை. ௧௦-ம் இடத்தில் சூரியனிருக்கிற் பார்க்கில் நஷ்டமான வஸ்து பித்தளை, நஷ்டமில்லை. ௭-ம் இடத்தில் இராகு விருக்கிற் பார்க்கில் நஷ்டமான வஸ்து ஈயம், நஷ்டமில்லை.

[illegible] ||௨௧||
[illegible]
[illegible] ||௨௨||
[illegible]
[illegible] ||௨௩||

(என் + ள்.) ௧௦-ம் இடத்தில் பாபக்கிரகங்களிருக்கில் நஷ்டமான வஸ்து நாற்காலுள்ளவை, அவை நஷ்டமாகா. கிடைக்கும் நாற்கா லிராசி உதயமாகி அதி லிராகு இருக்கிற் பார்க்கில் நஷ்டவஸ்து பலகாலுள்ளவை, பக்ஷிராசி உதயமாகி அதில் இராகு விருக்கிற் பார்க்கில் நஷ்டவஸ்து பக்ஷியாம், உதயத்திற்கு ௪-ம் இடத்தில் இராகு இருக்கிற் பார்க்கில் நஷ்டவஸ்து இருகாலுள்ளதாம். இவ்விதங்களாக நஷ்ட வஸ்துக்களைச் சொல்வதோடு அவைகள் ஒருவர் தடைக்குள்ளகப்பட்டிருக்கின்றன வென்றுஞ் சொல்லப்படுகின்றன.

[illegible]
[illegible] ||௨௪||

(என் + ள்.) கடகம் விருச்சிகம் இவைகள் உதய விராசிகளாகில் நஷ்டமான பொருள் வீட்டிற்குள் மகரம், மீனம் இவைகள் உதயவிராசிகளாகில் வீட்டின் கொடுங்கைக்குள்.

[illegible]
[illegible] ||௨௫||
[illegible]
[illegible] ||௨௬||

(என் + ள்.) சூரியனுக்குக் காடிப்பானை, சந்திரனுக்கு உப்புப்பாண்டம், செவ்வாய்க்குக் கலசம், புதனுக்குக் குடம், வியாழனு

க்குச் சிவப்பாகிய குடம், சுக்கிரனுக்கு நீர்ச்சருவம், சனிக்கு ஓட்டைப்பானை. இப்படிக் கிரகங்களைக்கொண்டு வீட்டில் நஷ்டவஸ்துக்களிருக்குமிடஞ் சொல்க.

सूर्यज्ञौ नष्टये भित्तौ चन्द्रशुक्रौ तथा जले ।
कुजोदये विटंके तथा गुरुः रक्तघटे भुवि वा ॥२७॥
शनिश्चुल्ल्यां राहुरन्ध्रे नष्टस्थानं विचिन्तयेत् ॥२७½॥

(என் + ள்.) உதயத்தில் சூரியன் புதன் ஆகிய இவர்களிருக்கில் நஷ்டவஸ்து சுவரில், சந்திரன் சுக்கிரன் ஆகிய இவர்களிருக்கில் ஜலத்தில், அங்காரகனிருக்கில் திண்ணைச் சுவரில், குருவிருக்கில் சிவப்பாகிய குடத்தில், சனி யிருக்கில் அடுப்பில், இராகுவிருக்கில் பொந்தில். இவ்விதங்களாகக் கிரகங்களைக்கொண்டு நஷ்டவஸ்துக்கள் சேருமிடத்தைச் சொல்க.

ग्रामे वीथ्यां वने चैव वाट्यां खट्वा देवालये ॥२८॥
धान्यागारे गृहे वापि संकरे धान्यपेटिके ।
शून्यागारे जले वापि तटाके जलसंकुले ॥२९॥
क्षेत्रे कार्पासवृक्षे च तृणवत्संज्ञदेशके ।
दूरारण्ये वाजिशालायां कुटीरे रजकस्थले ॥३०॥
घटे च घृतगेहे च रत्नाकरे तथा वने ।
देवालये गृहे जले अश्वयुगादिषु क्रमात् ॥३१॥
वंशे तस्करसंस्थाने देवसूक्ष्मादिकासु यतिः ॥३१½॥

(என் + ள்) நக்ஷத்திரங்களின் உதயத்தைக்கொண்டு நஷ்டவஸ்துக்களிருப்பிடங்கள்சொல்லப்படுகின்றன. அசுவதிக்கு ஊர், பரணிக்கு வீதி, கார்த்திகைக்குக்காடு, ரோகிணிக்குக் காடி, மிருகசீர்ஷத்திற்குக் கட்டில், திருவாதிரைக்குத் தேவாலயம், புனர்பூசத்திற்கு நெல்க்கொட்டி யிருக்குமிடம், பூசத்திற்கு வீடு, ஆயிலியத்திற்குக்குப்பை, மகத்திற்குநெல்லிருக்கும் பெட்டி, பூரத்திற்குப் பாழ்வீடு, உத்திரத்திற்கு ஜலம், ஹஸ்தத்திற்குக் குளம், சித்திரைக்கு ஜலக் கரை, சுவாதிக்கு வயல், விசாகத்திற்குப் பருத்திச்செடிக ளடர்ந்துள்ள இடம், அனுஷத்திற்குப் புல்லுள்ள இடம், கேட்டைக்கு ஜலமில்லாத காடு, மூலத்திற்குக் குதிரை லாயம், பூராடத்திற்குக் கூரை, உத்திராடத்திற்கு வண்ணான்துறை, திருவோணத்திற்கு உயுத்தஞ்செய்யுமிடம், அவிட்டத்திற்குச் செக்கு

உள்ள இடம், சதயத்திற்குத் தெரு, பூரட்டாதிக்குத் தென்கிழக்கி லுள்ள வீடு, உத்திரட்டாதிக்குச் சேறு, ரேவதிக்குப் பூந்தோட்டம். இவ்விதியைக்கொண்டு நஷ்ட வஸ்துக்க ளிருப்பிடத்தைச் சொல்க.

𑌪𑍁𑌂𑌰𑌾𑌶𑍌 𑌪𑍁𑌂𑌗𑍍𑌰𑌹𑍈𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑌸𑍍𑌕𑌰𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌾𑌶𑍌 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌗𑍍𑌰𑌹𑍈𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌕𑌨𑍍𑌯𑌕𑌾 𑌸𑍍𑌤𑍇𑌯𑌕𑌾𑌰𑌿𑌣𑍀 ॥௩௨அ॥

(என்+ள்) புருஷராசியைப் புருஷகிரகங்கள் பார்க்கில் புருஷன் திருடினனென்றும், ஸ்திரீ ராசியை ஸ்திரீகிரகங்கள் பார்க்கில் ஸ்திரீ திருடினளென்றும், நிதானிப்பதாம். 33-34-வது சுலோகத்தில் ஓஜராசியில் புருஷகிரகமிருக்கில் புருஷனென்றும் ஸ்திரீராசியில் ஸ்திரீ கிரகமிருக்கில் ஸ்திரீயென்றும் சொல்லியிருப்பதால் புருஷராசி வேறு, ஓஜராசி வேறு, ஸ்திரீராசி வேறு, சமவிராசி வேறு என்று சந்தேகிக்காமல் புருஷராசியே, ஓஜ ராசியென்றும் ஸ்திரீராசியே, சம இராசியென்றும் பொருள் கொள்க.

𑌉𑌦𑌯𑍇 𑌹𑍍𑌯𑍋𑌜𑌰𑌾𑌶𑌿𑌸𑍍𑌥𑍇 𑌪𑍁𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌾𑌶𑍍𑌯𑍁𑌦𑌯𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌯𑌶𑍍𑌚𑍌𑌰𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌉𑌦𑌯𑌾𑌰𑍂𑌢𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌬𑌲𑌾𑌬𑌲𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂 ॥௩௪॥

(என்+ள்) ஒற்றை ராசி உதயமாகி அதில் புருஷகிரகமிருக்கில் திருடினவன் புருஷன், இரட்டை இராசி உதயமாகி அதில் ஸ்திரீ கிரகமிருக்கில் திருடினவள் ஸ்திரீ. இப்படிக்கு உதயாரூடங்களின் பலத்தை யறிந்து சொல்க.

𑌮𑍇𑌷𑌕𑌨𑍍𑌯𑌾𑌮𑌕𑌰𑍇𑌷𑍁 𑌨𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑍁𑌲𑌾𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌚𑌾𑌪𑌕𑍁𑌮𑍍𑌭𑍇𑌷𑍁 𑌨𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌸𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 ॥௩௫॥
𑌜𑍀𑌵𑌂 𑌵𑌿𑌨𑌾𑌨𑍍𑌯𑌖𑍇𑌟𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑍈𑌵 𑌚 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 ॥௩௫அ॥

(என்+ள்) உதயாரூடங்களுக்கு எ-ம் இடமானது மேஷம், கன்னி, மகரம் இந்த விராசிகளாக வரில் நஷ்டமான பொருள் வராது. துலாம், விருஷபம், தனுசு, கும்பம் ஆகிய இந்த விராசிகளாக வரில் நஷ்டமான பொருள் கெடாது வரும். குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் எ-ம் இடத்தி லிருக்கில் எந்தக் காரியமும் அனுகூலப்படாது. குருவிருக்கில் சர்வகாரியங்களும் சித்தியாம். இவர்கள் நோக்கினும் மேற்கூறிய பலங்களேயாம்.

[illegible] ||௩௬||
[illegible] ||௩௬௨||

(என் + ள்.) சந்திரனைச் சூரியாதி கிரகங்களுக்குள் யார் பார்க்கின்றார்களோ, அவர்களின் ரூபத்தைப்போலவே திருடர்க ளிருப்பார்கள். நஷ்டவஸ்துக்களின் நிறங்களும் கிரகங்களுக்குச் சொல்லிய நிறங்களே யாதலால் அவையெல்லாம் நன்று யறிந்து பலன் சொல்க.

[illegible] ||௩௭||
[illegible] ||௩௭௨||

(என் + ள்.) ஆரூடம் சத்திரம் இவைகளை எந்தக் கிரகங்கள் பார்க்கின்றனவோ, அவைகளுக்கு எந்தத்திக்கு விதிக்கப்படுகின்றனவோ, அத்திசையே நஷ்ட வஸ்துக்கள் சேருந் திசையாம்.

[illegible] ||
[illegible] ||௩௮௨||

(என் + ள்.) ஆரூடம் சத்திரம் இவைகளி லிருக்கின்ற கிரகங்களெவ்வளவோ அத்தொகைகளையும், அந்தக்கிரகங்களின் கிரணசங்கை யெவ்வளவோ அத்தொகைகளையும், அந்த இராசி அதிபதி அவ்விராசியைப் பார்க்கில், அக்கிரகத்தின் கிரணசங்கைகளையும், அதிக பலத்துடன் கூடிய கிரகம் அவ்விராசியைப் பார்க்கில் அதனுடைய கிரணங்களையும்சேர்த்து நஷ்டவஸ்துக்களின்கணக்கைக் கிரகங்களுடையவும் இராசிகளுடையவுமான பலா பலங்களுக்குத்தக்கபடி ஊகித்துச் சொல்க.

[illegible] ||௩௯||
[illegible] ||௩௯௨||

(என் + ள்.) மேஷம் முதல் மீனம் வரையிலுள்ள கஉ இராசிகளில் எந்த இராசியானது, அதிக பலத்துடன் கூடிய கிரகத்தினால் பார்க்கப்படுகிறதோ, அந்த விராசியின் கிரணத்துக்குத்தக்க எண்ணே நஷ்ட வஸ்துக்களின் எண்ணும், பலவானான கிரகத்தால் பார்க்கப்பட்ட இராசி, சரமாகில் அதே கணக்கென்றும், ஸ்திரமாகில், இரண்டுபங்கென்றும், உபயமாகில், மூன்று பங்கென்றும் சொல்க.

उदयाद्वृषपर्यन्तं तावद्वृषभादिकम् ॥௪௰॥
गणितात्राशिनाथो यो यत्रासावस्थितो भवेत् ।
तद्दिशायां स्थितं नष्टमिति ज्ञातव्यश्च विचक्षणैः ॥௪௧॥

(என்+ள்.) உதயம் முதல் விருஷபம் வரையெண்ணி அத் தொகைக்கு விருஷபம் முதற்கொண் டெண்ணவந்த இராசி எதுவோ, அவ்விராசி அதிபதி அச்சமயத்தில் எந்தத்திக்கிலிருக்கின்றானோ, அந்தத்திக்கே நஷ்ட வஸ்துக்கள் சேர்ந்திருக்கும் திக்காம்.

बलवत्खेटवशतो नष्टद्रव्यविनिर्णयम् ।
नष्टागमस्य चैवात्र कालनिर्णयमीरयेत् ॥௪௨॥

इति श्रीजैनमुनिविरचितज्ञानप्रदीपिकायां

नष्टद्रव्यनिरूपणं नाम षष्ठकाण्डः.

(என்+ள்.) இக்காண்டத்தில் நஷ்ட விஷயமாய் அநேக விதமாகச் சொல்லியிருந்தபோதிலும் சூரியாதி கிரகங்களுக்குள் யார் பலவானோ, அவனுக்குச் சொன்ன, நிறம், வடிவு, ஜாதி, ஆண், பெண், கிரண சங்கை, இவைகளால் திரவியத்தையும், சோரனையும் நிச்சயஞ் செய்தும், அவைகள் வரும் வராதென்பதை யூகித்தும், வருமாயின் அக்கிரகத்துக்குச் சொல்லிய வருஷ மாச தினங்களில் வருமென்றும் நிர்ணயஞ் செய்யவும்.

கிரகங்களின் வருஷாதி காலநிர்ணயங்களை ஸம்ஞாகாண்டத்தில் காண்க.

நஷ்டத்திரவியகாண்டம் முற்றிற்று.

ज्ञानप्रदीपिकायाम्.

उदयारूढसप्तमकाण्डप्रारम्भः.

षष्ठाष्टमव्यये क्रूरे सर्वकार्यं विनश्यति ।
गुरुवीक्षितयुक्ते वा सर्वकार्यं शुभं भवेत् ॥௧॥

(என்+ள்.) உதயம் ஆரூடம் இவைகட்கு உ-ச-ம் இடங்கள் சத்திரமாகவரில் எல்லாக் காரியங்களுங் கெடும். மேற்கூறிய இராசிகளில் குருவிருக்கில் பார்க்கில் எல்லாக்காரியங்களும் நன்மை

[illegible] |
[illegible] ||௨||

(என்+ள்.) உதயம் ஆரூடம் இவைகட்கு ௩-௧௧-ம் இடங்கள் சத்திரமாகி, அதில் குரு விருக்கில் பார்க்கில் நன்மை, பாவிகளிருக்கிற் பார்க்கில் தீமை.

[illegible] |
[illegible] ||௩||

(என்+ள்.) மேற்கூறிய ௩-௧௧-ம் இடங்களில் சுபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் எல்லாக் காரியங்களும் நன்மை, பாபக் கிரகங்களிருக்கிற் பார்க்கில் சர்வ காரியங்களும் தீமை, சுபக்கிரக, பாபக்கிரகங்கள் சேர்ந்திருக்கில், சுக துக்கங்களிரண்டுமாம்.

[illegible] |
[illegible] ||௪||

(என்+ள்.) உதயம் ஆரூடம் இவைகட்கு ௫-௯-ம் இடங்கள் சத்திரமாகவந்து அதில் சுபர்களிருக்கிற்பார்க்கில் நன்மை, பாபர்களிருக்கிற் பார்க்கில் தீமை, இருவர்கள் கலந்திருக்கில் நன்மையுந் தீமையுமாம்.

[illegible] |
[illegible] ||௫||
[illegible] ||௫½||

(என்+ள்.) உதயம் ௬-மிடம் ௮-மிடம் ௧௨-மிடம் ஆகிய இவைகள் சத்திரமாகவரில் போனபொருள் வராது, ரோகம் நிவர்த்தியில்லை, நினைத்த காரியம் கைகூடாது, விரோதமானவன் சமாதான மாகான், அவ்விராசிகளில் சுபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் நன்மையும் பாபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் கெடுதியுமாம்.

[illegible] ||௬||
[illegible] |
[illegible] ||௭||

(என்+ள்.) உதயாரூடங்கட்கு ௭-மிடம் ௧௦-மிடங்கள் சத்திரமாகில் மிகுதியும் நன்மை, சிரோதய விராசி உதயமாகிப் பிரு

ஷ்டோதயவிராசி ஆரூடமாகில் நஷ்டமான பொருள் வரும், இது மாறுதலாகவரில் போன பொருள் வராது, அன்றியும் மேற்கூறிய விர்ராசிகளில் சுபர்க ளிருக்கில் போனபொருள் அவசியம் வரும்.

உதயாரூடச்சத்ரேஷு ஸ்திதைர்வாபிவிலோகிதை: |
க்ரூரை: க்ரூரைர்நஷ்டலாப: ஸௌம்யை: ஸௌம்யைர்நலப்யதே ‖ அ ‖

(என் + ள்.) உதயாரூடச் சத்திரங்கட்கு ௬-மிடத்தில் பாபர்களிருந்து பாபர்களால் பார்க்கப்படில் நஷ்டமானவஸ்து கிடைக்கும், சுபர்களிருந்து சுபர்களால் பார்க்கப்படில் நஷ்டமானவஸ்து கிடைக்காது, (இவ்விதியால்) பாபர்களிருந்து சுபர்களால் பார்க்கப்படினும் சுபர்களிருந்து பாபர்களால் பார்க்கப்படினும் நாள் சென்று வெகு சிரமத்தின்பேரில் கிடைக்கும்.

ப்ருஹஸ்பதாவுதயே ஸ்ரேயோ யசோவிஜயமாகம: |
மேஷமாக்ஷம் ஸர்வகார்யஸித்திர்மங்களம் பவேத் ‖ கூ ‖

(என் + ள்.) குரு உதயத்திலிருக்கில், கீர்த்தி, பொருள், ஜயம், நல்ல வரத்து, விரோதநிவர்த்தி, இவை முதலிய வெல்லாக் காரியங்களும் நன்மையாம்.

ஸௌம்யோதயே ரணே ஜேதா ஸர்வத்ர தநமாஹரேத் |
சந்த்ரோதயே வா த்ரவ்யாப்திர்வஸ்த்ராய நமேவச ‖ கய ‖
வ்யவஹாரவிஜய: ஸ்வ ஸத்ரு ஸமாதாநம் ததா |
...

(என் + ள்.) புதன் உதயத்தி லிருக்கில் சத்துருவை யுத்தத்தில் ஜெயித்து அவன் தனத்தைக் கைக்கொள்வன், சந்திரன் உதயத்தி லிருக்கில், தனலாபம், அபூர்வ சாமான்கள் கிடைக்கும், வழக்கு வெற்றி, சத்துருசமாதானம் இவைகளுண்டாம்.

ஸிம்ஹஸ்வர்த்தத்ருஷ்ணா ஹர்த்தா ...
... ‖ கஉ ‖

(என் + ள்.) ஆரூட சத்திர ராசிகளில் குரு புதன் சந்திரன் இவர்களிருக்கில் தனலாபம், காரியசித்தி, நினைத்தது, கை கூடுதல், யாத்திரை சென்றோர் சுகமே வருதல், முதலிய பலன்க ளுண்டாகும்.

ஶுக்ரோதயே சத்ரவிஸ்த்ரகே ஸ்த்ரீலாபோ ஹோவத்ரவ்யதோஷநம் |
விவாதவிஜய ஶத்ருஸமாதாநம் ப்ரவக்ஷ்யதே ||௧௩||

(என்+ள்.) உதயம் சத்திரம் இவைகளில் சுக்கிரனிருக்கில் பொருள் சேர்க்கை, ஸ்திரீலாபம், ரோக நிவர்த்தி, வழக்கிற் ஜயம் சத்துரு சமாதானமாகுதல் இவைகளுண்டாம்.

உதயாரூடசத்ரேஷு ஶநிஸூர்யகுஜாயதி |
த்ரவ்யநாஶோமநஸ்தாபோ மரணம்வ்யாதிரேவச ||௧௪||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்களில் சனி, சூரியன், செவ்வாய் இவர்களிருக்கில் பொருள்ச் சேதம், மநோதுக்கம், மரண பயம், ரோகம் இவைகளுண்டாம்.

ஸதேஷு ஸைம்ஹிகேயேஷு வ்யாதிசோரபயம்பவேத் |
மரணம்சைவ தைவஜ்ஞா நிஸ்ஸந்தேஹம்வதந்திஹி ||௧௫||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்களில் இராகு விருக்கில் ரோக பயம், திருடர் பயம், மரணம் இவை முதலான தீங்குகளே யுண்டாகுமென்று சோதிடர்கள் சந்தேக மன்றிச் சொல்லக் கட வர்கள்.

ஸப்தமேசந்த்ர ஸூர்யௌவா த்ருஷ்டேவா நஷ்டத்ரவ்யகம் |
ததைவபுதஜீவௌவா நஷ்டத்ரவ்ய ஸமாகமம் ||௧௬||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்கட்கு எ-ம் இடத்தில் சூரி யன், சந்திரன். இவர்களிருக்கினும், புதன் குரு இவர்களிருக்கினும் நஷ்டவஸ்துக்கள் அகப்படும்.

த்ரிகோணேஸப்தமே ஸௌம்யா நஷ்டத்ரவ்யம்விநிர்திஶேத் |
தேஷுபாபாஸ்திதா நஷ்டம் நவிந்த்யாத்கதாசந ||௧௭||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்கட்கு ரு-௯-எ-ம் இடங்களில் சுபக்கிரங்களிருக்கில் நஷ்டமான பொருள்வரும், மேற்கூறிய ஸ்தானங்களில் பாபக்கிரகங்களிருக்கில் நஷ்டமானபொருள் ஒருக் காலும் வராது.

நியநாரிய நஷ்டேஷுபாபேஷு ஶுபக்ரஹேஷு |
ஸஷ்டேஷ்வஷ்டமேஷு கேந்த்ரேஷு ஶுபாஶுபாஶ்சவாதஹம் ||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்கட்கு ௨, ௭, ௮-மிடங்களில் பாபர்களிருக்கில் தீமையையும் மேற்கூறிய ஸ்தாநங்களிலும் ௧, ௪, ௭, ௧௰-என்கிற நாற்கேந்திரங்களிலும் சுபக்கிரகங்களிருக்கில் நன்மையையும் தருவார்கள்.

தந்வாதிபாவா: பாபேப்ய: யத்ர த்ருஷ்டா விநச்யதி |
சுபத்ருஷ்டியுதா: பாவா வர்த்தந்தே பாவமாநிந: ||

இதி ஶ்ரீநிவிரசித ஜாதகசந்த்ரிகாயாம்

ஷஷ்ட உதயாரூடத்ரயம் நாம ஷஷ்ட காண்ட:.

(என்+ள்.) உதயராசி முதலாயுள்ள ௧௨ இராசிகளில் எந்த இராசியில் கிரகங்க ளிருக்கின்றார்களோ, அல்லது பார்க்கின்றார்களோ, அந்த ஸ்தானத்தைக் கொண்டு எவ்விஷயம் பார்க்கவேண்டுமென்று பாவ நிகண்டிற் சொல்லப்படுகின்றதோ, அந்தப் பாவங்கள் கெடுமென்றும், எந்த ஸ்தானங்களிற் சுபர்க ளிருக்கின்றார்களோ அல்லது பார்க்கின்றார்களோ அந்தப் பாவங்கள் விருத்தியடையுமென்றும் சொல்க.

தங்வாதி பாவா வென்பது இவ்விடத்தில் உதயலக்கினமென்றாயிற்று. லக்கின முதலாயுள்ள ௧௨ இராசிகளில் இன்ன விராசியைக்கொண்டு இன்னபாவம் பார்க்கவேண்டுமென்பதைச் சிந்தனை காண்டத்தில் காண்க.

ஷஷ்டி உதயாருட காண்டம் முற்றிற்று.

ஜாதகசந்த்ரிகாயாம்.

விவாஹகாண்டப்ராரம்ப:.

வக்ஷ்யேஹம் விவாஹலக்ஷணம் ஜைமிந்யாதிபிரீரிதம் |
யாதகாராணயாதாவம் த்ருஷ்டேஷு தத்ஸம்பவதே ||௧||

யாதகாவிவாஹவேத்தா நஷ்டஜீவள தயாவதேக |
யாதகாஸம்ஸ்ஸ்த்ரவமே ஜீவராஹுவிஷ்டகீர்த்தித: ||௨||

யாதகாராமளஜீவவமே ஸ்த்ரராஹு நிஷ்டநீக்ஷிண: |
ஜீவராமளஸ்த்ரவமே யாதகாவிவாஹகீர்த்திதா: ||௩||

(என் + ள்.) ஜனங்களால் மனதில் நினைக்கப்பட்ட சூக்ஷ்மமான சிந்தனைகளை இராசிகளுடையதும், கிரகங்களுடையதுமான தாது, மூல, ஜீவ பேதங்களைத் தெரிந்துகொண்டு சொல்லவேண்டிய தவசியமானதால், அவைகளின் பேதங்களைக் கூறுகின்றார்.

உதயாரூடங்கள், தாதுவிராசியாய் அவ்விராசியைத்தாது கிரகங்கள் பார்க்கினு மிருக்கினும், அல்லது தாது இராசி சத்திரமாக வரினும் தாது சிந்தனையாம். உதயாரூடங்கள், மூலராசியாய் அவ்விராசியை மூலகிரகங்கள் பார்க்கினு மிருக்கினும், அல்லது மூல ராசி சத்திரமாகவரினும் மூலசிந்தனையாம். உதயாரூடங்கள் ஜீவ ராசியாய் அவ்விராசியை ஜீவ கிரகங்கள் பார்க்கினு மிருக்கினும், ஜீவராசி சத்திரமாகவரினும் ஜீவசிந்தனையாம். (கிரகங்களைக்கொண்டு சிறப்பு விதி கூறுகின்றார்.) தாது ராசியில் மூலகிரகங்களிருக்கில் ஜீவசிந்தனையாம், தாதுராசியில் ஜீவ கிரகங்களிருக்கில் மூலசிந்தனையாம், ஜீவராசியில் மூலகிரகங்ளிருக்கில் தாது சிந்தனையாம்.

த்ரவமத்யேவெடிதெக்ஷூலெஷு யாஃக்ஷேபவஶாதெக ।
வக்ரம்வஶஜ்ஜிவெதநேக வத்தெக்ஷேஷ ஹாக்ரதிம் ॥௪॥
யாதாஃஅஜ்ஜுஜீவஜு வஃஶஃவண்டிஃஷ்ரதிஃவதெக ।
தீக்ஷாரிவஜுவமத்யு ஜாக்வாஷ்ரயா திவக்ஷணஃ ॥௫॥

(என் + ள்.) தாது மூல ஜீவனென்கிற மூன்றுவித கிரகங்களின் பார்வைகளினாலும் இருப்புக்களினாலும் அவரவர்களின் பலங்களினாலும் ஸ்தானங்களின் பலங்களினாலும் பலஞ் சொல்லவேண்டியது. சந்திரனை எந்த கிரகம் பார்க்கின்றதோ, அந்த கிரகத்தின் உருவம், தாது மூலஜீவனென்கிற பேதம், ஜாதி, நிறம், உச்சம், ஆட்சி, நட்பு, சத்துரு, நீசம் இவைகளை நன்றாயறிந்து பலஞ் சொல்லவும்.

உதயாரூடயொஶூதெ ரூஹயொமெக்ஷணதயா ।
ஜாக்வாஃஷ்டிஜு நஷ்டஜு விஜ்ஞாநஃக்ரமெஶாவதெக ॥௬॥

(என் + ள்.) உதயம், ஆரூடம், சத்திரம் என்கிற மூன்று இராசிகளிலேயுமுள்ள கிரகங்களாலும், அவைகளைப் பார்க்கின்ற கிரகங்களாலும் முஷ்டிநஷ்ட சிந்தனைகளைச் சொல்க. எவ்விதமெனில், கிரமமாகச் சொல்லவேண்டு மென்று பதமிருப்பதால்,

உதயத்திலிருக்கின்ற கிரகத்தாலும், பார்க்கின்ற கிரகத்தாலும் கைக்குள்ளிருக்கும் பொருளைச் சொல்வதான முஷ்டி சிந்தனையையும், ஆரூடத்திலிருக்கின்ற கிரகத்தாலும் பார்க்கின்ற கிரகத்தாலும் நஷ்டவஸ்துக்களையும், சத்திரத்திலிருக்கின்ற கிரகத்தாலும் பார்க்கின்ற கிரகத்தாலும் தான் மனதிற்கொண்டிருக்கும் நினைவையுஞ் சொல்லவேண்டும்.

கேந்த்ரேஷூச்சஸ்வமித்ரர்க்ஷே ஸ்திதைர்த்ருஷ்டைஸ்ச க்ரஹை: |
ஸர்வேஷாமபி கார்யாணாம் ஸித்திம் ப்ரூயாத்விசக்ஷண: ||௭||

(என் + ள்.) கேந்திரங்களில் உச்ச, மித்திர, ஸ்வக்ஷேத்திரங்களையடைந்த கிரகங்களிருந்தாலும், அல்லது அப்படிக்கிருக்கிற கிரகங்களாற் கேந்திரங்கள் பார்க்கப்பட்டாலும் சகலகாரியங்களும் கைவசமாகும்.

உதயாத்தாதுசிந்தா ஸ்யாதாரூடான்மூலசிந்தநம் |
ஹத்ராஜ்ஜீவசிந்தா ஸ்யாதிதி கேசித்ப்ரசக்ஷதே ||௮||

(என் + ள்.) உதயத்தைக்கொண்டு தாதுசிந்தனையும், ஆரூடத்தைக்கொண்டு மூலசிந்தனையும், சத்திரத்தைக்கொண்டு ஜீவசிந்தனையும் பார்க்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்.

கேந்த்ரம் பணபரம் ப்ரோக்தமாபோக்லீமமத: பரம் |
சிந்தாநஷ்டம் ச முஷ்டிம் ச ப்ரவதேத்தத்க்ரமாதயம் ||௯||

(என் + ள்.) கேந்திரத்தைக்கொண்டு சிந்தனையும், பணபரத்தைக்கொண்டு நஷ்டத்தையும், ஆபோக்லீமத்தைக் கொண்டு முஷ்டியையுஞ் சொல்க.

ததசந்த்ரலக்நமாரூடம் ந நஷ்டம் வ்யாதிமோசநம் |
சந்த்ராத்தசமசதுர்த்தஸ்தே ஆரூடேSபி ச ஸித்தி: ||௰||

(என் + ள்.) சந்திரலக்கினம் ஆரூடமாகில் நஷ்டமாகவில்லை, வியாதி நிவர்த்தியாகும். சந்திரன் நின்ற இராசிக்கு ௰-ம் இடம் ஆரூடமாகவரினும். ௪-ம் இடம் ஆரூடமாகவரினும் வியாதி நிவர்த்தி. நஷ்டமானபொருள் காணப்படும் (இச்சுலோகத்தில் சந்திரலக்கினத்தைக்கொண்டு பலஞ் சொல்லியிருப்பதுபோல் உதயம் சந்திர லக்கினம் இவ்விரண்டிற்கும் பலன் ஒன்றாகவே மற்றச் சாஸ்திரங்களிற் சொல்லப்படுகின்றது.)

நஷ்டத்ரவ்யோபலம்பஸ்ய ஸர்வஹாநிஸ்ஸுவஸ்துஷு |
உதயாத்ஸப்தமேஶேஷே ஷஷ்டாஷ்டவ்யயகேஷ்விதி ||கக||
சிந்திதார்த்தோ நஶ்யதி ய நஷ்டாநிர்விபக்ஷஜயம் ||

(என்+ள்.) உதயத்திற்கு எ-ம் இடம் ஆரூடமாகவரில் நஷ்டமானதிரவியம் கிடைக்காது மேலும் சர்வ வஸ்துக்களுக்கும் கெடுதியுண்டாகும். சூ-அ-கஉ-ம் இடங்கள் ஆரூடமாகவரில் நினைத்த காரியம் முடியாது, பொருள்ச்சேதமாம். சத்துருவுக்கு ஜயம் இவை யுண்டாகும்.

தநு: குடும்பம் ஸஹஜம் ஜநநீ ஜநகஶ்ரிபவ: ||கஉ||
களத்ரம் நிதநஞ்சைவ தர்மகர்மாயகவ்யயம்|
உதயாதி க்ரமாத் பாவாஸ்ஸ்யுஸ்தத்ஸம்பந்தேஷு ||கந||

(என்+ள்.) (உதயத்தால்) சரீரத்தையும் உ-ம் இடத்தால் குடும்பத்தையும் ந-ம் இடத்தால் சகோதரத்தையும் ச-ம் இடத்தால் தாயையும் ரு-ம் இடத்தால் தகப்பனையும் சூ-ம் இடத்தால் சத்துருவையும் எ-ம் இடத்தால் களத்திரத்தையும் அ-ம் இடத்தால் மரணத்தையும் கூ-ம் இடத்தால் தனக்கு ஏற்பட்ட குருவையும் க0-ம் இடத்தால் கர்மத்தையும் கக-ம் இடத்தால் லாபத்தையும் கஉ-ம் இடத்தால் விரயத்தையும் சொல்லவேண்டுவதாதலால் அந்தந்த ஸ்தானங்களின் பலத்தைக்கொண்டு அந்தந்தப் பாவ பலங்களைச் சொல்க. (மேற்கூறிய வுதயராசிமுதல் கஉ-ம் இராசி வரையிலுள்ள பாவங்கள் பன்னிரண்டிற்கும் பெயர்களை விசேஷித்து யெழுதப்புகில் விரியுமெனக் கருதி இக்கிரந்தத்திற் கூறிய வைகளையே எழுதலாயிற்று (விதியாகச் செய்யப்படும் செய்கையையும் ஜீவனோபாயமாகச் செய்யப்படும் செய்கையையும் கர்ம மெனப் பொருள்கொள்ளவும்.)

ரவீந்துசந்த்ரஜ ஜீவஶுக்ரா: ந்ருராஶிஷு யதிஸ்திதா: |
உதயோ விஷமோ வேத்ததோ வஶ்யேதா: க்ரூரஜௌ யோ: ||கச||
தேஷாம் நராணாம் வதேத்ஸம்ஸ்ருதிவக்ஷண: ||

(என்+ள்.) மனுஷ்யராசிகளில் சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இவர்களிருந்தும் ஆரூடமும் மனுஷ்யராசியேயானல் மனுஷ்யசிந்தனை (மேற்கூறிய கிரகங்களைச் சனி செவ்வாய்

இவர்கள் பார்க்கில் மனுஷ்ய நஷ்டமும் களவுஞ்சொல்க.) இவ்விடத்தில் இராகுவையும் சனியுடன் சேர்த்துக்கொள்ளவும்.

அர்கே ந்ருபாத்பயம் க்ஷ்மாஜே கலஹமேவ ச ||௧௫||
ஶநௌ நஷ்டம் ராஹௌ வ்யாதிபயம் விஷபயம் வதேத் ||

(என் + ள்.) மேற்கூறிய மனுஷ்யராசி உதயமாகி, அதில் சூரியனிருக்கில் இராஜபயம், செவ்வாயிருக்கில் கலகம், சனியிருக்கில் நஷ்டம், இராகுவிருக்கில் வியாதி, விஷபயம், இவைகளாம்.

ஶுபசிந்தா குரௌ ஜ்ஞேயா விவாஹோ புதஶுக்ரயோ: ||௧௬||
ரவிக்ருஷ்டேஷ்வபாயே து சிந்தா தேவந்ருபஸ்ய ச ||

(என் + ள்.) மேற்கூறிய மனுஷ்யராசி உதயமாகி அதில் குருவிருக்கில் சுபத்தைப்பற்றிய நினைவு, புதன் சுக்கிரன் இவர்களிருக்கில் விவாகசிந்தனை, சூரியனிருக்கில் முற் சுலோகத்திற் சொல்லியதோடு தெய்வசிந்தனை, இராஜசிந்தனை, இவைகளாம்.

உதயே பாபஸம்யுக்தே ம்ருதிசிந்தாம் வதேத் த்ருவம் ||௧௭||
ஆரூடே வ்யாதிசிந்தா ஸ்யாத் த்ருதீயே பாபஸம்யுதே |
நஷ்டத்ரவ்யஸ்ய சிந்தேதி சிந்தநம் க்ரமஶோ வதேத் ||௧௮||

(என் + ள்.) உதயராசியிலிருக்கின்ற மேற்கூறிய கிரகங்களோடுபாபர்கள் சேர்ந்திருக்கில் மரணசிந்தனை, ஆரூடத்திலிருக்கில் வியாதிசிந்தனை உ-ம் இடத்தில் பாபர்களிருக்கில் நஷ்டத் திரவிய சிந்தனை இவைகளை முறையே சொல்க.

ஷஷ்டாஷ்டமேஷு ஷஷ்டே வா பாபஸம்யுதே |
நஷ்டம் வ்யாதிர் விரோதஞ்ச ஶுபயுக்தே த்வஸம்பவம் ||௧௯||

இதி ஜைமினிவிரசித ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
சிந்தாப்ரகரணம் நாம நவமகாண்ட:.

(என் + ள்.) உதயராசிக்கு ௯-௮-௧௨-ம் இடங்களில் பாபக் கிரகங்களிருக்கில் முறையே நஷ்டம், ரோகம், கலகம் இவைகளையும் சுபக் கிரகங்களிருக்கில் அவைகளில்லாமையுஞ் சொல்லவேண்டியதாம்.

சிந்தனகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞானப்ரதீபிகாயாம்

லாபாலாபகாண்டப்ராரம்பஃ

வஸ்துலாபம் ராஜ்யலாபம் நஷ்டம் க்ராமம் ஸ்த்ரியாயதி |
உபாயம் ஸர்வகார்யாணாம் லாபாலாபம் வதேத்ஸுதீ: ||1||

(என்+ள்.) ஒருவராலுண்டாகும் வஸ்துலாபம் இராஜ்ய லாபம் நஷ்ட வஸ்துக்களின் லாபம் கிராமலாபம் ஸ்திரீலாபம் இன்னம் மற்றுமுள்ள சர்வகாரியங்களின் நன்மை, தீமை, லாபம், நஷ்டம் இவை, இக்காண்டத்திற் சொல்லப்படுகின்றன.

உதயாதி த்ரிகோணஸ்தை: பஶ்யேத்யுச்சஸ்தாயதி |
சிந்திதார்த்த ப்ரஸித்திஸ்ஸ்யாத் ஸ்த்ரீராஜ்யலாபமேவ ச ||2||

(என்+ள்.) உதயாரூடச் சத்திரங்கள், உச்ச, ஸ்தானங்களிலிருக்கிற கிரகங்களாற் பார்க்கப்படில் நினைத்ததெல்லாம் முடிவுபெறும் இராஜ்யலாபம் ஸ்திரீலாபம் இவையுண்டாகும்.

தாந்நீசவீக்ஷிதஃ பஶ்யேத் விபரீதமதோந்யதா |
ஏவம் விவாஹகாலேபி ஶுபாஶுபநிரீக்ஷணம் ||3||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்களை நீசக்கிரகங்கள் பார்க்கில் உச்சத்திற்குச் சொல்லிய பலன்களெல்லாங்கெடும். இந்தப் பிரகாரம் விவாகபிரச்னையிலும் சுபாசுபங்களை அறிந்துகொள்ளவும்.

உதயாரூடசத்ராணி பஶ்யந்தி ஸுஹ்ருதோயதி |
ஶத்ருர்மித்ரத்வமாயாதி ததா பஶ்யதி சேத்புதஃ ||4||

(என்+ள்.) உதயாரூட சத்திரங்களை மித்திரக் கிரகங்கள் பார்த்தாலும் (அல்லது) புதன் பார்த்தாலும் சத்துரு மித்திரனாவான்.

உதயஞ்சந்த்ரலக்நம் வா பஶ்யந்தி யதி வைரிண: |
ஆயுர்ஹாநிர்பவேத்தஸ்ய மத்யம் பஞ்சமநவம் வதேத் ||5||
மத்யாநாம் யாதி நஷ்டம் ச ததுதயே நஷ்டம் வதேத் ||

(என்+ள்) உதயத்திலேயாவது, சந்திர லக்கினத்திலேயாவது சத்துரு கிரக மிருக்கிலும் பார்க்கிலும் ஆயுசுக்குக் கெடுதி.

குருவினிடத்திற்போனால் கட்டுப்படுவன், யாத்திரை சென்றவர் மாட்டான், நஷ்டப்பிரச்னையானால் போனவஸ்துவராது.

[illegible] ||௬||
[illegible] ||

(என் + ள்.) சந்திரன், குரு இவர்கள் உதயாரூட சத்திரங்களுக்கு கேந்திரங்களிற் பலவான்களாக நிற்கையில் நஷ்டவிஷயமான பிரச்னைபண்ணினால் நஷ்டமுண்டாகாது, மரணப்பிரச்னையில் மரணமில்லை.

[illegible] ||௭||
[illegible] |
[illegible] ||௮||

(என் + ள்.) கேந்திரங்களிற் பாபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் மரணம் வரும், நஷ்டமானபொருள்வராது, கெடுதியுண்டாகும், யாத்திரைபோனார் வரமாட்டார். ௧௦-௧௧-ம் இடங்களில் சுபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் மேற்கூறிய சர்வ காரியங்களுக்கும் நன்மையாம்.

[illegible] |
[illegible] ||௯||
[illegible] |
[illegible] ||௰||
[illegible] ||

(என் + ள்.) உதயாரூட சத்திரங்களிலாவது கேந்திரங்களிலாவது இராகுவிருக்கில் தேசாந்திரத்திலிருக்கின்றவர் வரமாட்டான், சத்துருவினால் கட்டுப்படுவன், விஷம் ரோகம் இவைகளைப்பற்றி பிரச்னங்கேட்டால் மரணமாம், வழிப்போக்கில்லை, நஷ்டவஸ்து வராது, எடுத்த காரியங் கெடுதியாம். இவ்விதமாகச் சம்சயமின்றிச் சொல்லக்கடவன்.

[illegible] ||௧௧||
[illegible] ||

(என் + ள்.) உதயத்தில் சந்திரனிருந்தாலும் ௧௦-ம் இடத்தில், சுக்கிரனிருந்தாலும் அல்லது சூரியனிருந்தாலும் குருலக்கினத்திலிருந்தாலும் சுபமே யுண்டாம்.

உதயாத்ஸப்தமே வ்யோம்நி ஶஶாங்கே ஶுக்ரஸ்தேऽதிஸாயதி: ॥௧௭॥
யதா ஸ்த்ரீஸௌக்யம் [illegible] கீர்த்தித: ॥

(என் + ள்) உத[illegible]கு ௭-ம் இடம் ௧௦-ம் இடம் இவைகளிற் சந்திரன் அ[illegible] சுக்கிரன் இவர்களிருக்கில் ஸ்திரீ லாபம், தனவரத்து, சௌக்கியம் இவை உண்டாம்.

மித்ரஸ்வோச்சஸ்வராஶிகதா: கேடா இஷ்டதா: ॥௧௮॥
நீசாரிகேஹகாயாம் ஸர்வகார்யம் விநஶ்யதி ॥

இதி ஜைமினிவிரசிதஜ்ஞாநப்ரதீபிகாயாம்
லாபாலாபப்ரகரணநாம ஷஷ்டகாண்ட:.

(என் + ள்.) பொதுவாகச் சொல்லப்படுகின்ற விஷயமாவது பிரச்ந காலத்தில், சூரியன்முதல் இராகுவரையிலுள்ள, எட்டு கிரகங்களும் உச்ச, ஸ்வக்ஷேத்திர மித்திரக்ஷேத்திரங்களை யடைந்தால் இஷ்டபலன்களைக் கொடுப்பார்கள். நீச, சத்துரு, க்ஷேத்திரங்களை யடைந்தால் சர்வகாரியங்களையும் கெடுப்பார்கள்.

லாபலாபகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
ரோககாண்டப்ராரம்ப:.

பூர்வாசார்யாநுஸாரேண வ்யாதிம்ருத்யுவிநிர்ணய: ।
உதயாத்ஷஷ்டகோ வ்யாதி ரஷ்டமோ ம்ருத்யுஸம்ஜ்ஞக: ॥௧॥

(என் + ள்.) சோதிட சாஸ்திராதிகாரிகளான மகரிஷிகளால் முன்செய்யப்பட்டுள்ள சாஸ்திரங்களை யனுசரித்து வியாதி, மரணம் இவைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதாவது உதய லக்கினத்தில் நின்றும் ௬-ம் இடம் ரோகம், ௮-ம் இடம் மரணமாம்.

ஷஷ்டாரூடே வ்யாதிசிந்தா நிதநே ம்ருத்யுசிந்தநா ।
தயோர்க்ரஹயுதே த்ருஷ்டே வ்யாதிம்ருத்யுவிஶேஷகா: ॥

(என் + ள்.) உதயராசிக்கு ௬-ம் இடம் ஆரூடமாகில் வியாதியின் சிந்தனை, ௮-ம் இடம் ஆரூடமாகில் மரணத்தின் சிந்தனை.

மேற்கூறி சு-அ-ம இடங்களிலுள்ள கிரகங்களின் பலாபலங்களை யறிந்து வியாதியென்றும் மிருத்யுவென்றுஞ் சொல்க.

வ்யயநீசாரயஃவெடாஃ வஸு...ஷஷ்டேஸ்யஸ்தாஃ ।
நஸாத்ருதிர்வ்யாதி யிஷ்டே ...திரோகிணஃ ॥௯॥

(என் + ள்.) உதயத்துக்கு சு-ம் இடமான ரோகஸ்தானத்தில் கிரகங்கள் பகை நீசம் பெற்றிருக்கிற் பார்க்கில் வியாதி நிவர்த்தியாகாது, மரணத்தையடைவான்.

லக்நஸ்தசந்த்ர ராஹு ஸ்திதிஷு தோயஷ்டிதோஷயே ।
ஸ்வாதி நாஸ்தவெவ்யாதி நிஷ்டஸாத்ருதிநஸம்ஸயஃ ॥௰॥

(என் + ள்.) உதயராசியில் சந்திரன், இராகு இவர்களிருக்கில் சுமைமுதலானவைக ளெடுத்ததினுற் பிணி யென்றும் அது தீரா தென்றுஞ் சொல்க.

ப்ருஷ்டோதயக்ஷேத்ரஸ்தெ வ்யாதிரோக்ஷா நஜாயதெ ॥

(என் + ள்.) உதயம் ஆரூடம் இவைகள் பிரஷ்டோதய ராசிகளாகவரில் வியாதிதீராது, இப்படியே பிரஷ்டோதய கிரகங்களிருக்கிலும் பார்க்கிலும் வியாதி தீராதென்க.

வ்யாதிஸ்தாநநிதம்ப்ராஹுஃ ஸிரோவக்த்ரம்ஸ்ஜகாரா ॥௰௧॥
வக்ஷஸ்ஸ்தநௌ கக்ஷிஃ கக்ஷௌசமுஷ்கௌஹஸ்தம் ।
ஊருஜம்வெசபாதௌச மேஷாத்யாஃபரிகீர்த்திதாஃ ॥௰௨॥

(என் + ள்.) மேஷத்திற்குத் தலை, விருஷபத்திற்கு முகம், மிதுனத்திற்குத் தோள், கடகத்திற்குக் கை, சிம்மத்திற்கு மார்பு, கன்னிக்கு ஸ்தனங்கள், துலாத்திற்கு வயிறு, விருச்சிகத்திற்குக் கைக்கீழிடுவல், தனுசிற்கு இரகசிய விடங்கள், மகரத்திற்குத் தொடைகள், கும்பத்திற்குக் கணைக்கால்கள், மீனத்திற்குக் கால்கள், இவைகள் ராசிகளைக்கொண்டு சொல்லும் வியாதிஸ்தானங்களாம்.

சூர்யஸ்யோதரமிந்தோர்வக்ஷோ கண்டெளபாஹுளகரௌபுதஸ்ய ।
ஸுக்ரவக்ஷஸ்தலகுக்ஷௌ வஹா நூருஹெரயொதந்தாஃ ॥௰௩॥
ஊருஸநிரஹிஃபாதௌ கெது ஹஸ்தாங்க்ஷூர்நிர்திஷ்டம் ॥

(என் + ள்.) சூரியனுக்கு வயிறு, சந்திரனுக்கு மார்பு, செவ்வாய்க்குத் தலை, புதனுக்குக்கழுத்து, தோள், கை இவைகள்,

வியாழனுக்கு இடுப்பு, சுக்கிரனுக்கு முகம், சனிக்குத் தொடை இராகுவுக்குக் கால். இவைக் கிரகங்களைக்கொண்டு சொல்லும் ரோக ஸ்தானங்களாம்.

ஸ்தானேஷ்வேதேஷு யேஷ்வஸௌம்யேதரேஷு ராசிஷு ||௮||
பாபா: க்ஷேத்ரேஷு சத்ருக்ஷேத்ரேஷு நீசக்ஷேத்ரேஷு ருக்பவேத் ||

(என் + ள்.) மேலே சொல்லப்பட்ட இடங்களிற் பாபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் ரோகமுண்டு. மேற்கூறிய பாபர்கள் தானே நீசர்களாக விருக்கில் இராசிகளுக்குங் கிரகங்களுக்கும் சொல்லிய அங்கங்கள் வியாதியினாற் கெடும். மேற்கூறிய காரணத்தால் பாபக்கிரகங்கள் சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கில் அந்த ஸ்தானங்கள் வியாதியினால் மிக வருத்தம் அடையுமென்றும், உச்ச, மித்திர, ஸ்வ க்ஷேத்திரங்களிலிருக்கில் அல்ப வியாதி யென்றும் யூகித்துச் சொல்லவும்.

யே பச்யந்தி க்ரஹாச்சந்த்ரம் வ்யாதிஸ்தானாவலோகின: ||௯||
வ்யாதிஸ்தானே ஸ்திதா: ஸௌம்யா: ஸ்வஸ்வஹானம் பலதோ க்ரஹ: |
வர்ஷமாஸதினான்யஸ்ய வர்ஷாணி நாடீ நிவர்த்தகஸமய: ||௧௦||

(என் + ள்.) எந்தகிரகம் சந்திரனையும் ரோகஸ்தானத்தையும் பார்க்கின்றதோ, அந்தகிரகத்திற்குச் சொல்லிய வருஷமாச தினங்களிலாவது அல்லது ரோகஸ்தானத்தில் சுபக்கிரகங்களிருக்கிற் பார்க்கில் அவர்களுக்குள் பலவான்யாரோ அவருக்குச் சொல்லிய வருஷமாச தினங்களிலாவது ரோகநிவர்த்தியாம்.

ஷஷ்டாஷ்டமேஷு பாபேஷு ந வ்யாதிசமனம் பவேத் |
ஷஷ்டாஷ்டமேஷு ஸௌம்யேஷு ரோகசாந்தி: ப்ரஜாயதே ||௧௧||

(என் + ள்.) உதயத்திற்கு ௬-௮-ம் இடங்களில் பாபக்கிரகங்களிருக்கில் பிணிதீராது, சுபக்கிரகங்களிருக்கில் பிணிதீரும்.

கிஞ்சித்ர விசேஷோஸ்தி ரோகசாந்த்யபிதாஸ்ஸ்யஹா: |
யாவத்திதிவஸைர்வர்ஷைர்ப்ராப்தா வக்ஷ்யே வ்யாதிநாசனம் ||௧௨||

(என் + ள்.) (ரோக நிவர்த்திக்கு விசேஷங் கூறுகின்றார்.) ௬-௮-ம் இடங்களிலிருக்கிற சுபக்கிரகங்கள், எத்தனை வருஷமாச தினங்களில் அடுத்த ஸ்தானத்தை யடைகிறார்களோ, அவ்வளவு கணக்குள்ள வருஷமாச தினங்களில் ரோகநிவர்த்தியாம். (௬-௮-ம் இடங்களிலிருக்கிற சுபக்கிரகங்கள், தங்கள் உச்ச ஸ்வக்ஷேத்திரங்

களை எவ்வளவு வருஷமாச தினங்களிலடைகிறார்களோ, அவ்வளவு வருஷமாச தினங்களில் ரோக நிவர்த்தியாமென்று கூறுவாரு முளர்.)

ரோகஸ்தாநாத்ஸஹஜபவநே பாபகேடயுதே யதி |
தத்ஸ்தே வா சந்த்ரஸம்யுக்தே மரணம் ரோகிணாம் வதேத் ||௧௩||

(என் + ள்.) ௬-ம் இடமான ரோகஸ்தானத்திற்கு ௩-ம் இடத்தில் பாபக்கிரகங்களி லிருக்கிலும் அல்லது ரோகஸ்தானத்திற்கு ௩-ம் இடத்தில் சந்திரனிருக்கிலும் ரோகத்தை யுடையவன் மரணத்தை யடைவான்.

ரோகஸ்தாநம் ரவிர்ஜாத: பச்யேதுதரஜோ கத: |
சந்த்ராதக்ஷிகதம் பௌம: சிரோவ்யாதிஜ்வரம் ததா ||௧௪||
புத: பச்யேதங்குலீவ்யாதிம் குருர்மூலஜம் கத: |
சுக்ராத் பேதிம் சந்த்ரோக்தம் சநிர்வாதஜ்வரம் வதேத் ||௧௫||
ராஹு: பச்யேத் விஷஜ்வரம் விஷபாண்ட்வாதிகம் ததா ||

(என் + ள்.) ரோகஸ்தானத்தைச் சூரியன் பார்க்கில் வயிற்றிலுண்டாகிய வியாதியும், சந்திரன்பார்க்கில் கண்ணிலுண்டாகிய வியாதியும், செவ்வாய்பார்க்கில் தலையிலுண்டாகிய வியாதியும் சுரமும், புதன் பார்க்கில் அங்குளிலுள்ள சிரங்கு முதலிய வியாதிகளும், குருபார்க்கில் மூலத்திலுண்டாகிய வியாதியும், சுக்கிரன்பார்க்கில் பேதிமுதலியனவும் சந்திரனுக்குச் சொன்ன கண்ரோகம் முதலிய வியாதிகளும், சனி பார்க்கில் வாதத்தாலுண்டாகிய சுரம் முதலிய வியாதிகளும், இராகு பார்க்கில் விஷ கடி விஷ சுவரம் விஷபாண்டு முதலிய வியாதிகளுமாம். இவ்விதமாக அந்தந்தக் கிரகங்களைக்கொண்டு வியாதிகளை யூகிக்கவும்.

பரிவேஷேந்த்ரசாபாப்யாம் த்ருஷ்டே குஷ்டம் ததா ||௧௬||
ஷஷ்டபாவம் தூமத்ருஷ்டம் தேஹவ்ருத்திம் வதேத் |
அபஸ்மாரம் ராஹுத்ருஷ்டே விஷம் ஸூர்யேண பீடநம் ||௧௭||
சாபஸ்தாநம் ஸ்வஸூர்யேண ஸமயம் ஜ்வரம் வதேத் ||

(என் + ள்.) ௬-ம் இடமாகிய ரோகஸ்தானத்தைப் பரிவேடம் இந்திரதனுசு இவர்கள் பார்க்கில் குஷ்ட வியாதியும், தூமம் பார்க்கில் தேகத்தைப் பெருக்கச் செய்வதான வீக்கம் முதலிய வியாதியும், இராகு பார்க்கில் வலிப்பும், சூரியன் பார்

க்கில் பிசாச பீடையும், சனி பார்க்கில் காசம் சூலை இருமல் இளைப்பு இவை முதலியவைகளும், செவ்வாய் பார்க்கில் குளிர் காய்ச்சல் முதலியவைகளுமாம். (இக்காண்டம் கரு-கசு-வது சுலோகங்களிற் கூறியவைகளையு மவரவர்களுக்குச் சேர்த்துக்கொள்ளவும்.)

இந்த்ரகோதண்டபரிவேஷௌ த்ருஶ்யேதே ரோகிணாம் ||கஅ||
வ்யாதிர்ந ஶாம்யதி ததோதயம் பஶ்யந்தி சேத்க்ரஹா: |
ரோகஶாந்திர்பவேச்சீக்ரம் மித்ரஸ்வோச்சக்ரஹஸம்ஸ்தித: ||கசு||

(என் + ள்.) ரோகவிஷயமாய்ப் பிரச்னம் கேட்கின்ற காலத்தில் இந்திரதனுசு பரிவேடம் இவைகள் ஆகாசத்தினிடத்திற் காணப்பட்டால் வியாதிதீராது; ஆனால் உதயராசியைச் சுபக்கிரகங்கள் உச்சஸ்வக்ஷேத்திர மித்திர க்ஷேத்திரங்களிலிருந்து பார்த்தால் அதிக சீக்கிரத்தில் வியாதி நிவர்த்தியாம்.

ஶிரோலலாடப்ரூநேத்ர நாஸாஶ்ரோத்ராதராஸ்ததா
சுபுகாங்குலிக்ரீவா ச வக்ஷ:ஸ்தநோதராண்யேவ ||உ0||
கடிப்ருஷ்டஸ்ததைவ குஹ்யமுஷ்கநிதம்பகம் |
ஶிஶ்நமூலம் நாபிப்ருஷ்டம் ததாஸ்ய ந்ருணாம் பவேத் ||உக||
ப்ருஷ்டம் வஸ்திரோமாஞ்ஜாநுஜங்கே பாதே கரஸ்தலங்குலீ: |
பாதாங்குஷ்டதலம் சிரோக்ஷாதாந்யேவ பவேத் ||உஉ||
உதயர்க்ஷாதாரப்யேவ ஜ்ஞாதவ்யம் தத்ர ஸம்ஶய: ||

(என் + ள்.) (1) கார்த்திகைக்குத் தலை, (2) ரோகிணிக்கு நெற்றி, (3) மிருகசீர்ஷத்திற்குப் புருவம், (4) திருவாதிரைக்குக் கண், (5) புனர்பூசத்திற்கு மூக்கு, (6) பூசத்திற்குக் காது, (7) ஆயில்லியத்திற்கு உதடு, (8) மகத்திற்கு மோவாய்க்கட்டை, (9) பூரத்திற்குக் கைவிரல், (10) உத்திரத்திற்குக் கழுத்து, (11) ஹஸ்தத்திற்குமார்பு, (12) சித்திரைக்கு முலை, (13) ஸ்வாதிக்கு வயிறு, (14) விசாகத்திற்கு இடை, (15) அனுஷத்திற்குப் பிரஷ்டபாகம், (16) கேட்டைக்கு ரஹஸ்யமான இடம், (17) மூலத்திற்கு விரை, (18) பூராடத்திற்குக்கொப்பூழ், (19) உத்திராடத்திற்கு முதுகு, (20) திருவோணத்திற்குக் கொப்பூழின் கீழ்ப்பாகம், (21) அவிட்டத்திற்குக் குதம், அதாவது அபானஸ்தானம், (22) சதயத்திற்கு முழங்கால், (23) பூரட்டாதிக்குக் கணைக்கால், (24) உத்திரட்டாதி

க்குக் கரண்டைக்கால், (25) ரேவதிக்குக் குதிக்கால், (26) அசுவதிக்குக் கால்விரல், (27) பரணிக்கு உள்ளங்கால், இவ்விதங்களாக நக்ஷத்திர உதயங்களைக்கொண்டு வியாதிகளின் நிலைகளை யுணர்த்துக.

ஸம்ப்ரநஷ்டே க்ரஹாங்க யதாவதேஷ ||உரு||

(என் + ள்.) அணிந்து கொள்வதான ஆபரணங்களின் நஷ்ட விஷயமான பிரச்னையில், அப்போது உதயமாகிற நக்ஷத்திரத்துக்கு, எந்த அங்கமோ அந்த அங்கத்தி லணிவதான ஆபரணமென்றும், தாதுகாண்டத்தைக்கொண்டு இன்ன ஆபரண மென்றும், லாபா லாப காண்டத்தைக்கொண்டு, வரும் வராதென்றும், வருமாயின் கிரகங்களைக் கொண்டு கால நிர்ணயங்களையுஞ் சொல்க. பிரச்னகாலத்தில் இன்னநக்ஷத்திரம் உதயமென்பதைக் கூபகாண்டத்தி லேற்படுத்தி யிருக்கும் சக்கிரங்களிற் காண்க.

லக்நாத் கோணேஷு ஷஷ்டே ச ஸ்ஸௌம்யே வ்யாதிர் ந ஹி |
தேஷு நீசாரிகே ஷஷ்டே ஹ பீடா வேஹிநாம் ||உச||

இதி ஜைமிநிவிரசித ஜ்ஞானப்ரதீபிகாயாம்
ரோகப்ரச்நநிர்ணயகாண்டம்.

(என் + ள்.) உதயம் ரு-கூ-கo ம் இடங்கள் இந்த விராசிகளில் சுபக்கிரகங்க ளிருக்கிலும் பார்க்கிலும் வியாதி யில்லை. மேற்கூறிய ஸ்தானங்களில் நீச சத்துரு, கிரகங்க ளிருக்கிலும் பார்க்கிலும் தேகபீடை.

இவ்விடத்தில் சுபர்கள் க-ரு-கூ-கo இவைகளி லிருக்கிற் பார்க்கில் வியாதி நிவர்த்தியாமென்று சொல்லியும் மேற்கூறிய ஸ்தானங்களில் நீச சத்துரு கிரகங்களிருக்கில் தேகபீடையா மென்றும் பொதுவாகக் கூறியிருப்பதால் அந்த ஸ்தானங்கள் சுபர்களுக்கு நீச ஸ்தானமாக யிருந்தாலும் அல்லது பாபர்களுக்கு நீச ஸ்தானமாக யிருந்தாலும் அல்லது இருவித கிரகங்களுக்கும் சத்துரு வீடாக இருந்தாலும் வியாதியினால் பீடையையே சொல்ல வேண்டு மென்பது எமதபிப்பிராய மாதலால் அவரவர்களும் சப்தார்த்தத்துக்கும் யுக்திக்கும் ஒற்றுமையான அர்த்தத்தை யமைத்துக்கொள்க.

ரோககாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

ம்ருத்யுகாண்டப்ராரம்ப:.

மரணஸ்ய விதாநாநி ஜ்ஞாதவ்யாநி மநீஷிபி: |
வ்ருஷஸ்ய வ்ருஷஸ்யாத்ர ஸிம்ஹஸ்யாத்ர ஹரேஸ்ததா ||1||
கடிநா வ்ருஶ்சிகஸ்யாத்ர கும்பஸ்யாத்ர கடஸ்ய ச |
உச்யாநீதி ஜ்ஞாதவ்யா ராஶௌ சைவம் ஸமேஷ்வபி ||2||
மரணஞ்ச ஸமே தத்ர ரோகிணாம் நாத்ர ஸம்ஶய: |
துலாயாம் கார்முகம் தத்ர நம்ருத்யுர்விபர்யய: ||3||
சாபஸ்ய துலாயாம் தத்ர ரோகிணாம் ம்ருதிராதிஶேத்||

(என் + ள்.) (மானிடர்கள் மரண நிர்ணயத்தை அவசியம் அறிந்துகொள்ள வேண்டியவர்க ளாதலால் அவ்விஷயத்தை இக்காண்டத்தாற் கூறுகின்றனர்.) விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இந்நான்கிராசிகளி லொன்று ஆரூடமாகவும், அவ்வாரூடராசியே சத்திராசியாகவும் வரில், ரோகி மரணத்தை யடையான்; துலாம் ஆரூடமாய்த் தனுசுகவிக்கில் வியாதி மரணத்தைக்கொடுக்காது, கண்டமாம்; தனுசு ஆரூடமாகித் துலாம் கவிக்கில் ரோகி மரணத்தை யடைவான்.

மேஷகர்கடநக்ராணாம் த்ருதீயம் சத்ரகம் யதி ||4||
ரோகிணாமபி கேஹவ்யாயி ஸித்திப்ரயாதி விசக்ஷணா: |
யுக்மகந்யாஜஷாணாஞ்ச சேகாதஶம் யதி ||5||
மரணம் ஸம்பவேத்ராம வீதிதாநாம் நஸம்ஶய: |
நீசே ச வ்யாத்யாயி சோக்ஷஸ்தே தாரணமாதிஶேத் ||6||

(என் + ள்.) மேஷம், கடகம், மகரம் இம் மூன்றிலொன்று ஆரூட விராசியாகி, அதற்கு மூன்றாமிடமாகிய மிதுனம், கன்னி மீனம், சத்திரமாகவரியில் ரோகிக்குக்கண்டமானவியாதி.மிதுனம், கன்னி, மீனம் இம்மூன்றி லொன்று ஆரூடவிராசியாகி, அதற்கு கக-ம்இடமாகிய மேஷம், கடகம், மகரம் சத்திரமாகவரில், ரோகி மரணமடைவான். ஆரூடமே சத்திரமாக வருகிற விருஷபம் சிமமம் விருச்சிகம் கும்பம் இந்நான்கு விராசிகளுக்கும் உச்சஸ்தானமென்று பெயர். ஆரூடத்திற்கு ௩, கக-ம் இராசிகள் சத்திரமாக

வருவதற்கு நீசஸ்தான மென்று பெயர். உச்சத்திற்கு மரண மில்லை, நீசத்திற்கு மரணமாம்.

ஸூர்யே பலவதி வஹ்நேர் சந்த்ரே ஜலாத்பௌமே சஸ்த்ரேணைவ ச |
புதே பலயுதே வாயோ: குரௌ கு(க்ஷி)ரோகதோ ம்ருதி: ||எ||
பலயுக்தே சுக்ரே சீதாத் சநௌ க்ஷுத்ப்ரபீடயா |
ராஹௌ விஷேண ஜீவஸ்ய கேதௌ ரோகேண நஶ்யதி ||அ||

(என்+ள்.) சூரியன் பலவானாகில் நெருப்பினாலும், சந்திரன் பலவானாகில் ஜலத்தினாலும், செவ்வாய் பலவானாகில் ஆயுதத்தினாலும், புதன் பலவானாகில் பனி, காற்று இவைகளினாலும், குரு பலவானாகில் வயிற்றுநோயாலும், சுக்கிரன் பலவானாகில் குளிரினாலும், சனி பலவானாகில் பசியினாலும், இராகு பலவானாகில் விஷத்தாலும் மரணமா மென்க.

சூரியன்முதல் இராகுவரையிலுள்ள எட்டுக்கிரகங்களுக்கும் இன்னாரின்னார் பலவானாகில் இவ்விதமான மரணமாமென்று கூறினாரேயன்றி, இன்ன ஸ்தானத்திலிருக்கவேண்டுமென்று கூறாமையால் உதயத்திற்கு கக-ம் இடம் சத்திரமாகி, அதில்சூரியாதி கிரகங்களிருக்கிலும் அல்லது கக-ம்இடத்தைச் சத்திரமாகக் கொண்டுள்ள அவ்வுதயத்தி லிருக்கிலும், மேற்கூறிய வியாதிகளாமெனப் பொருள் படுத்திக்கொள்ளவும்.

விதோர் ஷஷ்டாஷ்டமே வாபி ஸப்தமே வா யதி ஸ்திதா: |
ரோகஸ்தாநேஷு பாபாஸ்சேத் ரோகிணோ மரணம் த்ருவம் ||கூ||

(என்+ள்.) சந்திரனுக்கு கூ-எ-அ-ம் இடங்களில் பாபர்களிருக்கில் அல்லது ரோகஸ்தானமான கூ-ம் இடத்திற்காவது, மரணஸ்தானமான அ-ம் இடத்திற்காவது கூ-எ-அ-மிடங்களில் பாபர்களிருக்கில் ரோகி மரணமடைவான்.

ஆரூடே மரணஸ்தாநம் தஸ்மாதஷ்டமகே சசீ |
பாபா: பஶ்யந்தி சேத்தத்ர ரோகிணாம் க்ஷயமேஷ்யதி: ||

(என்+ள்.) மரணராசி ஆரூடமாய் அதற்கு அ-ல் சந்திரனிருந்து பாபக் கிரகங்கள் பார்க்கில் ரோகி மரண மடைவான்.

ஆரூடே சத்ரராஸௌ வா ஸ்திதா யோகித ஸேவ ஸௌரே: |
சத்ரிகாமஸ்ய மரணம் கேதுராஹ்வோ: பாபக்ருதேர் நா ||கக||

(என் + ள்.) ஆரூடம் அ-ம் இடமான மரணஸ்தானம் இவைகளிலிருக்கின்றனவும் பார்க்கின்றனவுமான கிரகங்களைக்கொண்டு மரணத்தின் வருஷாதி காலகணிதஞ் செய்யவும். (வருஷாதி கால்ங்களை ஸம்ஞாகாண்டத்திற் காண்க.)

த்ருதீயேஹாநிபஸ்யந்தே உதயே வா பவந்தி சேத் ।
உதயாஹாந்மரணம் ப்ரூயாத் ஸூர்யே ஜீவே த்ருதீயகே ॥ ௧௨ ॥
ஸப்தாஹாந்மரணம் ப்ரூயாத் ஜ்யாமிணாதிதிவங்கிரோ ॥

(என் + ள்.) உதயத்திற்கு ௩-ல் சூரியன், ௧௦-ல் பாபர்கள் இப்படியிருக்கில் ௧௦-நாளில் மரணம், ௩-ல் குரு, சுக்கிரன் இவர்களிருக்கில் ௭-நாளில் மரணம்.

த்விதீயே ஸப்தமே சைவ பாபாஸ்திஷ்டந்தி வை யதா ॥ ௧௩ ॥
த்ரிதிநாந்ம்ருத்யுரித்யுக்தம் ஸூர்யே கேதௌ ததைவ ச ।
ததஸ்ஸப்தமகே ஸௌரிமந்தே ம்ருத்யுர்திநே த்ரயே ॥ ௧௪ ॥

(என் + ள்.) உ-எ-௧௦ இவைகளில் பாபர்களிருந்தால் ௩-நாளில் மரணம், ௧௦-ல் சூரியன், இராகு இவர்களிருந்து அவர்களுக்கு எ-ல் சனி, செவ்வாய் இவர்களிருக்கில் அன்றையத் தினமே மரணமாம்.

உதயாத்ஸப்தமே சைவ பாபாஸ்ஸந்தி திநாந்த்ரிதி: ।
ஆரூடோதயமத்யா: பாபாஸ்ஸ்யு: ஸப்தமே திநாந்த்ரிதி: ॥ ௧௫ ॥

(என் + ள்.) உதயத்திற்கு ச-அ-இவைகளில் பாபர்களிருக்கில் அ-நாளில் மரணம், உதயத்திலும் ஆரூடத்திலும் பாபர்களிருக்கில் ௧௪-நாளில் மரணம்.

ஸ்திரராசௌ ஸ்வதேசே ச பரதேசாஞ்சரோதயே: ।
உபயராசௌ ததா மத்யே மரணம் வததேசமாயா: ॥ ௧௬ ॥

(என் + ள்.) மரணம் எத்தேயத்திலேயோவென ஐயமுற்றுப் பிரச்நங் கேட்கையில் ஸ்திரராசி உதயமாகில் தன் தேசத்தில் மரண மென்றும், சரராசி உதயமாகில் அன்னியதேசத்தி லென்றும், உபயராசி உதயமாகில் மத்தியதேசத்தி லென்றுஞ் சொல்ல வேண்டியது.

(இச்சுலோகத்தில் சர, ஸ்திர, உபய, ராசிகளாகில் இன்ன பலனென்று பொதுப்படக் கூறியிருப்பதால், உதயமென்று வருவித்துரைத்தாம். ஆரூடமெனினு மொக்கும்.)

க்ரஹோச்சஸம்ஸ்தே ஸ்வர்க்கமாப்நோதி ரிபுக்ஷேத்ரே ம்ருகோத்பவ: |
நீசே நரகம்யாதி மித்ரே மித்ரக்ருஹோத்பவ: ||௧௭||
ஸ்வக்ஷேத்ரே ஸ்வகுலேஜாதோ ம்ருதாநாம் ஸம்ஶயே ஸ்புட: ||

இதி ஜ்யோதிர்வித்ஜ்ஞாநப்ரதீபிகாயாம்

ம்ருத்யுப்ரஶ்நகாண்ட:.

(என் + ள்.) இம்மனுஷ்யன் மரணத்தை யடையில் மோக்ஷமோ, அல்லது நரகமோ, வேறு எக்கதியோ வென்று அவனுடன் பிரச்நம் பண்ணுங்காலத்தில், உதயத்தில் கிரகம் உச்சமடைந்திருக்கில் ஸ்வர்க்கத்தை யடைவானென்றும், சத்துருவீட்டை யடைந்திருக்கில் மிருகமாய்ப் பிறப்பானென்றும், நீசத்தை யடைந்திருக்கில் நரகத்தை யடைவானென்றும், மித்திர க்ஷேத்திரத்தி லிருக்கில் தன்னிஷ்டன் வீட்டில் பிறப்பானென்றும், ஸ்வக்ஷேத்திரத்தி லிருக்கில் தன் குலத்திலேயே மறுபடியும் பிறப்பானென்றும் சோதிட வித்வச் சிகாமணிகள் சொல்லக்கடவர்கள். (உதயலக்கினத்தில் கிரகங்கள் உச்சம், பகை, நீசம், ஸ்வக்ஷேத்திரம், மித்திர க்ஷேத்திரம் இவைகள் பெற்று நிற்கில் இன்னபிறப்பா மென்றதை உதயலக்கினாதிபதி உச்ச ஸ்வக்ஷேத்திராதிகளை அடைந்திருக்கினும் மேற்கூறிய பலன்களையே சொல்க.) இக்கிரந்தத்தில் மோக்ஷம், நரகம், மறுபிறப்பு என்ற இவைகளைப் பொதுவாகக் கூறியிருப்பதால் அதிலும் முன் இவன் எந்தலோகத்தை யுடைந்தவனோ வென்றும், இனி எந்தலோகத்தை யடைவானோ வென்றும் ஆரூடங் கேட்கில், பிரகஜ்ஜாதகம் நைர்யாணி காத்தியாயம் 14-15-வது சுலோகங்களிற் காண்க.

மிருத்தியுகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞானப்ரதீபிகாயாம்.

போஜனப்ரகரணம்.

உதயாதிவிசேஷேண போஜனாதிவிநிர்ணயம் |
பாத்ரஸங்க்யாம் ரிபூன் மித்ராஞ் ஜநாநாம் ரஸபோஜநம் ||க||
ஸஹபோக்த்ருஜநாநாம் ச பாத்ராணி ச விசேஷத: வதாமி ||

(என் + ள்.) ஒருவன் வந்து இன்று நான் எப்பாத்திரத்தில் என்ன கறிபதார்த்தங்களுடனும், என்னரஸங்களுடனும் சாப்பிட்டேன்? அப்போது என்னுடன்கூடச் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்கள்? அவர்கள் எனக்குச் சிநேகிதர்களோ? அல்லது சத்துருக்களோ? சமயல் பண்ணின பாத்திரம் மண் பாத்திரமா? அல்லது லோக வர்க்கமா? அதின் விபரங்களைச் சொல்லக்கடவீரென்று பிரச்நஞ் செய்கையில், அவ்விஷயங்களை நிர்ணயிக்கும் பொருட்டு இப்போசன காண்டத்தைக் கூறுகின்றார்.

மேஷே சாஜம் ச சாகம் ச வ்ருஷே ததிபயோத்ருதே ||உ||
யுக்மஸிம்ஹதநுஷ்வேவ மத்ஸ்யமாம்ஸாதிபோஜநம் |
கர்க்யலிவ்ருச்சிகே நக்ரே மீநே பக்வபலாதிகம் ||ங||
கந்யாதுலாககும்பேஷு சாகஹீநம் து போஜநம் ||

(என் + ள்.) உதயராசி மேஷமாகில் ஆட்டின் மாம்ஸம் கீரை இவைகளுடனும், விருஷபமாகில் தயிர் பால் இவைகளுடனும், மிதுனம், சிம்மம், தனுசு இவைகளாகில் மீன் மாம்ஸத்துடனும், கடகம், விருச்சிகம், மகரம், மீனம் இவைகளாகில் பழுத்த பழங்களுடனும், கன்னி துலாம் கும்பம் இவைகளாகில் கறி முதலியவைகளில்லாத வெறு மன்னத்துடனும் சாப்பிட்டாயென்று சொல்லவும். (மிதுன சிம்ம தனுசுக்களுதயமாகில் வாழைக்காய் புடலங்காய் இன்னுங் கொடிகளி லுண்டாகும் க்காய் கறி முதலானவைகளுடன் போசனஞ் செய்தாயென்று சொல்லும் நூல்களுமுள.)

ஸாநோத்திக்தகடுக்ஷார திக்தம் ஸ்நிக்தரஸாஹ்ருதா ||ச||
க்ருஷ்ணம் க்ஷீரம் ரஸம் யுக்தம் ஸசிவர்த்ரஸ்ய போஜநம் |
ஸஜ்ஜதாந்யவடம் சாநிலக்ஷீரஸ்ய ஸஹசிந்ஷிண: ||ரு||

மத்யாஹ்நம் ஶோஷவடகம் ஸக்ருதம் ஜீவஹோஜநம் ।
பாயஸாந்நம் ப்ருதமம் ஶுக்ரே போஜநமீரிதம் ॥கூ॥

க்ஷௌத்ரம் மத்ஸ்யமாம்ஸம் ச விதுஜ்ஞே போஜநம்
ஸ்ம்ருதம் । ஸர்வே தைலகோத்ரவாந்நம் ஶநைஶ்சரே போஜநம் ॥
ஸுத்ரஸ்புகந்த பத்ரம் ஸந்தேஷ்டம் தேஜோபோஜநம் ஶநேஶ ।
காஷாயாம்லக்ஷாரகேஶோ ஸ்வாபஸமந்விதம் ஸூர்யஸ்ய போஜனம் ॥அ॥

(என்+ள்.) உதயத்தில் சூரியனிருக்கில் கசப்பு, உறைப்பு, உவர்ப்பு இவைகள் கலந்துள்ள பதார்த்தமென்றும், சந்திரனிருக்கில் கிழங்கு அல்லது மீன் மாம்ஸமென்றும், செவ்வாயிருக்கில் காரரிசி தேன் இவைகளென்றும், புதனிருக்கில்வறுத்தவைகளான வடகம் அப்பளம் வற்றல் முதலியவைகளென்றும், குரு விருக்கில்சர்க்கரைப்பொங்கல் உளுத்தம்வடை பருப்பு பாயஸம் சுத்தான்னம் நெய் முதலியவைகளென்றும்,சுக்கிரனிருக்கில் தேன் அப்பம், பால், நெய், கறி முதலியவைகளென்றும், சனி இருக்கில் எண்ணெய், வரகு முதலிய புன்செய்த் தானியங்களென்றும், இராகு கேது இவர்களிருக்கில் குழம்புஎன்றும் இவ்விதங்களாகப் போஜனபதார்த்தங்களைச்சொல்க.(காஷாயாம்லக்ஷாரகேஶோஸ்வா) என்றதை (ஊஷாயாம்லக்ஷாரகேஶோஸ்வா) என்று பாடமாகக்கொண்டு உவர்ச்சம்பந்தமாயுள்ள பதார்த்தங்களென்று சிலர்பொருள் படுத்துகின்றனர். அது அஸம்பாவிதம். ஏனெனில் உலகத்தில் இப்போது வழக்கமாய்ச் சாப்பிட்டுக்கொண்டு வருகிற அன்னம் கறி பக்ஷணம்முதலியவைகளில் குழம்பு ஒன்று நீங்கலாக மற்றப் பதார்த்தங்களைச் சூரியன் முதல் சனி வரையிலுள்ள ஏழு கிரகத்திற்குஞ் சொல்லி யிருப்பதாலும், சூரியனுக்கு உவர்ப்பு என்று முன் சொல்லிவிட்டதாலும், போஜனத்துக்கு முக்கியமான குழம்பைஒரு கிரகத்துக்குஞ் சொல்லாமையாலும், இராகு கேதுக்களுக்குக் குழம்பையே பொருள் செய்தமை காண்க.

பாபாஸ்ஸூர்யகுஜாராஹு க்ருஷ்ணேந்துகேதவ꞉ ।
பாபயுக்தோ புதோ பாபீ ஶுபயுக்தோ ஶுப꞉ ஸ்ம்ருத꞉ ॥கூ॥

(என்+ள்.) சூரியன், செவ்வாய், சனி, இராகு, தேய்பிறைச்சந்திரன்,கேது இவர்கள் பாபர்கள். வளர்பிறைச் சந்திரன்,குரு சுக்கிரன் இவர்கள் சுபர்கள். புதன் பாபர்களுடன் கூடில் பாபி, சுபர்களுடன் கூடில் சுபன்.

ஓஜராஶௌ ஸௌம்யஸந்த்ருஷ்டே க்ஷுதா போஜநமாப்நுதே |
யுக்மராஶௌ க்ரூரத்ருஷ்டே க்ஷுதா ஸம்ப்ராப்தமல்பமஶ்நுதே ||௧௦||
யுக்மராஶௌ ஶநித்ருஷ்டே பர்யுஷாந்நம் ச பக்ஷயேத் ||

(என் + ள்.) ஓஜராசியைச் சுபக்கிரகங்கள்பார்க்கில் பசியுடன் புசித்தா யென்றும், உக்மராசியைச் சனிநீங்கலான மற்றப் பாபக் கிரகங்கள் பார்க்கில் அற்பப் பசியினால் கொஞ்சமாகச் சாப்பிட்டா யென்றும், உக்மராசியைச் சனிபார்க்கில் பசியுடன் பழமையாயுள்ள அன்னத்தைச் சாப்பிட்டா யென்றுஞ் சொல்க. (இவ்விடத்தில் இராகுவுக்குச் சொல்லாததால் சனிக்குச் சொன்னவையே சொல்க.)

ஸூர்யாரயோஸ்து ஸம்யோகே மாம்ஸஸம்யுக்தபோஜநம் ||௧௧||
நவநீதக்ருதக்ஷீரததிபோஜநமாதிஶேத் |
ஜலராஶிஷு பாபேஷு ஸௌம்யேஷ்விதரேஷு ச ||௧௨||
ஸதைலம் போஜநம் ப்ரூயாதிதி ஜ்ஞாத்வா விசக்ஷண: ||

(என் + ள்.) சூரியன், செவ்வாய் இவர்கள் சேர்ந்திருக்கில் மாம்ஸத்துடன் புசித்தாயென்றும், சந்திரன், சுக்கிரன், இராகு இம்மூவர்களுங் கூடியிருக்கில் வெண்ணெய், தயிர், நெய், பால் இவைகளுடன் புஜித்தாயென்றும், ஜலராசிகளில் பாபர்களும் மற்ற இராசிகளில் சுபர்களுமிருக்கில் எண்ணெயுடன் போஜனஞ் செய்தாயென்றுஞ் சொல்க.

எண்ணெய்முதலியவைகளுடன் புஜித்தா யென்பதைஅவைகள் மிகுதியாய்ச் சேர்ந்துள்ள பதார்த்தங்களுடனெனப் பொருள் கொள்ளவும்.

பஞ்சவர்காக்ஷயா தத்வர்ணே போஜநாநி விநிர்திஶேத் ||௧௩||
ஶ்யாமவர்ணே ஶாகாதீந் வதேத் ஸர்வம் விசக்ஷண: |
ஜீவவர்ணே போக்த்ருணாம் ச ஶ்ரேஷ்டாந்நம் ஸாதிகம் வதேத் ||௧௪||
ஸவர்ணோ வா மிஶ்ரத்வே விஶேஷேண ப்ருணாம் வதேத் ||

இதி ஜைமிநிவிரசிதஜாதகதீபிகாயாம்

போஜநப்ரகரணம் நாம ஷோடஶகாண்ட:

(என் + ள்.) தாதுகாண்டத்திற் கிரகங்களுக்குச் சொல்லிய லோகவர்க்கங்களைக்கொண்டு சமயல்செய்ததும் போஜனஞ் செய்

ததுமான பாத்திர பேதங்களையும் மூலகாண்டத்திற் கிரகங்களுக்குச் சொல்லிய மூல வர்க்கங்களைக் கொண்டும், ஜீவகாண்டத்திற் கிரகங்களுக்குச் சொல்லிய ஜீவவர்க்கங்களைக் கொண்டும் புஜித்த காய் கறி மாம்ஸம் வகையறுக்களையும் ஸம்க்ஞாகாண்டத்திற் கிரகங்களுக்குச் சொல்லிய நிறம், குணம், ஸ்வரூபம், சத்துரு, மித்திரனென்ற இவைகளைக்கொண்டு கூடப் புஜித்தவர்களின் நிறம், ஜாதி, குணம், வளர்த்தி, சிநேகிதன், (அல்லது) சத்துரு என்கிற இவைகளையும் நன்காராய்ந்து பிரச்னகர்களுக்குச் சொல்லவும்.

போஜனகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞானப்ரதீபிகாயாம்.

ஸ்வப்னகாண்டப்ராரம்ப:.

ஸ்வப்னப்ரச்னஸ்ய யத்ஸ்வப்னம் வக்ஷ்யாமி ஹிதகாம்யயா |
மேஷோதயே தேவக்ருஹா: ப்ராஸாதாஸ்ஸம்பவந்தி ஹி ||௧||
வ்ருஷோதயே தினாதீஶ ஜ்ஞாத தேஹஸ்ய தர்ஶனம் |
மிதுனஸ்யோதயே விப்ர தபஸ்வி வதனானி ச ||௨||
கர்கடஸ்யோதயே க்ஷேத்ரம் ஸந்த்ருஷ்ட்வா சவனக்ருஹம் |
த்ருணான்யாதாய ஹஸ்தாப்யாம் கச்சதீதி நிகத்யதே ||௩||
ஸிம்ஹோதயே கிராதாம்ஶ்ச மஹிஷீம் கிரிபத்ததிம் |
கன்யோதயே விவாஹஞ்ச ஸ்வர்ணபூஷாவஸ்யந்தம் ||௪||

(என் + ள்.) நான் தூங்குங்காலத்திற் கண்டதான சொப்பனங்கள் யாவற்றையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்கும் பிரச்னகர்களுக்குச் சொல்லுகின்றார். (பிரச்னகாலத்தில் மேஷம் உதயாரூடங்களாகவரில் கோவில், அரண்மனை, உப்பரிகை இவைகளைக் கண்டதாகவும், விருஷபம் உதயாரூடங்களாகவரில் சூரியனையும், தனக்குத் தெரிந்த மனுஷ்யனையும் பார்த்ததாகவும், மிதுனம், உதயாரூடங்களாகவரில் பிராமணாள், சன்னியாசிகள் இவர்களைக் கண்டதாகவும், கடகம் உதயாரூடங்களாகவரில் வயல்களைப் பார்த்துவிட்டுப் புற்களைக் கைகளிற் கொண்டுபோனதாகவும், சிங்கம் உதயாரூடங்களாகவரில் எருமை, மலைவழி இவைகளைப் பார்த்த

தாகவும், கன்னி உதயாரூடங்களாகவரில் மொட்டச்சியுடன் விளை யாடிக் கொண்டிருந்ததாகவுஞ் சொல்க.)

துலோத₃யே து கநகம் ந்ருபம் வைஶ்யஞ்ச ஸர்வஶ: |
வ்ருஶ்சிகஸ்யோத₃யே ஸ்வப்நே பஶ்யேத்₃ம்ருகா₃தி₃கம் ||௫||
வ்ருஷாஶ்வக₃ஜயாநாத்₃யாந் ஸ்வப்நே த்₃ருஷ்ட்வா நஶங்கித: |
உத₃யே தா₄நுஷேऽவஶ்யம் புஷ்பம் க₃ந்த₄ம் ப₂லம் பலம் ||௬||
ம்ருகோ₃த₃யே நதீ₃ம் நாரீம் புமாம்ஸம் ஸ்வப்நேஷு பஶ்யதி |
க₄டோத₃யே த்வாத₃ர்ஶம் மீநே த₄நபதிம் வதே₃த் ||௭||

(என்+ள்.) துலாம் உதயாரூடங்களாகவரில் அரசன், வைசி யன் இவர்களையும், விருச்சிகம் உதயாரூடங்களாக வரில் தேள், மான், எருது, குதிரை முதலியவைகளையும், தனுசு உதயாரூடங்க ளாக வரில் புஷ்பம், சந்தனம், பழம், மாம்ஸம் முதலியவைகளை யும், மகரம் உதயாரூடங்களாக வரில் ஆற்றையும், பெண்ணையும், புருஷனையும், கும்பம் உதயாரூடங்களாகவரில் கண்ணாடியையும், மீனம் உதயாரூடங்களாகவரில் தனவான், அல்லது குபேரன் இவர்களையும் கனவிற் கண்டா யென்றுஞ் சொல்க.

லக்₃நேந ஸ்வப்நம் ஜ்ஞாத்வா த்ருதீயாத்₃ பூ₄தகாலிகம் |
ஸப்தமாஜ்ஜாக்₃ரஜம் ப₄விஷ்யத்₃த₃ஶமாத்₃ வதே₃த் ||௮||

(என்+ள்.) இலக்கினத்தைக் கொண்டு நிகழ்கால சொப்ப னத்தையும், ௩-ம் இடத்தைக்கொண்டு இதற்குமுன் கண்டதான சொப்பனத்தையும், ௭-ம்இடத்தைக்கொண்டுபின் காணப்போகிற தான சொப்பனத்தையும், ௧௦-ம் இடத்தைக்கொண்டு தூங்காது விழித்துக் கொண்டிருக்கும்போதே காணும் சொப்பனத்தையும் சொல்லவேண்டியது.

ஶுக்ரே ஶுக்லப்ரதே₃ஶாந் ஸ்யு: ஶுக்ரோத₃யேஷு ச |
யக்ஷகிந்நரக₃ந்த₄ர்வாந் ஸுராந் ஸௌம்யோத₃யே வதே₃த் ||
சதுர்த₂ஸ்ய ஸ்வப்நம் ப்ரயாணஸ்ய நிரீக்ஷணே: ||

(என்+ள்.) இச்சுலோகத்தால் விசேஷமொன்று சொல்லப் படுகின்றது. உதயாரூடங்களில் சுக்கிரனிருக்கில் அதிக வெள்ளை யான இடங்களையும், புதனிருக்கில் தேவர், யக்ஷர், கின்னரர், கருடர், கந்தருவர் முதலானவர்களையும் சொப்பனத்திற் கண்டதாக

வுஞ் சொல்க. ௧௦-ம் இடத்தாலும் நாலாமிடத்தைப் பார்க்கிற கிரகங்களாலும் ஸ்வப்பனத்தை யறிக.

ஸூர்யே த்ருஷ்டே ம்ருதாநுவம்ஶ: வசநம் ஶாக்ஷஶாவிநாம் ||௧௦||
சந்த்ரே ஶ்வபசவாக்யவசநம் ராஹோர்பௌமே து மாம்ஸகம் |
ஶாக்ரு ஸௌம்யே ஜதாதீநிவஸநம் ஸாரோஹாபிநோ: ||௧௧||
ஹேமம் ஜீவஸ்ய ஶுக்ரஸ்ய தேநம் ஶநேர்த்ருடம் |
சந்த்ரஸ்ய ஸ்வச்சாயாம் ஶௌரிர்த்ருஷ்டிஸுராவிஷவீக்ஷணம் ||௧௨||
உக்தாநுக்தஸ்ய ஸ்வப்நஸ்ய வ்யாக்யாஸம்ஜ்ஞாவஶாத்புநா||

இதி ஜைமிநிவிரசிதஜ்ஞாநப்ரதீபிகாயாம்

ஸ்வப்நப்ரகரணம் நாமாஷ்டத்ரிம்ஶகாண்ட:.

(என்+ள்.) மேற்கூறிய சுலோகத்தின்படி உதயாரூடங்களுக்கு ௧௦-ம்இடத்தைச்சூரியன் பார்க்கில் இறந்தவர்களையும் பட்டுப் போனமரம் முறிந்து மேலே விழுந்ததாகவும், சந்திரன் பார்க்கில் பல்லிசொல்வதைக் கேட்டதாகவும்,அல்லது வேடச்சேரிகளிலுள்ளவர்களின் வார்த்தையைக் கேட்டதாகவும்,செவ்வாய்,இராகு இவ்விருவர்களும் பார்க்கில் மாம்ஸத்தைக் கண்டதாகவும், புதன் பார்க்கில் பசுவைக் கண்டதாகவும், குரு பார்க்கில் பழத்தைக் கண்டதாகவும், சுக்கிரன் பார்க்கில் வெள்ளி, முத்து இவைகளைப் பார்த்ததாகவும், சனி பார்க்கில் மானைக் கண்டதாகவும், மேலும் சந்திரனுக்குத் தன் சாவைக் கண்டதாகவும்,இராகுமாத்திரம் பார்க்கில் கள், விஷம் இவைகளைக் கண்டதாகவுஞ் சொல்க. இன்னம் இக்காண்டத்திற் சொல்லாதவைகளை முன்சொல்லிய ஸம்க்ஞைகளாலறிந்து சொல்லவும்.

சொப்பனகாண்டம் முற்றிற்று.

𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌂.

𑌶𑌕𑍁𑌨𑌕𑌾𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌉𑌭𑌯𑍋𑌦𑌯𑌕𑍇 𑌪𑌥𑌿𑌕𑍋 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌸𑍍𑌥𑌿𑌰𑍋𑌦𑌯𑍇 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌰𑍋𑌧𑍋 𑌨𑌨𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌃 ॥௧॥
𑌚𑌰𑍋𑌦𑌯𑍇 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌭𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌤𑌃 ॥

(என் + ள்.) யாத்திரையைப்பற்றிக் கேட்கும் ஆரூடத்தில் உபயராசி யுதயமாகில் வழிச்செல்பவன் கெடுதலான சகுனத்தைக்கண்டுத் திரும்புவானென்றும், உதயம் ஸ்திரராசியாகில் சகுனம் நன்றாயாகுமென்றும், ஆனால் வேறுகாரணத்தினால் பிரயாணத்திற்கிடையூறுண்டாகுமென்றும், உதயம் சரராசியாகில் சகுனமும் நன்றாயாகுமென்றும், வேறுவிரோதங்கள் கிடையாவென்றுஞ் சொல்க.

𑌭𑌾𑌨𑍌 𑌸𑍍𑌵𑌂𑌗𑌮𑌾𑌵𑌾 𑌶𑍍𑌯𑍇𑌨𑌾 𑌹𑌂𑌸𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥௨॥
𑌭𑍌𑌮𑍇 𑌶𑍃𑌗𑌾𑌲𑌶𑍍𑌵𑌾𑌨𑍌 𑌚 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍋𑌚𑌰𑌃 ।
𑌹𑌂𑌸𑍍𑌯𑌾𑌵 𑌸𑍋𑌮𑌜𑍇 𑌵𑌾𑌰𑌾𑌹𑌂 𑌜𑌲𑌕𑌾𑌕𑌾𑌦𑌿 ॥௩॥
𑌉𑌮𑌕𑍁𑌮𑍍𑌭𑍀𑌚𑍈𑌵 𑌕𑍋𑌟𑌾𑌸𑍍𑌵𑌂𑌗𑌾𑌰𑍀 ।
𑌦𑌧𑌿𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌚𑌕𑍋𑌰𑌾𑌶𑍍𑌚 𑌭𑍃𑌗𑍁𑌸𑍍𑌯𑌾𑌂𑌶𑌿𑌶𑍃𑌨𑍍𑌦𑍀𑌹𑌵𑍇𑌤𑍍 ॥௪॥
𑌦𑌯𑌿𑌤𑍇 𑌸𑍍𑌯𑍁𑌸𑍍𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑌂 𑌸𑌵𑌿𑌤𑍍𑌰𑌨𑌾𑌹𑍃𑌤𑌂 ।
𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌪𑍍𑌯𑍇𑌯𑌾𑌸 𑌬𑌹𑍁𑌕𑌾𑌵𑌤𑍍𑌕𑌾𑌦𑌯𑌃 ॥௫॥

(என் + ள்.) உதயத்தில் சூரியனிருக்கில் இரட்டைக் கருடனையும், சந்திரனிருக்கில் வலியனையும், செவ்வாயிருக்கில் நரி, நாய் இவைகளையும், புதனிருக்கில் மூஞ்சூறையும், குரு விருக்கில் பால்க்குடம், நெய்க்குடம், கோட்டான், காடை, புறா இவைகளையும், சுக்கிரனிருக்கில் தயிர், நாரை, குருவி இவைகளையும், சனியிருக்கில் திருடன், நெருப்பு இவைகளையும், இராகு விருக்கில் விஷசம்பந்தமான ஜீவன்களையும், பிரயாணமாகச் செல்கின்றவன் காண்பான். (இச்சுலோகத்தில் சந்திரன், செவ்வாய், புதன், சனி, இராகு இவர்கட்குப் பக்ஷிகள் சொல்லாமையால் புறநடை கூறுகின்றார்.)

சந்த்³ரோத³யே பி³லாஹீத ஸ்ராஷ பாராவதாத³ய: |
ராஜஹம்ஸோத³யே த்ய்ராகாகோலா ஸதாஜாதிபக்ஷிண: ||௬||
மந்தோ³த³யே த்³ரோணகாகோ ஜ்ஞோத³யே பிங்க³லோலூகம் ||

(என் + ள்.) உதயராசியில் சந்திரனிருக்கில் கோட்டான், புறா, ஊர்க்குருவி, காடை இவைகளையும், புதனிருக்கில் ஆந்தையையும், சனியிருக்கில் அண்டங்காக்கையையும் சொல்க. மேற்சுலோகங்களிலும் இச்சுலோகங்களிலும் செவ்வாய்க்குப் பக்ஷிகள் சொல்லாததால் செவ்வாய் உதயத்திலிருக்கில் நரியென்றே கொள்ளவும்.

ஸ்தி²ரராஶௌ ஸ்தி²ராஸ்து பஶ்யந்தி பு³த்³தா⁴ நிதி ||௭||
உப⁴யே ஸ்வநிதாத்ரம் ஸ்யாச்சரே க³ச்ச²தி வாயஸீ ||

(என் + ள்.) கிரகங்களிருப்பது ஸ்திரராசிகளாகில் மேற்கூறிய பக்ஷிகளுட்கார்ந்திருக்கையில் வழிச் செல்பவன் பார்ப்பானென்றும், சரராசிகளாகில் செல்கின்ற மார்க்கத்தில்பக்ஷிகள் குறுக்காகப் போகுமென்றும், உபயராசிகளாகில் பக்ஷிகளின் சப்தத்தை மாத்திரம்யாத்திரை செல்கின்றவன் கேட்பானேயன்றிப் பக்ஷிகளைக்காணானென்றுஞ் சொல்க.

ஜீவகாண்ட³ப்ரகாரேண பக்ஷிணாம் ந்யாஸ நிர்வாரயேத் ||௮||
பஶ்வேத்ர்யாம் ஸம்ஜ்ஞாதநவஸா மாத்³யக்ஷிணீரயேத் ||

இதி ஜைமினிவிரசித ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
ஶகுநப்ரகரணம் நாம சதுர்த²ஶ்ஶகுநகாண்ட³:.

(என் + ள்.) மேற்கூறிய பக்ஷிகளைத் தவிரக் கிரகங்களுக்கு இதற்குமுன் ஜீவகாண்டத்தில், என்ன பக்ஷிகள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அப்பக்ஷிகளையும், மிருகங்களையும், மனுஷ்யர்களையும், யாத்திரை செல்பவர்கள் காண்பார்கள். அதிலும் உதயத்திலிருக்கிற கிரகம், வலதுபக்கத்தில் மறு, வடு இவைகளையுடையதாகில் இடமாகுமென்றும் இடதுபக்கத்தில் மறு வடு இவைகளையுடையதாகில் வலமாகுமென்றுஞ் சொல்க. மறு, வடுக்களை ஸம்க்ஞா காண்டம் எ0-முதல் எ௨-வரையிலுள்ள சுலோகங்களிற் காண்க.

சகுனகாண்டம் முற்றிற்று.

ஜாதகதீபிகாயாம்.

வைவாஹிககாண்டப்ராரம்ப:.

ப்ரச்னே வைவாஹிகே லக்நே குஜஸூர்யயுதோ யதி |
வைதவ்யம் லபதே நாரீ நாத்ர ஸம்சய: ||௧||
உதயே மந்தஜே நாரீ தாரித்ர்யம் ஸுதநாசனம் |
சந்த்ரோதயே து மரணம் தம்பத்யோ: சீக்ரமேவ ச ||௨||
ஸௌம்யஜீவஸிதாஸ்சைவ யதி தத்ர சிரஞ்ஜீவிதா||

(என்+ள்.) விவாக விஷயமான பிரச்நை கேட்குமிடத்து உதயராசியில் சூரியன், செவ்வா யிவர்களிருக்கில் பெண் விதவை யாவள். சனியிருக்கில் தரித்திரமும், மக்களைப் பெற்றிழப்பு முண்டு. சந்திரனிருக்கில் கலியாணப் பிள்ளைக்கும், பெண்ணுக்கும் சீக்கிரத்தில் மரண முண்டாம். புதன், குரு, சுக்கிரன் இம் மூவர்களுமிருக்கில் தம்பதிகள் சுகமாய்ப் புத்திர பௌத்திர சம்பத்துக்களுடன் வெகுகாலம் வாழ்வார்கள்.

த்விதீயே தத்ர ஸூர்யே ச பௌமே மந்தே ச பர்த்ருவிரஹே ||௩||
ஸ்திதா யத்ர த்ரயோ நைவ பர்த்தாரம் ஸேவதே ஸதா |
த்விதீயே சந்த்ரே ஸுபுத்ரா ராஹௌ து வ்யபிசாரிணீ ||௪||
ஸௌம்யக்ரஹா த்விதீயஸ்தா: ஸம்பத்ஸௌபாக்யவர்த்திநீ: ||

(என்+ள்.) ௨-ம் இடத்தில் சூரியன், செவ்வாய், சனி இவர்களிருக்கில் புருஷனுக்கு அடங்காமல் தன்னிஷ்டம்போ விருப்பவளும் சரித்திரமுடையவளுமாம். சந்திரனிருக்கில் வெகு பிள்ளைகளைப் பெறுவள். இராகு விருக்கில் விபசாரி. மற்றவர்களான சுபக்கிரகங்க ளிருக்கில் எல்லாச் சம்பத்துகளையு மடைந்து ஆயுளுள்ள வரையில் சுமங்கலியாயு மிருப்பாள்.

த்ருதீயே ஜீவராஹுஸ்தே ஸாவம்யம் ப்ராப்யதே த்ருவம் ||௫||
சேஷா த்ருதீயராசிஸ்தா தநஸௌக்யப்ரதா: ஸதா ||

(என்+ள்.) ௩-ம் இடத்தில் குரு இராகு இவர்களிருக்கில் மலடியாம். மற்றவர்களிருக்கில் தனம் சுகம் இவைகளுடனும் வெகு க்ஷேமங்களுடனு மிருப்பாள்.

[illegible] ||௬||
[illegible] |
[illegible] ||௭||

(என்+ள்.) ௪-ம் இடத்தில் சூரியன் சந்திரன் இவர்களிருக்கில் களத்திரம் பாபியாம். சனியிருக்கில் இழிகுலத்தாள். இராகுவிருக்கில் சக்களத்தியை யுடையவள். செவ்வாய் புதன் குரு இவர்க ளிருக்கில் தனத்துடன் கூடிய புருஷனை விவாகஞ் செய்துகொள்ளுவள்.

[illegible] |
[illegible] ||௮||
[illegible] |
[illegible] ||

(என்+ள்.) ௫-ம் இடத்தில் சூரியன் சந்திரன் இவர்களிருக்கில் மலடி. செவ்வாயிருக்கில் புத்திரனைப்பெற்றிழப்பாள். புதன் குரு, சுக்கிரன் இவர்களிருக்கில் அநேகம் புத்திரனை யுடையவள். சனி யிருக்கில் எப்போதும் வியாதியுடையவள்.

[illegible] |
[illegible] ||௧௦||
[illegible] ||

(என்+ள்.) ௬-ம் இடத்தில் சந்திரனிருக்கில் விதவை. புதன் இருக்கில் சண்டைக்காரி. சுக்கிரனிருக்கில் வெகுகாலம் சுமங்கலியாயிருப்பாள். மற்றவர்களாகிய சூரியன், செவ்வாய், குரு, சனி, இராகு இவர்க ளிருக்கில் சுகம் குடும்ப விருத்தி இவைகளுடையவளா யிருப்பாள்.

[illegible] ||௧௧||
[illegible] |
[illegible] ||௧௨||
[illegible] |
[illegible] ||௧௩||
[illegible] ||

(என் + ள்.) எ-ம் இடத்தில் சூரியனிருக்கில் பிணியுடையாள். சந்திரனிருக்கில் காய்ச்சலுடையாள். செவ்வா யிருக்கில் அன்னி யன் கைவசமாவாள். புதன், குரு இவர்களிருக்கில் எல்லா நன் மைகளு முடையாள். சுக்கிரனிருக்கில் சீக்கிரம் மரணமடைவள். சனி இருக்கில் சீக்கிரம் விதவையாவள். இராகு விருக்கிலும் வித வையாம். (இராகுவிருக்கிலும் விதவையாவாளென்றதைக்கொஞ்ச காலத்திற்குப்பின் விதவையாவாளென்று வருவித்துக்கொள்க.)

அஷ்டமஸ்தாஸ்து ஸூர்யாரௌ ஜம் மா நாசயதீவ ||கச||
ஸநிஜ்ஜீவஸ்ஸிதஸ்தத்ர ஸரீஷ்ட்ரூதேஹவாஹிநீ|
ஸூதிதாராச்ச்வேணநஜேந்த்ரா வ்யூஹேவைவாஹிகேவயோஃ|| கரு||

(என் + ள்.) அ-ம் இடத்தில் சூரியன், செவ்வாய் இவர்களிரு க்கில் விதவை. சந்திரனிருக்கில் மரணத்தை யடைவள். புதன் சனி இவர்களிருக்கில் எல்லா நன்மைகளும் விருத்தியாகவும் தம் பதிகள் சுகமாகவு மிருப்பார்கள். குரு, சுக்கிரன், இராகு இவர்க ளிருக்கில் எல்லாத் தீமைகளையு மடைந்து தம்பதிகள் துக்கப்படு வார்கள்.

நவமேயதிஸௌம்யஸ்ஸ்யா த்யிஹீ நாஹவேத்யயோஃ ।
ஜீவசந்த்ரௌயதிஸ்யாதாம் பஹுவத்ஸதீவயோஃ ||கசு||
அந்யேதிஷ்டிநவமே யதிவம்ஸ்யாநஸம்ஸயஃ||

(என் + ள்.) கூ-ம் இடத்தில் புதனிருக்கில் துராசாரமுடைய வள். சந்திரன், குரு இவர்களிருக்கில் வெகு பிள்ளைகளைப் பெறு வள். மற்றவர்களாகிய சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி, இராகு இவர்களிருக்கில் மலடியாம்.

தஸமேயதிஸூர்யஜ்ஞௌஸ்யா தாம்ஹவதிஹாதிநீ ||கஎ||
ஹாமேந்தோயதிவேஸ்யாஸ்யா த்யவாகிந்தும்ஜாஹயஃ |
ரிக்தாமர்யாஸ்ருக்ஜாதிதயதிஸ்யாதாம்ஸுஹாம்வதேஷு||கஅ||

(என் + ள்.) கo-ம் இடத்தில் சூரியன், புதன் இவர்களிருக்கில் சகல சுபங்க ளுடனும் வாழ்வள். சந்திர னிருக்கில் மலடி, செவ் வாய், சனி, இராகு இவர்களிருக்கில் விதவை. குரு விருக்கில் தரித்திரமுடையவள். சுக்கிரனிருக்கில் வேசித்தொழிலுடையவள்.

ஹாஹஸ்யாநமதாஸ்வேந்து வந்த்ரஸௌஹாமந்தஸிஜிதா:||

(என் + ள்.) ௧௧-ம் இடத்தில் சூரியன்முதலாயுள்ள ஒன்பது கிரகங்களில் எந்தக் கிரக மிருந்தாலும் புத்திர சம்பத்து முதலிய வெல்லாநன்மைகளு முண்டாகும்.

த்வாதசஸ்தே ரவௌ ராஹௌ வந்த்யா ஸ்யாந்மரணம் விதௌ ||௧௯||
ஶநிபௌமயுதே ஸ்யாத்தாம் ஸுராபாநவஶா ஸதீ |
புத்ரயுக் ஸௌம்யே ஜீவே து தநதாந்யவதீ மதா ||௨௦||
ஸுகஸம்பத்யுதா ஸ்யாத்ஸா ஶுக்ரே ஸுகவதீ மதா ||

இதி ஜைமினிவிரசிதஜாதகசந்த்ரிகாயாம்
விவாஹப்ரகரணநாம ஷோடசகாண்ட:.

(என் + ள்.) ௧௨-ம் இடத்தில் சூரியன், இராகு இவர்களிருக்கில் மலடி. சந்திரனிருக்கில் மரணமடைவள். செவ்வாய், சனி இவர்களிருக்கில் கள் குடிப்பவள். புதனிருக்கில் புத்திரனையுடையவள். குருவிருக்கில் தனதானியம் இவைகளையுடையவள். சுக்கிரனிருக்கில் வெகு சுகமுடையவள். (இக்காண்டத்தில் லக்கினம் முதல் ௧௨-ம் இடம் வரையி லுள்ள இராசிகளில் இன்ன ராசியிலின்னகிரக மிருக்கில் இன்ன பலனென்று சொல்லியிருப்பதைக் கொண்டு பலன் சொல்ல எத்தனப்படும் விஷயத்தில் லக்கினத்திலிருக்கும் கிரகத்துக்குச் சொல்லிய பலன்களைச் சொல்லுகிறதா? அல்லது ௧௨ இராசிகளுக்குள் எந்த ஸ்தானத்திலிருக்கும் கிரகத்தைக் கொண்டு விவாகப் பெண்ணினுடையவும் பிள்ளையினுடையவும் லக்ஷணங்களைச் சொல்லுகிறது? என்று சம்சய முண்டாகு மாதலால், சூரியன்முதல் இராகு வரையிலுள்ள எட்டுக்கிரகங்களுக்குள் எந்த கிரகம் அதிக பலத்துடன்கூடி மேற்கூறிய பன்னிரண்டு இராசிகளுக்குள் எந்த இராசியி லிருக்கின்றதோ, அந்தராசி உதயமுதற்கொண்டு எத்தனையா மிராசியோ, அந்தப்பாவத்தில் கிரகமிருப்பதற்கு என்ன பலஞ் சொல்லியிருக்கின்றதோ அந்தப்பலத்தைச் சொல்வதோடு அதிக பலத்துடன்கூடி யிருக்கிற அந்தக் கிரகத்திற்குச் சொல்லிய ஜாதி, நிறம், மறு, வடு, அழகு முதலிய எல்லா லக்ஷணங்களையும் போதுமானமட்டும் யூகித்துச் சொல்லவும்.

விவாஹகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞானப்ரதீபிகாயாம்

காமகாண்டப்ராரம்ப:

ஸ்த்ரீபும்ஸோரதிபோகஸ்ய ஸ்நேஹாஸ்நேஹௌ பதிவ்ரதா |
ஶீலாஶீலக்ருதாஶ்ச ப்ரோக்தா ஶாஸ்த்ரே ஜ்ஞானப்ரதீபகே ||க||

(என் + ள்.) ஸ்திரீ புருஷர்களுடைய காம போகவிஷயமான பிரச்நையில் ஸ்திரீபுருஷர்க்குள் ஒருவரிடத்திலொருவருக்குள்ள விசுவாசமும், அஃதில்லாமையும், பதிவிருதை அல்லது விபசாரி யென்பதும், ஆசாரமுடையவள் அல்லது அனாசாரமுடையவ ளென்பதும், மற்றும் கிரீடாவிஷயமான அநேக சங்கதிகளும் இக்காண்டத்திற் கூறப்படுகின்றன.

ப்ரஶ்நகாலோதயாரூடே கேந்த்ரே ராஹுர்யதி |
தேஷாம் துஷ்டஸ்த்ரியஸ்ஸர்வா தேவாநாமப்யஸம்ஶய: ||உ||

(என் + ள்.) பிரச்நகாலத்தில் உதயாரூடங்களுக்குக் கேந்திரங்களிலே இராகுவிருக்கில் தேவர்களாக இருக்கினும் அவர்களுக்குக்கூடச் சந்தேகமின்றித் துஷ்டஸ்திரீகளையே சொல்லவேண்டும்.

உந்நாதேகாதஶே ஸ்தேவ சந்த்ரே தீயேதஶஶேஶ்ஶஶீ |
ஜீவத்ருஷ்டியுதோ யுக்தோ யதிஸ்யாத்ஸா பதிவ்ரதா ||ங||

(என் + ள்.) உதயாரூடங்களுக்கு ங-எ-கய-கக-ம் இடங்களில் சந்திரனிருந்து குருவினாற் பார்க்கப்பட்டாலும் சந்திரனோடு குரு சேர்ந்திருந்தாலும் ஸ்திரீ பதிவிருதையாம்.

சந்த்ரம் பஶ்யந்தி பும்கேடா ஸ்தேநயுக்தோதவா ஶஶீ |
தஸ்யஸ்த்ரீ துஷ்டசித்தேந ஸஹாவா ரதிஶாலிநீ ||ச||

(என் + ள்.) சந்திரனைப் புருஷ கிரகங்கள் பார்த்தாலும், அல்லது சந்திரனோடு கூடியிருந்தாலும், அவன் ஸ்திரீ கெட்டமனதுடன் கூடினவள்.

ஸப்தமே ஸ்தோச்சகே ஸௌம்யே த்ருஷ்டே நீசாரிமஸ்ஸ்ஶீ |
பும்யோகம் நாம் தேஷிணீ வம்ஶஹ்ருஷ்டாஸ்ஸ்த்ரீஸ்ஸ்வைரஸ்ஸ்ஹா ||

(என் + ள்.) எ-ம் இடத்தை நீச சத்துரு வீடாகக்கொண்டு அதி லிருக்கிற சந்திரனைச் சத்துரு கிரகங்கள் பார்த்தால் ஸ்திரீ யானவள் பந்துக்களால் நிந்திக்கப்பட்டவ ளாவதோடு ஜாதியை விட்டுத் தள்ளப்பட்டவளுமாவள். எ-ம் இடத்தையும் அதிலிருக் கிற சந்திரனையும் சுபர்கள் பார்த்துச் சந்திரனும் வலுத்திருக்கில் பந்துக்களுக்கு விசுவாசமானவளும் குலத்தில்மேலானவளுமாம்.

ஸபாநுஜீவௌ நிஶாநாதம் பஶ்யதோ வா யுதோ யதி |
பதிவ்ரதா பவேந்நாரீ ரூபிணீ புதஸம்யுதே ||௬||

(என் + ள்.) சந்திரனைச் சூரியன், குரு இவர்கள் கூடினாலும், பார்த்தாலும் ஸ்திரீ பதிவிருதை, புதன்கூடில் பார்க்கில் அழகு உடையவளாம்.

ஶுக்ரேண யுக்தே த்ருஷ்டே வா ஸஹஜே நவரா ஹாஸிநீ |
ப்ருஹஸ்பதிபௌமஸௌம்யைர் த்ருஷ்டே ஶ்சந்த்ரே கந்யகாரதி: ||௭||

(என் + ள்.) சந்திரன் சுக்கிரனாலே பார்க்கப்பட்டாலும் சுக் கிரனோடு சேர்ந்திருந்தாலும், அல்லது செவ்வாயினாலே பார்க்கப் பட்டாலும் செவ்வாயோடு சேர்ந்திருந்தாலும் அன்னிய ஸ்திரீயு டன் சேர்க்கை என்றும், செவ்வாய், புதன், குரு இம்மூவர்களுஞ் சேர்ந்து சந்திரனைப் பார்க்கில் விவாகமில்லாத பெண்ணைச் சேர்ந் தாயென்றுஞ் சொல்க.

ஶுக்ரஸ்யாம்ஶே ஸ்திதே பௌமே பௌமஸ்யாம்ஶே ததா ஸிதே |
புருஷேண விஹீனா வா க்ஷயரோகவதீ பவேத் ||௮||

(என் + ள்.) ஆரூட காலத்தில் சுக்கிரனுடைய அம்சத்தில் செவ்வாயும், செவ்வாயினுடைய அம்சத்தில் சுக்கிரனுமாக யிருக் கில் புருஷனில்லாத ஸ்திரீயைச் சேர்ந்தாயென்றும் அல்லது க்ஷய ரோகியினுடைய ஸ்திரீயைச் சேர்ந்தாயென்றுஞ் சொல்க.

பாநுவம்ஶே த்ருஷ்டே ஶுக்ரே ஸ்த்ரீ ராஜபோகிநீ |
ஜீவவம்ஶே து சந்த்ரே ஸஸ்நேஹநாரீ ஸாலிங்கிதா ||௯||

(என் + ள்) சூரியனுடைய அம்சத்தைச்சுக்கிரனடைந்தாலும், அல்லது சூரியனைச் சுக்கிரன் பார்த்தாலும் இராஜபோகமுள்ள ஸ்திரீயாம், குருவினுடைய அம்சத்தைச் சந்திரனடைந்திருந்தால் மிக ஆவலுடன் ஸ்திரீயினால் ஆலிங்கனஞ் செய்யப்பட்டாயென்று சொல்லவும்.

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌤𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌨𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌯𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ॥௧௦॥
𑌅𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌤𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌯𑌦𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌵𑌧𑍂𑌰𑌤𑌿𑌃 ।
𑌪𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌤𑍇 𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌶𑍁𑌕𑍍𑌰𑍇 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ॥௧௧॥
𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑍋𑌗𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 ।
𑌶𑌤𑍍𑌰𑍁𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌶𑌤𑍍𑌰𑍁𑌵𑌰𑍍𑌗𑌵𑌧𑍂𑌰𑌤𑌿𑌃 ॥௧௨॥
𑌸𑍍𑌵𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌯𑌦𑌿 𑌶𑍀𑌤𑌾𑌂𑌶𑍌 𑌸𑍍𑌵𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌉𑌚𑍍𑌚𑌵𑌰𑍍𑌗𑌯𑍁𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌸𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌰𑌤𑌿𑌃 ॥௧௩॥
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌗𑍍𑌰𑌹𑌯𑍁𑌤𑍇 𑌤𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 ।
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌧𑍂𑌭𑍋𑌗𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ॥௧௪॥

(என்+ள்.) பிரச்ந காலத்தில் சந்திரன் உக்மாம்சகத்தை யடைந்திருக்கில் ஸ்திரீ சுதந்தரமுடையவள். (அதாவது பெண் அதிகாரமென்பது) சனி சந்திரனோடு கூடில் ஸ்திரீ விபசாரி. சுக்கிரன் பாபவர்க்கத்தை யடைந்திருந்தாலும் பாபிகளால் பார்க்கப்பட்டாலும் ஸ்திரீ விபசாரி. சந்திரன் சத்துருவர்க்கத்தை யடைந்திருக்கில் விரோதியினுடைய ஸ்திரீயையும், மித்திர வர்க்கத்தை யடைந்திருக்கில் சிநேகிதனுடைய ஸ்திரீயையும், ஸ்வ க்ஷேத்திர வர்க்கத்தை யடைந்திருக்கில் தன்னுடைய ஸ்திரீயையும், உச்ச வர்க்கத்தை யடைந்திருக்கில் உயர்ந்த குலத்துப் பெண்ணையும், நீசவர்க்கத்தை யடைந்திருக்கில் நீசஸ்திரீயையும், சத்துரு மித்துருக்களில்லாத சமக் கிரகங்களுடைய வர்க்கத்தை யடைந்திருக்கில் சத்துருவாகவும் மித்திரனாகவு மில்லாத பொதுவா யுள்ளவனுடைய ஸ்திரீயையுஞ் சேர்ந்தாயென்று சொல்ல வேண்டியது. (வர்க்கத்துக்குச் சொல்லியது போல் அவ்வித அவஸ்தைகளை யடைந்த கிரகங்களோடு சந்திரன் கூடினாலும் அவ்வித கிரகங்களாற் பார்க்கப்பட்டாலும் அவையவைகளுக்குள்ள பலன்களையே சொல்க) சந்திரனுக்குப் பலபேர்களுடைய பார்வையுஞ்சேர்க்கையு முண்டான விடத்து அதில் அதிக பலத்துடன் கூடிய கிரகங்களுக்குச் சொல்லிய பலன்களையே சொல்க. இனி வருவனவற்றிற்கும் இப்படியே பொருளாம்.

[illegible] ।
[illegible] ॥௧௫॥
[illegible] ।
[illegible] ॥௧௬॥

(என் + ள்.) உதயம் ௫-௭-௧௦ இந்த இராசிகளில் சனியுடன் சந்திரன் சேர்ந்திருக்கில் தன்னுருவத்தை மறைத்துக்கொண்டு ஸ்திரீயைப் புணர்ந்ததாகச் சொப்பனங் கண்டாயென்றும், குஜன் உதய ராசியிலிருந்து அவ்வீட்டிற்கு அதிபதி ஓஜராசியி லிருக்கில் ஸ்திரீயுடன் சுகமான சேர்க்கை யென்றும், சந்திரன் உதயராசியிலிருந்து அவ்வீட்டிற்கு அதிபதி சமராசியி லிருக்கில் ஸ்திரீயுடன் கஷ்டமான சேர்க்கை யென்றுஞ் சொல்க.

[illegible] ।
[illegible] ॥௧௭॥

(என் + ள்.) லக்கினாதிபதியினுடைய பலத்தைக் கொண்டாவது, அல்லது அவர்களுடைய கிரணங்களின் எண்களைக்கொண்டாவது, அல்லது லக்கினாதிபதியைப் பார்த்த கிரகத்தைக்கொண்டாவது ஸ்திரீயின் புணர்ச்சி யித்தனை தடவை யென்று நிர்ணயிக்கவும்.

[illegible] ।
[illegible] ॥௧௮॥
[illegible] ।
[illegible] ॥௧௯॥
[illegible] ॥

(என் + ள்.) சந்திரனைச் செவ்வாய்கூடினும் பார்க்கினும் கலகத்தாலே வேறு படுக்கையென்றும், சுக்கிரனைச் சத்துருகிரகங்கள் பார்த்தாலுங் கூடினாலும் தன் ஸ்திரீயுடன் சண்டை யென்றும், ௩-௪-௫-௭-ம் இடங்களிலிருக்கிற சந்திரனைச் சுக்கிரன்கூடினாலும் பார்த்தாலும் தன்ஸ்திரீயுடன் சண்டையுந்தவிரச் சண்டையினால் புடவை கிழிபட்டதென்றும் சொல்க.

ஸப்தமே பாபஸம்யுக்தே தஶமே பாபஸம்யுதே ||௨௦||
த்ருதீயே பாபஸம்யுக்தே ஸவிவாதஶ்ச ஶய்யயோ: ||

(என் + ள்.) ௭-௰-ம் இடங்களில் பாபர்களிருந்தும் ௩-ம் இடத்தில் புதனுமிருக்கில் ஸ்திரீ புருஷர்களில் ஒருவருக் கொருவர் வாக்குவாதத்தால் தரையிற் படுக்கையாம்.

சௌர்யபயாத்ததோ ஜாகர்தி யஸ்ய தயா நிஶி ||௨௧||
ஜாமாம்ஶேராஶி சந்த்ராச ராஶிநக்ஷத்ரஸந்திஷு |
வ்ருஷ்டிஶ்சாப்யவாரோஹம ஸக்தஸ்த்ராதிகீர்த்யேக: ||௨௨||
தத்ஸம்யுக்தக்ரஹைரேவ தத்தத் ஜாத்யாவதிம் வதேத் |
யத்ர சந்த்ரா விஶஶிநம் பாபா: பஶ்யந்தி சேத்ததா ||௨௩||
பும்ஸி நாஸ்தி வதூஸ்நேஹ: ஶுபா: ஸ்நேஹவதீ ப்ரியா ||

(என் + ள்.) லக்கினத்தில் சந்திரனும் ௨-ல் செவ்வாயும் இருக்கில் திருட்டுப்பயத்தால் இராத்திரி விழித்திருந்தா யென்றும், இராசிசந்தி, நக்ஷத்திரசந்தி, இவைகளில் பிரச்நங்கேட்கில், விதவையைப் புணர்ந்தாயென்றும், மேற்கூறிய இராசி நக்ஷத்திரம் இவைகளுடைய சந்திகளில், கிரகங்களிருக்கில் அவைகளுக்குச் சொல்லிய ஜாதியுடன் கூடினபுருஷன் அல்லது ஸ்திரீயைச் சேர்ந்தாயென்றும், எந்த ராசியிலாவது சந்திரன் நின்று அவரைப் பாபக்கிரகங்கள் பார்க்கில் புருஷனிடத்தில் ஸ்திரீ அன்பில்லாதவளென்றும், சுபர்கள்பார்க்கில் புருஷனிடத்தில் ஸ்திரீ அன்புடையவளென்றுஞ் சொல்க.

ஸாத்விகாஸ்ஸூர்யசந்த்ரஜீவா: ராஜஸௌ ஸோமஜபார்கவௌ ||௨௪||
தாமஸௌ ஶநிபூபுத்ரௌ கேதுஸ்வர்பாநு தாமஸௌ |
விசார்ய கதயேதேவம் ஸ்த்ரீபும்ஸாம் குணாஸ்ததா: ||௨௫||

இதி ஜைமினிவிரசித ஜ்ஞானப்ரதீபிகாயாம்
காமப்ரகரணம் நாம ஸப்தம: காண்ட:.

(என் + ள்.) சூரியன் சந்திரன் குரு இவர்கள் சத்துவகுணமுள்ளவர்கள், புதன் சுக்கிரன் இவர்கள் இராஜஸ குணமுள்ளவர்கள், செவ்வாய் சனி இவர்கள் தாமஸ குணமுள்ளவர்கள், இராகு கேது இவர்கள் மிகத்தாமஸ குணமுள்ளவர்கள். இவ்விதியைக்கொண்டு ஸ்திரீபுருஷர்களின் குணங்களையும் இரதி காலத்திலுள்ள குணங்களையுஞ் சொல்க.

காமகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
புத்ரோத்பத்திகாண்டப்ராரம்ப:.

புத்ரோத்பத்திநிமித்தேந ஸ்த்ரியா ப்ரச்நே க்ருதே ஸதி |
உதயாரூடசத்ரேஷு ராஹுச்சேத்கர்ப்பஸம்பவ: ||க||

(என் + ள்.) புத்திரோற்பத்தியைக் குறித்து ஸ்திரீகளால் பிரச்நங்கேட்கப்படும்சமயத்து, உதயாரூட சத்திரங்களிலேஇராகு விருக்கில் கருப்பமுண்டாம்.

லக்நே வா சந்த்ரலக்நே வா த்ரிகோணே கேந்த்ரகேபி வா |
ப்ருஹஸ்பதிஸ்ஸ்திதோ வாபி பச்யேச்சேத்கர்ப்பிணீ ||உ||

(என் + ள்.) உதயலக்கினத்தையாவது சந்திரலக்கினத்தை யாவது இவைகளுக்கு ரு-எ-க-ம் இடங்களை யாவது குரு பார்க் கிலும் இருக்கிலும் கருப்பமுண்டாம்.

ஸ்வோச்சஸ்வமித்ரக்ஷேத்ரஸ்தோ ஜீவ ஆயுஷ்மந்தம் வதேத்||

(என் + ள்.) குரு, உச்சமித்திர ஸ்வக்ஷேத்திரங்களை யடைந் திருக்கில் தீர்க்காயுசுடன் கூடினபுத்திரனும். (இதனுல் குரு நீசாரி க்ஷேத்திரங்களை யடைந்திருக்கில் அற்பாயுசுடன்கூடின புத்திர னெனப் பொருள்படுத்திக் கொள்ளவும்.

ப்ரச்நகாலே பரிவேஷ த்ருஷ்டே கர்ப்பவதீ பவேத் ||ங||
தத்யுக்தக்ரஹபாலேந பும்ஸ்த்ரீஜந்ம வதேத்புத:||

(என் + ள்.) ஆரூடகாலத்தில் பரிவேடத்தால் உதயாரூட ராசிகள் பார்க்கப்படில் கர்ப்பமுண்டாம், அந்தப்பரிவேடத்துடன் கூடியிருக்கின்ற கிரகம் ஆணுகில் கர்ப்பம் ஆணென்றும், பெண் ணுகில் பெண்ணென்று மறிந்து சொல்க.

யத்ர யத்ர ஸ்திதச்சந்த்ர: சுபயுக்தஸ்து கர்ப்பிணீ ||ச||

(என் + ள்.) சந்திரன் எவ்விடத்தில் நின்றாலும் சுபக்கிரகங் கூடியிருக்கில் கர்ப்பமுண்டாம்.

ப்ரச்நாத்த்ரிநவபஞ்சமேஷு சுக்ரார்க்கேந்த்விஜ்யபூ: க்ரமாத் |
த்ருஷ்டிரேவம் ஸம்பவேத்ஸர்வே ஷண்மாஸே த்ருஷ்டிதா ஸுதா ||ரு||

(என் + ள்.) பிரச்ந லக்கினத்துக்கு ௬-ம் இடம் ௬-ம் மிடம் ௫-ம் இடம் இவைகளில் சுக்கிரன், சூரியன், சந்திரன் இவர்கள் வரிசையாக இருக்கில் கர்ப்பமில்லை, மேற்கூறிய மூன்றுபேர்களும் ஒரேவிடத்திற் கூடியிருந்தாலும் கர்ப்பமில்லை. (௬-ம் இடத்தில் சுக்கிரனிருந்து ௬-ம் இடத்தில் சூரியனிருக்கில் ஒருவருக் கொருவர் ஏழாமிடத்தி லிருப்பார்களாதலால் இவ்வித யோகமுண்டாவது அஸம்பாவிதமானாலும் அது விஷயத்தைப்பற்றிப் புத்திரா ரிஷ்ட காண்டம் ௬௨-வது சுலோகத்திற்காண்க.

ஸ்திவூஂஸவெதஂமஹிஷுஷ்ணா ப்ரஷெவா தத்ரகாலெகெ ।
வரிவெஷாதிகெஷ்ரஷெ தவஸ்ாமஹெஹாவிநஶ்தி ॥கூ॥

(என் + ள்.) இக்கர்ப்பமானது ஆணோ, பெண்ணோ வென்று கர்ப்பணியினால் பிரச்நங் கேட்கப்படுங் காலத்தில் பரிவேடன், இந்திரதனுசு, தூமம் நட்பம் இவைகள் தத்கால லக்கினத்தைப் பார்த்தால் அப்போதுண்டா யிருக்கிற கர்ப்பம் நாசத்தையடையும் (இச்சுலோகத்தில் பரிவேடாதி கிரகங்கள் இன்னஇராசியைப் பார்த்தார்களாகிலென்று சொல்லாமல் பொதுவாகச் சொல்லியிருப்பதால் உதயராசியென வருவித்துரைத்தாம்.)

வரியொஷ்ஷெசெ ஊதஂஹ்ஸாவிஜ்திஂவஷெக॥

(என் + ள்.) பரிவேடத்திற்கு அ-ல் சந்திரன் நின்றால் தாயுடன் பிள்ளைமரணம்.

ஔஜாஜொஜவஸிதெசெ வூத்ரஂஸவெதஸெஸெஂதாஂ ॥எ॥
வரோநக்ஷத்ராஸீ நாஂயயா யொமஂஸஂதாஸஂதள ॥

(என் + ள்) உதயராசியில் நின்றும் ஓஜராசிகளான ௬-௫-எ கூ-கக-ம் இடங்களில் சந்திரனிருக்கில் அப்போது பிறக்கும் குழந்தை ஆணென்றும், சமராசிகளான உ-௪-௬-அ-௧0-௧௨-ம் இடங்களில் சந்திரனிருக்கில் அப்போது பிறக்கும் குழந்தை பெண்ணென்றும், இப்படியே மேஷம் முதலாக ஓஜராசிகளில் சந்திரனிருதாலும், அசுவதி ஆதியாக ஏற்றப்பட்ட நக்ஷத்திரங்களில் சந்திரனிருந்தாலும், ஆண் பிறக்குமென்றும், இரட்டைராசிகளிலாவது இரட்டைநக்ஷத்திரங்களிலாவது சந்திரனிருந்தால் பெண்ணென்றுஞ் சொல்ல வேண்டியது.

உதயாத் ஷஷ்டே நவமே தஶமைகாதஶேஷ்வபி ||௮||
பாநுஸ்திதே ஶநௌ வாபி ஸ்த்ரீ புத்ரமேவ ப்ரஸூயதே ||

(என் + ள்.) உதயத்திற்கு ௬-௯-௧௦-௧௧-ம் இடங்களில் சூரியனிருக்கிலும் அல்லது சனியிருக்கிலும் புத்திரனையேபெறுவாள்.

ஸப்தமஸ்தை: ஶுபை: புத்ரம் கந்யாம் பாபைர்வ்யவஸ்திதை: ||௯||
ஓஜராஶிகதா: ஸர்வே க்ரஹா: புத்ரஸ்ய ஸம்பவ: |
ஸமராஶிகதா: ஸர்வே புத்ரீ நாஸ்த்யத்ர ஸம்ஶய: ||௧௦||

(என் + ள்.) ௭-ம் இடத்தில் சுபர்களிருக்கில் ஆண், பாபிகளிருக்கில் பெண், சர்வ கிரகங்களும் ஓஜராசியிலிருக்கில் ஆண், உக்மராசியிலிருக்கில் பெண்.

ஆரூடராஶேஸ்ஸப்தமம் யாவத்ப்ராப்நோதி சந்த்ரமா: |
தாவந்நக்ஷத்ரஸம்ப்ராப்தே தத்ர கர்பவிமோசநம் ||௧௧||

(என் + ள்.) ஆரூடராசிக்கு ஏழாமிராசியைச் சந்திரன் எவ்வளவு தினத்திலடைகிறானோ அவ்வளவு தினத்தில் கர்ப்பிணியானவள் பிள்ளையைப் பெறுவாள். (பிள்ளையென்பது ஆண், பெண்களுக்குப் பொதுப் பெயராம்.)

திதிப்ரஹரஸம்யுக்தம் தாராவாரவிமிஶ்ரிதம் |
ஏகோநஸப்தபிர்ஹ்ருத்வா ஶேஷே ஏகே ஸுதோ ஽ந்யதா ||௧௨||

இதி ஶ்ரீஜைமிநிப்ரணீதஜ்ஞாநப்ரதீபிகாயாம்
புத்ரோத்பத்திகாரணநாமாஷ்டாதஶகாண்ட:.

(என் + ள்) பிரச்சகாலத்தின், திதி, ஜாமம், நக்ஷத்திரம், வாரம், இவைகளை யொன்றாய்ச் சேர்த்து அதிலொன்றைக் குறைத்து ஏழுக்கீய ஒன்று மிச்சமாகில் ஆண், இரண்டு மிச்சமாகில்பெண்.

புத்திரோத்பத்தி காண்டம் முற்றிற்று.

ஜ்ஞானதீபிகாயாம்.
ஸூதாரிஷ்டகாண்டப்ராரம்பஃ.

ஸூதாரிஷ்டப்ரயோகேஷு ஷஷ்டே சந்த்ரகாரகம் ।
அஷ்டமஸ்திதே சந்த்ரே தஸ்மாத்பாபஸம்யுதே ॥௧॥
மாதாஸூதமரணம் கிஞ்ச பஞ்சமஷஷ்டயோ: ।
பாபா: பச்யந்தி சேந்த்ரம் மாதுர்மரணம் பவதி த்ருவம் ॥௨॥

(என் + ள்.) (பிறந்த பிள்ளையின் அரிஷ்டத்தையும் சுகத்தையும்பற்றி ஆரூடங் கேட்கில் இச்சூதாரிஷ்டகாண்டத்தால் நிர்ணயிக்கிறார்) உதயத்துக்கு ௬-ல் சந்திரனும், அவனுக்கு ௮-ல் பாபர்களுமிருக்கில் தாயும்பிள்ளையும் மரணம், ௫-௬-ல் சந்திரனிருந்து அச்சந்திரனை பாபர்கள் பார்க்கில் தாய் மரணம்.

ஆதிமே சந்த்ரஸம்யுக்தே த்ருஷ்டே மாத்ருஹதிர்பவேத்॥

(என் + ள்.) ௧௨-ல் சந்திரனிருக்கிலும் அல்லது அந்தஸ்தானத்தைப் பார்க்கிலும் தாய் மரணம்.

யதி லக்னகதோ ராஹு: ஜீவத்ருஷ்டிவிவர்ஜித: ॥௩॥
ஜாதஸ்ய மரணம் சீக்ரம் பவேதத்ர ந ஸம்சய: ॥

(என் + ள்.) லக்கினத்தில் இராகுவிருந்து குருவினால் பார்க்கப்படாவிட்டால் பிறந்தபிள்ளை சீக்கிரத்தில்மரணத்தையடையும்.

ஆதிமஸ்தௌ ஸூர்யசந்த்ரௌ நேத்ரஹீனம் விநச்யதி ॥௪॥

(என் + ள்.) ௧௨-ல் சூரியனும் சந்திரனுமிருக்கில் இரண்டு கண்ணுமில்லாத குருட்டுப் பிள்ளையாம்.

ஷஷ்டபஞ்சமயோ: பாபா: பச்யந்தி ஸூர்யசந்த்ரம் ।
மாதாபித்ரோர்மரணம் தயோர்ஹ்ருஷ்டிகோசரே ॥௫॥

ப்ராத்ருநாசஞ் சனைச்சரே மாதுலஸ்ய க்ஷிதிஸுதே॥

(என் + ள்.) ௫-ம் இடம் ௬-ம் இடம் இவைகளில் பாபர்களிருந்து சூரிய சந்திரர்களைப் பார்க்கில் தாயுந் தகப்பனும் மரணம், மேற்கூறிய ஸ்தானங்களில் சனியிருக்கில் உடன் பிறந்தவன் மரணம், செவ்வாயிருக்கில் அம்மான் மரணம்.

உதயாதித்ரிகோணேஷு கண கேஷு ஸுபாயதி ॥கூ॥
த்ருஷ்டாஸ்ச்ச ஸமேதேஷு ஸவாம்ஸகே விநஸ்யதி ।
லக்நம் சந்த்ரலக்நம் ஜீவேநாத்ருஷ்டம் பாபவீக்ஷிதம் ॥எ॥
பாபாஃபஸ்யந்தி யத்ஜாதம் ஸ்ஸிஸுஸ்ஸ வ்யபிசாரேண ஜாயதே ॥

(என் + ள்.) உதயம் ரு-கூ-௯-எ-க0-ம் இவ்விடங்களில் சுபர்க ளிருந்து அவர்களும் உச்ச மித்திர ஸ்வக்ஷேத்திராம்சகங்களை யடைந்திருக்கில் எல்லா அரிஷ்டங்களையும்போக்கடித்து ஆயுசை யுங்கொடுப்பார்கள். லக்கினத்தையும் சந்திர லக்கினத்தையும் குருபார்க்காது பாவிகள்பார்க்கில் விபசாரிக்குப் பிறந்தபிள்ளை யென்றறிக.

லக்நாஸ்தமேஷு பாபேஷு ஸுபைராதீக்ஷிதாயதி ॥அ॥
ஜாதஸ்ய மரணம் ஸீக்ரம் ஸுபத்ருஷ்டே து ஜீவிதம் ॥

(என் + ள்.) உதயம் எ-அ-க0-க௨-ம் இவ்விடங்களில் பாபர்க ளிருந்து சுபர்களுடைய பார்வை யில்லாவிட்டால் பிள்ளை உட னே மரணம், சுபர் பார்வையுண்டான விடத்து பிள்ளை க்ஷேமத் தையடையும்.

ஸப்தமஸ்தாநகௌ பாபௌ ஜாமித்ரஸ்தௌ ஸநைஸ்சரௌ ॥கூ॥
ஸூர்யோ வாதீயஸ்தௌ ஸாதிரத்ராவாஸ்தயாஸு ॥

(என் + ள்.) எ-ம் இடத்தில்,செவ்வாய்,சனி,இவ்விருவர்களு மாவது, அல்லது அ-ம் இடத்தில் சூரியனுவது, அல்லது உ-ம் இடத்தில் செவ்வாய், சனி, இவ்விருவர்களுமாவது இருக்கில் பிள்ளையுடனே மரணம்.

லக்நே சந்த்ரேஷ்டமே பௌமே ஸுக்ரசநீஸ்சரௌ ॥க0॥
தஸ்மிந் ஜாதஸ்ய மரணம் ஸீக்ரம் ஸுபத்ருஷ்டே விவர்ஜயேத் ॥

(என் + ள்.) லக்கினத்தில், சந்திரன், அ-ல் செவ்வாய், கூ-ல் சுக்கிரன்,சனி,இப்படிக்கிருக்கில் பிறந்த பிள்ளை யன்றையத்தின மே மரணம் சுபர்கள் பார்க்கில் மரணமில்லை.

ரிபுநீசஸ்தைர்வா பௌமோ க்ஷீணேந்துநா தாயதி ॥கக॥
லக்நாதஷ்டமஷஷ்டேஷு நிதநேஸ ஸ்திதைஃ ।
ஜாதஸ்ய மரணம் ஸீக்ரம் ஸுபத்ருஷ்டே விவர்ஜயேத் ॥க௨॥

(என்+ள்.) சந்திரன், சத்துரு நீசவிராசிகளையடைந்த பாபர்களால் பார்க்கப்பட்டினும், லக்கினத்துக்கும் சந்திர லக்கினத்துக்கும் ௬-அ-ல் சனி இருக்கினும் நாலுநாளில் சிசு மரணம். குரு பார்க்கில் மரணமில்லை.

உதயே சந்த்ரோஷ்டமே ஜ்ஞஸ்ய மாரணாதி நாஷ்டதி: |
ஸப்தாஷ்டமகதா: பாபா மரணம் சாஷ்டபிர்திநை: ||௧௩||

(என்+ள்.) உதயத்தில் சந்திரன் அ-ல் புதன் இப்படியிருக்கில் நாலுநாளில் மரணம், எ-அ-ம் இடங்களில் பாபக்கிரகளிருக்கில் எட்டு நாளில் மரணம்.

லக்நாத் வ்யயேஷ்டமே வாபி பாபா நைவ ஶுபேக்ஷிதா: |
ஸம்ஹதேஷு விஹீநே வா ம்ருத்யுர்மாஸாந்தரே ஶிஶோ: ||௧௪||

(என்+ள்.) லக்கினம் அ-கஉ-ம் இடங்களில் பாபர்கள் கூடி நின்றும் சுபர் நோக்கமில்லாவிட்டால் ஒரு மாசத்தில் மரணம்.

கேந்த்ரேஷு பாபயுக்தேஷு லக்நஸ்தே சந்த்ரநாயகே |
த்விதீயே வாஷ்டமே க்ரூரா யதி வர்ஷாந்ம்ருதிர்பவேத் ||௧௫||

(என்+ள்.) லக்கினத்தில் சந்திரனும், கேந்திரங்களில் பாபர்களும், அல்லது லக்கினத்தில் சந்திரனும் உ-அ-ல் பாபர்களுமிருக்கில், சிசு ஒரு வருஷத்தில் மரணம்.

ஸப்தமே சோதயே வாபி யதி வா சந்த்ரஸம்யுதா: |
ஶுபைரவீக்ஷிதே பாபை: வத்ஸராந்ம்ருதிமாதிஶேத் ||௧௬||

(என்+ள்.) லக்கினம், எ-ம் இடம் இவைகளில்பாபர்களிருந்தாலும் அல்லது சந்திரனுடன் கூடினாலும் சுபக்கிரகங்களின் பார்வையில்லாவிட்டால் ஒரு வருஷத்தில் மரணம்.

நீசாரிகேஷு பௌமே ச ஸூர்யே ச நவமே யதி |
ஶநௌ தஶமகே ஶுபஹீநாஸ்து வத்ஸரத்விதயாந்ம்ருதி: ||௧௭||

(என்+ள்.) அ-ல் நீச, சத்துருவிராசியை யடைந்த செவ்வாயும், அவ்வித இராசியை யடைந்த சூரியன் ஒன்பதிலும், கஉ-ல் சனியும் அவ்வித இராசியை யடைந்து, சுபர்வீக்ஷணமில்லாதிருந்தால் இரண்டு வருஷத்தில் மரணம்.

ஷஷ்டேஷ்டமகே வாபி வியத்வாவேக்ஷிதா யதி |
பாபத்ருஷ்டியோகேந்து: ஜாதவர்ஷாந்மரணம் பவேத் ||௧௮||

(என் + ள்.) ௬-ம் இடம், ௮-ம் இடம் இவைகளில் சந்திர னிருந்து பாபர்கள் பார்க்கிலும், ௬-ம் இடம் ௮-ம் இடம் இவைக ளில் பாபர்களிருக்கிலும் பிள்ளை மரணம்.

நீசாரிமாக்க்ரக³தா வா ஷஷ்டா²ஷ்டமவ்யயக³தா꞉ ।
ஶுப⁴த்³ருஷ்டியுதா வாபி ம்ருதிம் த³த்³யுர்ந ஸம்ஶய꞉ ॥௧௯॥

(என் + ள்.) ௨-ம் இடத்தில் நீச சத்துரு ராசியை யடைந்து பாபக்கிரகங்களிருக்கில், சுபர்வீக்ஷணத்தைப் பெற்றாலும் மரணத் தைக் கொடுப்பார்கள்.

க்ரூரேண ஶநிநா வாபி த்³ருஷ்டோ பா⁴நு꞉ பிதுர்ம்ருதி꞉ ।
தத்³வச்சந்த்³ரே மாதுர்மரணம் த்³ருஷ்டோ கு³ருணா த்³ருஷ்டே ஸுக²ம் ॥

(என் + ள்.) செவ்வாயினாலாவது, சனியினாலாவது, சூரியன் பார்க்கப்பட்டால், தகப்பன் மரணம், மேற்கூறியவர்களால் சந்தி ரன் பார்க்கப்பட்டால், தாய்மரணம், சூரிய சந்திரர்களைக் குருபார்க் கில் தாய் தந்தையர்கள் சௌக்கியமாம்.

லக்³நாதா³ஷ்டமக³தா꞉ ஸூர்யஶுக்ரேந்து³மந்த³ஸ்ய꞉ ।
பித்ருமாத்ருஸுதாரீணாம் ப³ந்தூ⁴நாம் விநிர்தி³ஶேத் ॥௨௧॥

(என் + ள்.) ௫-ம் இடத்தில் சூரியனிருக்கில்பிதாவும், சந்திர னிருக்கில் மாதாவும், சனி இருக்கில் பிறந்த சிசுவும், சுக்கிரனிருக் கில், சத்துருக்களும், செவ்வாயிருக்கில் பந்துக்களும், நாசத்தை யடைவார்கள்.

ஷஷ்டா²ஷ்டமே வா வ்யயே ரவீந்து³குஜார்கஜா꞉ ।
ஜநநீபித்ருபா³லாநாம் ஸோத³ராணாம் க்ஷயப்ரதா³꞉ ॥௨௨॥

(என் + ள். ௬-ம் இடத்திலாவது ௧௦-ம் இடத்திலாவது தேய் பிறைச் சந்திரனிருக்கில், தாயும், சூரியனிருக்கில், தந்தையும், சனியிருக்கில், சிசுவும், செவ்வாயிருக்கில், சகோதரரும் மரணம்.

விது⁴ஸ்தா²நாத்ஸப்தமஸ்தா²꞉ ஶநிபௌ⁴மௌ யதி³ ।
ஜநநீமரணம் ப்ரோக்தம் ஸூர்யாத்பித்ரும்ருதிம் ததா² ॥௨௩॥

(என் + ள்.) சந்திரனுக்கு ௭-ல் செவ்வாய் சனி இவர்களி ருக்கில், தாய் மரணம், மேற்கூறியவர்கள் சூரியனுக்கு ஏழிலிருக் கில், தகப்பன் மரணம்.

த்விதீயே த்வாதசே ராஹு: சநிர்பௌமோ யதிஸ்தித: |
ஜாதஸ்ய மரணந்தஸ்ய விசேஷோ வக்ஷ்யதே(அ)துநா ||௨௪||
வ்யயஸ்தாநே த்விதீயே ச பாபக்ரஹா பவந்தி ஹி |
பிதுர்ம்ருத்யுஸ்ததா ஸூர்யாந் மாதுர்மரணமிந்துத: ||௨௫||

(என்+ள்.) உ-ம் இடம் கஉ-ம் இடம் இவைகளில் இராகு சனி செவ்வாய் இவர்க ளிருக்கில் பிள்ளை மரணம். (மறுபடியும் விசேஷமொன்று சொல்லப்படுகின்றது) சூரியனுக்கு உ-ம் இடம் கஉ-ம் இடம் இவைகளில் பாபிகளிருக்கில் பிதாவுக்கும், சந்திரனுக்கு உ-ம் இடம் கஉ-ம் இடம் இவைகளில் பாபிகளிருக்கில் மாதாவுக்கும், மரணத்தைச் சொல்லவேண்டியது.

புஷ்யக்ஷே பூர்வாஷாடாக்ஷே மத்யபாதஜநிர்யதி |
பிதுர்மரணமாதிஷ்டம் சித்ராக்ஷே பூர்வபாதகே ||௨௬||
மாதுர்ம்ருத்யுஸ்ஸசித்ராதௌ ரவிசுக்ரசநைர் த்ருஷ்டே
த்ருஷ்டே த்விபித்ரோரரிஷ்டதயோ: பூர்வம் ம்ருத்யுஸ்து பாலக: ||

(என்+ள்.) பூசம், பூராடம், இந்த நக்ஷத்திரங்களின் நடுப் பாதங்களில் குழந்தை பிறக்கில், தகப்பன் மரணம், சித்திரை, உத்திரம் இவைகளின் முதற்பாகமான முதலாவது இரண்டாவது பாதங்களில் பிறக்கில், தாய் மரணம், மேற்கூறிய நக்ஷத்திரங்கள் சூரியன் சுக்கிரன் சனி இவர்களால் பார்க்கப்பட்டால் தாய்தந்தையர்களுக்குமுன் பிள்ளை மரணம். (பூசம் பூராடம் இவைகளின் நடுப் பாதமென்றதை உ-ங-வது பாதங்களென்று பொருள் கொள்ளவும்.)

புஷ்யக்ஷே கர்கடே லக்நே வாபிவா பூர்வதாரகே |
ஸா ஜந்மலக்நே த்ருஷ்டே ரவிணா சுக்ரேண பௌமேந வா ||
பித்ரோர்பாலஸ்ய மாதுலஸ்யைவ ஹி ||

(என்+ள்.) கடகத்தையும், பூச நக்ஷத்திரத்தையும், ஜன்மமாகக்கொண்டாவது, அல்லது, தனுசையும், பூராட நக்ஷத்திரத்தையும் ஜன்மமாகக் கொண்டாவது பிள்ளை பிறந்து, சூரியனால் லக்கினம் பார்க்கப்பட்டால் தாய்க்கும், சுக்கிரனால் பார்க்கப்பட்டால் பிறந்த பிள்ளைக்கும், செவ்வாயினால் பார்க்கப்பட்டால் அம்மானுக்கும் அரிஷ்டமாம்; அதாவது பீடையாம்.

[illegible] ||உ௯||
[illegible] ||

(என் + ள்.) உ-௬-அ-கஉ-ம் இடங்களில் சந்திரனிருந்து, அச்சந்திரனுக்கு எ-ம் இடத்தில் பாபக்கிரகங்களுமிருக்கில் பிள்ளை யும் தாயும் மரணமடைவார்கள்.

[illegible] ||௩0||
[illegible] |
[illegible] ||௩௧||

(என் + ள்.) சந்திரன் லக்கினத்திலும் ஏழாமிடத்தில் செவ் வாயும் (அல்லது) செவ்வாய் லக்கினத்திலும் எ-ம் இடத்தில் சந் திரனும் சுக்கிரன் லக்கினத்திலும் எ-ம் இடத்தில் சந்திரனும் (அல்லது) சந்திரன் லக்கினத்திலும் எ-ம் இடத்தில் சுக்கிரனுமி ருந்து இவர்களுக்குக் குருவினுடைய பார்வை யில்லாவிட்டால் தாயுடன் பிள்ளை மரணம்.

[illegible] |
[illegible] ||௩உ||
[illegible] ||

(என் + ள்.) லக்கினத்தில் சூரியன் எ-ல் சனி இப்படிக்கிரு க்கிலும் (அல்லது) எ-ல் சூரியன் லக்கினத்தில் சனி இப்படிக்கிருக் கிலும் அல்லது லக்கினத்தில் சூரியன் எ-ல் சுக்கிரன் இவ்விதமாக வாவது அல்லது எ-ல் சூரியன் லக்கினத்தில் சுக்கிரன் இவ்வித மாகவாவதிருக்கிலும் இவர்களுக்குச் சுபர்களுடைய பார்வையில் லாவிட்டால், தகப்பனும் பிள்ளையும் மரணமாம். (இச்சுலோகத்தில் ஏழில் சுக்கிரனிருக்கிலும் சுக்கிரனுக்கு ஏழில் சூரியனிருக்கிலும் அரிஷ்டமென்று சொல்லியிருப்பதால் அந்தயோகம் உண்டாகமா ட்டாது. ஆகிலும் வராகமிகிரர். கர்க்காசாரியார், யவனர் முதலான வர்கள் செய்த கிரந்தத்தில் சூரியனுக்கு நாலில் புதனிருக்கிலும் எட்டில் சுக்கிரனிருக்கிலும் யோகமென்று சொல்லியிருப்பதால் இவ் வவஸ்தையு முண்டாமென்பது சாஸ்திர சித்தமாகிறது. ஆனதுபற்றியேதான் இவருமிவ்யோகத்தைக் கூறலாயினர்.)

[illegible] ||௩௩||
[illegible] ||

(என் + ள்.) நீச, சத்துரு ராசியை யடைந்த பாபக்கிரகங்கள் லக்கினத்தில். சந்திரனுடன் கூடி யிருக்கில், தாயுடன் பிள்ளை மரணம்; மேற்கூறியபடி பாவிகள் சூரியனுடன் கூடி யிருக்கில், தகப்பனுடன் பிள்ளை மரணம்.

ஷஷ்டேऽஷ்டமே வ்யயே லக்நே தத்ஸ்தைர்பாபைஸ்ஸம்யுதே ||௧௪||
ஸிஸூநோர்த்வார்த்திர்நஸ்யாத்க்ரூரைஷைவம் விதாத்ருதி: ||

(என் + ள்.) ௬-ல் சந்திரனும் அவனுக்கு ௭-ல் பாவிகளு மிருக்கில் தாயும் பிள்ளையும் மரணம், சூரியன் ௬-லிருந்து அவனுக்கு ௭-ல் பாபர்களிருக்கில் பிதாவும் புத்திரனும் மரணம்.

ஷஷ்டேந்த்ரஸ்தேऽஸ்தபாபைர்விநாபவேந்நாயகீ ||௧௫||
க்ஷீணஸ்ய வ்யயே ஜாதஸ்ய சக்ஷுஷீ யஸ்ய ஸம்ஹ்ருதி: ||

(என் + ள்.) ௬-ல் சந்திரனும் ௧0-ல் பாவிகளும் வலுவாக விருக்கில் கை நொண்டியாம், ௧௨-ல் சந்திரனிருக்கில் குருடனும்.

சூர்யே த்ரிகக்ஷிணாக்ஷிஸ்யா த்வம் சந்த்ரோ வாமாக்ஷிகீர்த்தித: ||௧௬||
ஆவேதயேத்பாபஸ்ம்ஸ்ருஷ்டே நேத்ரஹீநோ நரோ பவேந்நர: ||

(என் + ள்.) (மேற்சுலோகத்தில் குருடென்று சொல்லியிருப்பதற்குச் சிறப்புவிதிகூறுகின்றார்.) சூரியன் ௧௨-லிருக்கில் வலது கண் குருடாம், சந்திரனிருக்கில் இடதுகண் குருடாம், இரண்டு பேர்களுஞ் சேர்ந்திருக்கில் இரண்டு கண்களுங் குருடாம். (இவ்விடத்தில் சுபர்நோக்க மில்லாவிடத்து மேற்கூறிய யோக முண்டாமென்று வருவித்துக்கொள்வது யுக்தமாம்.)

ஸௌரேऽவநிஜாஸ்தமிதே உதிதே வாऽஸ்தநாஹவேக ||௧௭||
உதிதேऽப்யஸ்தமிதே ஸௌம்யே வாஸ்தமேவாஸ்தநாகு ப்ருதி: ||

(என் + ள்.) சனி உதயமாகிச் செவ்வாய் அஸ்தமிக்கினும் புதன் உதயமாகிச் சனி அஸ்தமிக்கினும் மிகக் குட்டையான சரீரத்துடன் கூடினவனும்.

ஜ்ஞவாஸ்ருக்பாபஸம்யோகை: கேந்த்ரே ஷஷ்டம தாயகீ ||௧௮||
மத்ஸ்யவார்த்த்ஸ்வாஸ்யாஸ்ய உதயே ஸஹவேவரா: |
ஜாதகோயோ மவாநுவ்ருத்யாதஸாஹாஸ்த்யோமவாநு ||௧௯||

(என் + ள்.) உதயராசிக்கு இருபுறங்களான உ-கஉ-ம் இடங்களிலும் கேந்திரங்களிலும் சுபக்கிரகங்கள் உச்சம்பெற்றிருக்கிலும், அல்லது சீத்திர ராசியில் பாபக்கிரகங்கள் ஸ்வக்ஷேத்திரத்தை யடைந்தும் உதயத்தில் சுபக்கிரகங்க ளிருக்கிலும் பிறந்தவன் யோகவானும், சுபர்களிருக்கவேண்டியதாகச் சொன்னவிடங்களில் பாபிகளிருக்கில் யோகமில்லை யென்றும் தரித்திரனென்றுஞ் சொல்க.)

சந்த்³ராத்³ த்³விதீயே தச்சு²க்ரே ஸ்வோச்சே ஹ்யாயதி³ யோ த⁴நாட்⁴யத: ||
பாபாந்விதாநாம்யேவாஸ்ய ஶுபா⁴ஶ்சேத் ஸ்து²ய நாயிகா ||௨௦||

(என் + ள்.) சந்திரனுக்கு உ-ல் சுபன் உச்சம்பெற்றிருக்கில் தனமுள்ளவனும், சந்திரனுக்கு இருபுறமும் பாபக்கிரகங்களன்றியில் சுபக்கிரகங்கள்மாத்திர மிருக்கில் தனாதிபதியாம். (இருபுறமுமென்றது உ-கஉ-ம் இடங்களுக்குப் பெயராயிற்று.)

ஆரூடா⁴து³ப⁴யஸ்தா²நே ஶுபே⁴ ஸ்வோச்சக³தே தே³ஶநாயக: |
ஸ்த்ரீஜந்மஸ்வேஷு ஸர்வேஷு யோக³ம் தத்³ப⁴ர்த்துஸ்ஸமாதி³ஶேத் ||௨௧||

(என் + ள்.) ஆரூட இராசிக்கு இருபுறமும் சுபக்கிரம் உச்சம் பெற்றிருக்கில், தேசாதிபதியாம், மேற்சொல்லிய யோகங்களில் பெண் பிறக்கில் அவள் புருஷனுக்கு அந்த யோகத்தைச் சொல்க.

ஸேநாபதிஸ்த்ரயோச்சே ஸ்யாச்சதுருச்சே மஹீபதி: ||

(என் + ள்.) மூன்று கிரகங்க ளுச்சமாகில் சேனாதிபதியாம், நாலுகிரகங்க ளுச்சமாகில் பூமண்டலாதிபனும்.

ஏவம் க்³ரஹாணாம் த³ஶயா ஶுபா⁴ஶுப⁴ப²லம் ந்ருணாம் ||௨௨||
ஜ்ஞாதுமாரூட⁴ஸம்ஸ்தா²நாந் நஷ்டஜாதகமுச்யதே ||

(என் + ள்.) கிரகங்களுடைய தசாபுக்திகளின் வழியாய் மனுஷ்யர்களின் சுபாசுப பலன்களை நன்கு யறிவதின்பொருட்டு ஆரூடத்தைக் கொண்டு நஷ்டஜாதக விஷயம் சொல்லப்படுகின்றது.

யாவத்³ராஶிஸஹஸ்ராணி தாவதீம்ஶிம் க³ணீக்ருதாம் ||௨௩||
ஶிஷ்டராஶீந் த்ரிஸந்த்⁴யாநுஸம் யோஜ்யாம் தத்ஸம்வத்ஸரம் |
ஷஷ்டிவிம்ஶத்யதா⁴ஹ்யம் ஜந்மநக்ஷத்ரம் ப⁴வதி த்⁴ருவம் ||௨௪||

இதி ஜைமினிவிரசித ஜ்ஞாநப்ரதீ³பிகாயாம்

பா⁴த்³ராஶிஷ்டயோக³ப்ரகரணம் நாமைகோநவிம்ஶதிகாண்ட³:

(என் + ள்.) ஆரூட ராசிமுதல் உதயராசிவரையி லெண்ணி, அத்தொகையை இரட்டித்து, பாக்கியிருக்கு மிராசியையும் அங்கிருந்தவர்களின் தொகையையுஞ் சேர்த்து, உஎ-ல் கழிக்க, வந்த மிச்சத்தை அசுவதி முதலாக வெண்ணக்கண்ட நக்ஷத்திரம் ஜன்ம நக்ஷத்திரமாம்.

புத்திராரிஷ்டகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

க்ஷுரிகாகாண்டப்ராரம்ப꞉.

க்ஷுரிகாலக்ஷணம் வக்ஷ்யே ப்ரச்நமார்க்காநுஸாரத꞉ |
ராஹுணா ஸம்யுதே சந்த்ரே ஶஸ்த்ரபங்கோ பவிஷ்யதி ||௧||
நீசாரிஸ்தை꞉ க்ரஹைர் த்ருஷ்டே ஶஸ்த்ரஸ்ய பஞ்ஜநம் |
ஶுபக்ரஹயுதே சந்த்ரே த்ருஷ்டே வா ஶஸ்த்ரமபங்கம் ||௨||

(என் + ள்.) கத்தியினால் சண்டையிடுவதான பிரச்னையில் கத்தியின் திறமும் லக்ஷணமுஞ் சொல்லுகின்றார்.) உதயத்தில் சந்திரன் இராகுவோடு சேர்ந்திருக்கில் கத்தி முறிந்துபோம், சந்திரன் சத்துரு, நீசவிராசியை யடைந்திருக்கிற கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் கத்தி முறிந்து போம். சந்திரன் சுபக்கிரகங்களோடு கூடினாலும் பார்க்கப்பட்டாலும் கத்தி முறியாது. (சத்துரு, நீச விராசியை யடைந்த கிரகங்களாற் பார்க்கப்பட்டால் கத்தி முறியுமென்றது பாபக்கிரகங்களுக்கும் சுபக்கிரகங்களுக்கும் பொதுவிதியாம்)

பாபக்ரஹாஸ்ருக்ஷேஷு க்ஷேத்ரே ஷஷ்டே சத்ரே பாபயுதேஷு வா |
பாபக்ஷேத்ரஸ்திதே ப்ருச்சாம் ஸ்தாநே ஶஸ்த்ரேண மரணம் பவேத் ||௩||
அதவா ப்ருச்சகஸ்யைவ ஶஸ்த்ரநாஶோ பவிஷ்யதி ||

(என் + ள்.) உதயாரூட சத்திரங்கள், பாவிகள் வீடாகி அதில் பாபக்கிரகங்களிருந்து, அவைகளில் ஆரூடங் கேட்பவனிருந்து கேட்டானாகில், அதாவது பாபக்கிரகங்களிருக்கும் வீடே ஆரூடமாக வரில் அவனுக்கு எதிரியினுடைய கத்தியினால் மரணமுண்டாகும், அல்லது ஆரூடங் கேட்பவனுடைய கத்தி முறியும்.

𑌧𑌨𑌕𑌾𑌰𑌕𑍇 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌿 𑌤𑍀𑌯𑍇𑌚𑌵𑌾𑌰𑍇 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌂 ॥௪॥

𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌚𑌸𑍍𑌵𑌨𑍀𑌚𑌾𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌧𑌿𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥௫॥

(என் + ள்.) ௩-ம் இடம் ௧௧-ம் இடம் இவைகளில் பாபக்கிரகங்க ளிருக்கில், கத்தியின் நுனியானது முறியும். உச்ச, நீச, சத்துரு, மித்திர ஸ்வக்ஷேத்திர வர்க்கங்களை யடைந்த எந்தக் கிரகம் உதயாரூட சத்திரங்களைப் பார்க்கின்றதோ, அந்த வர்க்கத்துக் குடையவனுடைய கத்தியாம். அதாவது மித்திராம்சத்தை யடைந்த கிரகம் பார்க்கில் சிநேகிதன் கத்தியென்றும், ஸ்வக்ஷேத்திராம்சத்தை யடைந்த கிரகம் பார்க்கில் தன்னுடைய கத்தியென்றும், உச்சாம்சத்தை யடைந்திருக்கிற கிரகம் பார்க்கில் உயர்ந்தவர்களின் கத்தியென்றும், நீசாம்சத்தையடைந்த கிரகம் பார்க்கில் தாழ்ந்தவர்களின் கத்தியென்றும், சத்துருவினுடைய அம்சத்தை யடைந்த கிரகம் பார்க்கில் விரோதியினுடைய கத்தியென்றுஞ் சொல்க.

𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑍇𑌨𑌾𑌗𑌤𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇 𑌸𑍍𑌵𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌶𑌂𑌸𑌤𑍇 ।
𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌗𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌤𑍁 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥௬॥

𑌅𑌧𑍋𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌤𑍁 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑌤𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌷𑌾𑌨𑌾𑌂 𑌵𑌶𑍇𑌨𑍈𑌵 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௭॥

𑌇𑌤𑌿 𑌜𑍈𑌮𑌿𑌨𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌂

𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌕𑌾𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌮𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 ।

(என் + ள்.) பிரச்நங் கேட்கின்றவன் எதிராகவந்து கேட்டானாகில், அவனுடைய கத்தியென்றும், குறுக்காக வந்து கேட்டானாகில், வேறொருவர் கத்தியென்றும், தலையைக் கவிழ்ந்துகொண்டு கேட்டானாகில், யுத்தத்தில் நழுவி விழுந்த கத்தியென்றும், இவ்விதமாக அந்தப் புருஷனுடைய முகத்தின் நிலையினால் கத்தியின் சங்கதியையும், அந்த ராசியிலிருக்கிற கிரகத்திற்குரிய நீளம்குட்டை சமன் முதலியவைகளைக் கொண்டு கத்தியின் லக்ஷணங்களையும் சொல்லவேண்டியது.

க்ஷுரிகாகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்.

ஶல்யகாண்டப்ராரம்ப:.

ஶல்யப்ரஶ்நே தத்காலஸ்ய பதமாதாய நந்தயம் |
மேஷாத்யுதயபர்யந்தம் ஸம்யோஜ்யாதிக்யஶ்ச பதயேத் ॥௧॥
கலாஸித்தாஹரேச்சேஷம் ஶல்யாநாம் க்ரமஶோவதேத்॥

(என் + ள்.) இம்மனையிற் சல்லியமுண்டோ இல்லையோவென்று பகலில் பிரச்நங் கேட்கில் அக்காலத்திலுள்ள அடியையளந்து அதுடன் உஅ-யும் மேஷராசி முதல் உதயராசி வரையிலுள்ள கணக்கையுஞ் சேர்த்து, கஉ-ல் பெருக்கி கசு-ல் கழிக்க, நின்ற மிச்சத்துக்குக் கிரமமாய் மேலே சொல்லப்போகிற சல்லிய பேதங்களைச் சொல்லவும். (சல்லிய விஷயமாகப் பிரச்நம் பண்ணினால் தற்காலத்திலுள்ள அடியுடன் மேற்கூறிய கணக்குகளைச் சேர்த்துப் பெருக்கிக் கழிக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதால் சல்லியத்தைப்பற்றிப் பகலிலேயே பிரச்நம் பண்ணவேணுமென்றும் இராத்திரியிற் கூடாதென்று மெச்சரித்தார் போலும்.

கபாலாஸ்திகசாலோஷ்ட காஷ்டதேவாவிபூதய: ॥௨॥
ஶவாங்காரகதாந்யாநி தநபாஷாணதர்துரா: |
கோஸ்திஶ்வாஸ்திபிஶாசாதிக்ரமாச்சல்யாநி ஷோடஶ ॥௩॥

(என் + ள்.) (1) மண்டையோடு (2) எலும்பு (3) மயிர் (4) ஓடு (5) கட்டை (6) தேவதை (7) சாம்பல் (8) பிணம் (9) கறி (10) தானியம் (11) தனம் (12) கல் (13) தவளை (14) மாட்டெலும்பு (15) நாயெலும்பு (16) பிசாசு ஆகப் பதினறுவித சல்லியங்களில் முன் (கசு-ல்) கழிக்க நின்ற மிச்சத்துக்கு எத்தனையாவது சல்லிய மேற்படுகிறதோ, அதற்குச் சொல்லிய பதார்த்தங்களைச் சொல்லவும், சேஷமன்றியில் பதினறும் சரியாய் விட்டால் அச்சல்லியம் பதினருவது சல்லியமென்றும் கேட்ட இடத்தில் பிசாசு ஓட்டமென்றும் அறிக. ஆறு மிச்சமாகில் ஆருவது சல்லியம் தேவசல்லிய மாதலால் அவ்விட்த்தில் கருப்பன்முதலிய தெய்வங்களின் ஓட்டமென்றுஞ் சொல்லுக.

ஷஷ்டஶல்யேஷு ஶேஷேண ஸ்வஸ்த்ரஶோஷிஸாயாந்த்ரகா: |
த்ருஷ்டாப்ரஶ்நேஸ்தத்தோநந்த்ய ஸர்வம் ஸந்தேஹம் ப்ரதம் ॥௪॥

(என்+ள்.) மேற்கூறிய (கசு) வித சல்லியங்களில் தவளை, பொன், பசுவினெலும்பு, தானியமென்ற இவைகள் காணில் உத்தமமென்றும், சுப பலனைக் கொடுக்குமென்றும் மற்றவைகள் காணில் கூடாவென்றும் அசுப பலனைக் கொடுக்குமென்றுஞ் சொல்க.

அஷ்டாவிம்ஶதிகோஷ்டேஷு வஹ்நிதாராதிகம் ந்யஸேத் |
யத்ர ஹி திஷ்டதி ஶஶீ தத்ர ஶல்யோபாஹ்ருதம் ||௫||
உதயர்க்ஷாதிகம் ந்யஸ்ய அஷ்டாவிம்ஶதிகோஷ்டகம் |
ஶஶியுக்தநக்ஷத்ரம் தத்ர ஶல்யம் ப்ரகீர்த்திதம் ||௬||

(என்+ள்.) கூபகாண்டத்திற் சொல்லிய பிரஸ்தாரம் சக்கிரம் போட்டு,எக்காலத்திற்கும் மூன்றுவது கோஷ்டத்தில் கார்த்திகையையும் அடுத்த கோஷ்டத்தில் அடுத்த நக்ஷத்திர முதலான நக்ஷத்திரங்களையு மடைத்துப் பார்க்கும்போது தத்காலத்தில் எந்தக் கோஷ்டத்தில்சந்திரனிருக்கின்றானோ,அந்தஇடத்தில் சல்லியமிருக்கிறதென்றும் அல்லது வினவினகாலத்திலுதயமான நக்ஷத்திரத்தைக் கார்த்திகைக் கோஷ்டத்தில் வைத்து அதுமுதலெண்ண, சந்திரன் எந்த நக்ஷத்திர கோஷ்டத்தி லிருக்கின்றானோ, அந்த இடத்தில் சல்லிய மிருக்கிறதென்றும் சொல்லவேண்டியது.

ஶங்காதஶல்யஸ்ய விஸ்தாராயாமௌ ந்யோந்யவர்த்திதம் |
விம்ஶத்யாவஹ்ருதம் ஶிஷ்டம் பவித்ரமிதி கீர்த்திதஃ ||௭||
பவித்ரஸங்குணிதாந்நவஶிஷ்டம் ஸாங்குலமுச்யதே |
தத்வ்ருத்தேஸம்ப்ரகுண்யாக்ஷேஹ்ருத்வா விம்ஶதிஶிஷ்டகே ||
ஶேஷம் ஸமுத்தமோக்தம் பவித்ரார்த்தஸம்ஸமுத்தம் |
ஹஸ்தம் ச ஶோத்ய ப்ரத்யங்க்யம் ஸ்வர்யம் ப்ரவத்தேதவ்யயஃ ||௯||

(என்+ள்.) சல்லியமிருக்கிறதென்று நிச்சயித்த இடத்தின் அகல நீள மிரண்டையும் பவித்திரம் அணிவதான விரலளவாகக் கொண்டுள்ள கோலாலளந்து ஒன்றுக்கொண்டு பெருக்கி(உஎ-ல்) கழிக்க வந்த ஈவுமுழம். கழிபடாமல் பாக்கியாக நின்ற முழத்தை (கூ-ல்) பெருக்கி (உ0-ல்)கழிக்க வந்த ஈவு சாண், அதிலும் கழிபடாமல் பாக்கியாக நின்ற சாணை (கஉ-ல்) பெருக்கி (உ0-ல்) கழிக்க வந்த ஈவு. விரல். இப்படிக்கு முழம் சாண் விரல்களென்றறிந்து சல்லியமுள்ள விடத்தில் இவ்வளவு முழம், இவ்வளவு சாண், இவ்வளவு விரல்களில் சல்லிய மிருக்கிறதென்று சொல்க.

உச்சே தாவத்ஸ்வகேஹஸ்தம் மித்ரே பௌருஷம் ஸ்ம்ருதம் |
ஶத்ருநீசக்ருஹஸ்தே வா தாலத்ரிதயகம் வதேத் ||௧०||

(என் + ள்.) கிரகத்தின் கிரணங்களைக் கொண்டு சொல்லப் போகிற சல்லியத்தின் ஆழநிரூபணத்தில், கிரகம் உச்சவிராசியைப் பெறில்அந்தக்கிரகத்தின் கிரணத்தொகை எவ்வளவோ, அவ்வளவு சாணிலென்றும், ஸ்வக்ஷேத்திரத்தைப்பெறில் அவ்வளவு முழத்திலென்றும், மித்திரவிராசியைப்பெறில் அவ்வளவு ஆள் ஆழத்திலென்றும், சத்துரு நீசவிராசிகளைப்பெறில் வெகு ஆழத்திலென்றும், சல்லியத்தினிருப்பை யூகித்துச்சொல்லவும். (கிரகம் உச்சக்ஷேத்திர, ஸ்வக்ஷேத்திர, மித்திரக்ஷேத்திர, சத்துருக்ஷேத்திர, நீசக்ஷேத்திரங்களி லிருக்கில் இவ்வளவு ஆழமென்று சொல்லியிருப்பதை உதயராசியில் கிரகமிருந்தும் அவ்வுதயராசி அக்கிரகத்திற்கு மேற்கூறிய பிரகாரம் உச்சம்முதலிய ராசிகளு மாகில் முன்சொல்லிய ஆழமென்று வருவித்துக்கொள்க.)

கேந்த்ரே பாபயுக்தே த்ருஷ்டஶல்யம் நஶ்யதி |
ஶுபக்ரஹயுதேஷ்வேஷு ஶல்யப்ராப்திஶ்ச ஜாயதே ||௧௧||

(என் + ள்.) கேந்திரங்கள் பாவிகளுடன் கூடியிருக்கில் காணப்பட்ட சல்லியம் மறைந்துவிடும், கேந்திரங்கள் சுபர்களுடன் கூடியிருக்கில் சல்லியம் அகப்படும்.

பாபத்ருஷ்டியுதே கேந்த்ரே ஶல்யஸ்ஸ்திதிநிர்ணய: |
ரவி: பஶ்யதி சேச்சந்த்ரம் ப்ரஹ்மஸ்தப்ரஹ்மராக்ஷஸ: ||௧௨||

(என் + ள்.) கேந்திரங்கள் பாவிகளால் பார்க்கப்பட்டால் சல்லியமுண்டு. சூரியன் சந்திரனைநோக்கில் அம்மனையில் பிர்மரக்ஷசு இருக்கின்றதாம். (சூரியன் சந்திரனை நோக்கிலென்று பொதுவாகக் கூறியிருப்பதை கேந்திரங்களில் சந்திரனிருந்து சூரியன் நோக்கிலென்று பொருள்படுத்திக்கொள்க.)

கேந்த்ரே சந்த்ராரஸஹிதே பௌமநக்ஷத்ரகோஷ்டகே |
ஸஶல்யம் விந்த்யதே தத்ர கேந்த்ரே ஶுக்ரேந்துஸம்யுதே ||
ஶுக்ரஸ்திதர்க்ஷகோஷ்டே து ஸ்பாடிகம் ஶ்வேதஶிலாதிவா ||

(என் + ள்.) கேந்திரத்தில் செவ்வாய் சந்திரன் இவ்விருவர்களுங்கூடில் செவ்வாய்நின்றுள்ள நக்ஷத்திர அறையில் செவ்வாய்

க்குச்சொன்ன பாஷாணவர்க்கங்களும்லோகவர்க்கங்களும் சல்லிய மென்றும், கேந்திரத்தில் சுக்கிரன் சந்திரன் இவ்விருவர்களுங்கூடில் சுக்கிரன்நின்றுள்ள நக்ஷத்திர அறையில் வெள்ளி அல்லது வெள்ளைக்கல் முதலியன இருக்கின்றனவென்றுஞ் சொல்க.

பஞ்சஷட்வஸப்த ஸப்தாநி ஸப்தைகாதஶமேவ ச ||௧௪||
ஸாஹஸ்ராம்ஶாக்ஷிரவய: ஸௌம்யாதிகிரணாஸ்ம்ருதா: |
ஸூர்யஶ்ச சந்த்ரே கிரணே நாயகஸ்ஸ்மய: ||௧௫||

(என்+ள்.) சூரியனுக்கு (௫) சந்திரனுக்கு (கூ) செவ்வாய்க்கு (௮) புதனுக்கு (௫) குருவுக்கு (கவ)சுக்கிரனுக்கு (உ௰) சனிக்கு (க௨) இவ்விதங்களாகக் கிரகங்களின் கிரணங்களைச் சொல்லவும்.(ஸம்க்ஞாகாண்டத்தில் கிரகங்களுக்குக் கிரணங்களைச் சொல்லியிருந்தாலும் இச்சல்லிய காண்டத்திற்குஇந்தக்கிரணங்களையே வைத்துப்பார்க்க வேண்டியது.)

ஶல்யப்ரஶ்நே ததஶ்சாத்ய பதஸாமஸ்தேந த்ரயம்ஸ |
ஸ்வராஹிஸ்தந்யாம்ஶஞ்ச ஹாணாம்ஶல்யம்வதேத ||௧௬||

இதி ஜைமிநிவிரசித ஜ்ஞாநப்ரதீபிகாயாம்
ஶல்ய காண்டநாமைகவிம்ஶதிகாண்ட:.

(என்+ள்.) சல்லிய விஷயமான ஆரூடமானது பகலில் முதலாவது ஜாமத்தில் கேட்கப்பட்டால் அளந்த அடியுடன் இரண்டு சேர்த்து (க௨-ல்) பெருக்கி (கசூ-ல்) கழிக்கவும். இரண்டாவது ஜாமத்தில் ஆரூடங்கேட்கில் (அ-ல்) பெருக்கி (கசூ-ல்) கழிக்கவும். மூன்றுவது ஜாமத்தில் ஆரூடங்கேட்கில் (கச-ல்) பெருக்கி (கசூ-ல்) கழிக்கவும். நாலாவது ஜாமத்தில் ஆரூடங் கேட்கில் (௫-ல்) பெருக்கி (கசூ-ல்) கழிக்கவும். இப்படிக் கழித்துப் பாக்கி நின்ற தொகைக்குமுற்கூறிய சல்லியங்களையே சொல்க. (அளந்த அடியுடன் (உ) சேர்ப்பது எல்லாஜாமத்திற்கும்பொதுவாம். (இப்பதினுருவது சுலோகமும் அதனுடைய அர்த்தமும் சிலர்பக்ஷம்.)

சல்லியகாண்டம் முற்றிற்று.

ஜ்ஞாநப்ரதீபிகாயாம்

கூபகாண்டப்ராரம்பஃ.

அதவக்ஷ்யே விசேஷேண கூபவார்த்தாவிநிர்ணயம் |
ஆயாமேசாஷ்டரேகாஸ்ஸ்யுஸ்திர்யக்ரேகாஸ்து பஞ்சகாஃ ||௧||
ஏவங்க்ருதே பவேத்ஸர்வகோஷ்டாஷ்டாவிம்சதிகம் ||

(என் + ள்.) (இக் காண்டத்தைக்கொண்டு கிணற்றில் தண்ணீருண்டு, இல்லையென்பதையும், அதின் ஆழத்தையுஞ் சொல்லுகின்றார்.) நீளத்தில் எட்டுரேகையும் குறுக்கில் அஞ்சு ரேகையுங் கீறினால் (உஅ) அறையாகும்.

ப்ராதஸ்து ப்ராங்முகோ பூத்வா கோஷ்டேஷ்வேதேஷ்வதேசாநாத் |
ஹித்வா கோஷ்டத்வயம் த்ருத்வா க்ருத்திகாதித்ரயம் க்ரமாத் || (௨)||

(என் + ள்.) காலையில் கிழக்குமுகமாக இருந்து மேற்கூறிய (உஅ) அறைகளில் ஈசானிமுதல் இரண்டு அறைவிட்டு மூன்றுவது அறையில் கார்த்திகையைவைத்து எண்ணவும்.

க்ருத்திகாதித்ரயம் ந்யஸ்ய தக்ஷிணாக்ரே ஹ்ருதி ந்யஸேத் ||௩||
தத்ருத்ரமேவ ஸார்ப்பாந்தம் ஸ்வக்ஷோத்தரபதேஷு வை |
ததக்ஷிணே ஸ்திதம் ப்ராக்து ந்யஸேத்தஸ்யோர்த்வகே ஸ்திதம் ||௪||
ஸ்வாதீம் விசாகாம் ஸம்ஸ்தாப்ய ததாரப்ய ப்ரதக்ஷிணம் |
ஜ்யேஷ்டாதிக்ஷோணிபாந்தம் கோஷ்டேஷ்வேவ விநிக்ஷிபேத் ||௫||

(என் + ள்.) மேற்கூறியபடி மூன்றுவது கோஷ்டத்தில் கார்த்திகையைவைத்து, அதுமுதல் தெற்கேநோக, ரோகிணி, மிருகசீர்ஷம் வரையிலுள்ள இரண்டு நக்ஷத்திரங்களையும், மிருகசீர்ஷத்துக்கு நேர்கீழறையில் திருவாதிரையையும், அதுமுதல் வடக்கேநோகப் புனர்பூசம், பூசம் ஆயில்யம் வரையிலுள்ள மூன்று நக்ஷத்திரங்களையும், ஆயில்யத்துக்கு நேர்கீழறையில் மகத்தையும், அதுமுதல் தெற்கேநோகப் பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை வரையிலுள்ள நாலு நக்ஷத்திரங்களையும், அதற்கு நேர்மேலறையில் சுவாதியையும், அதற்கு நேர்மேலறையில் விசாகத்தையும், அதற்கு அடுத்த தெற்கு அறைமுதல் பிரதக்ஷிணமாக அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், அபிஜித்து, திருவோ

ணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவதி, பரணி வரையிலுள்ள (௧௪) நக்ஷத்திரங்களையும் கார்த்திகைக்குப் பின்னுள்ள கோஷ்டத்தில் முடியும்படியாக ஸ்தாபிக்க வேண்டியது.

உதயாத்ப்ரஹ்ம தக்ஷிணாஸ்யஸ்ய: பஸ்சிமாஸ்யோ நிசாமுகாத் |
பஞ்சதசோத்தராஸ்யஸ்து ராத்ர்யந்தே பூர்வதர்சநம் ||௬||

(என் + ள்.) பகல் பதினைந்து நாழிகைக்குமேல் தெற்குமுகமாயும், சூரியாஸ்தமனமுதல் இராத்திரி பதினைந்துநாழிகைவரைக்கும் மேற்குமுகமாயும், அதற்குமேல் சூரியோதயம் வரையிலுள்ள பதினைந்து நாழிகைக்கு வடக்கு முகமாயுமிருந்து பார்க்க வேண்டியது. இச்சுலோகத்துக்கு எழுதியவுரையில் பதினைந்து பதினைந்து நாழிகையாக எழுதியிருப்பதை இராத்திரியிலும் பகலிலும் ௩௰ சரியாயுள்ள மாசத்துக்கென்றும், ௩௰ ஜாஸ்தி கம்மியான மாசங்களுக்குப் பகலிலுள்ள ௩௰ப்பாதி செய்து, முதற்பாதிக்குக் கிழக்குமுகமாயும், அதின்மேல் சூரியாஸ்தமனம் வரையில் தெற்குமுகமாயும், சூரியாஸ்தமனமுதல் சூரியோதயம் வரையிலுள்ள இராத்திரி நாழிகையைப் பாதிசெய்து முதற்பாதிக்கு மேற்குமுகமாயும், இரண்டாவதுபாதிக்கு வடக்குமுகமாயும் பார்க்க வேண்டியதெனப் பொருளமைத்துக்கொள்க.

உதயாத்பூர்வமாரப்ய த்ருதீயம் காத்யாநிசாமுகாத் |
அர்த்தராத்ரே நிஷாத்யாம் பஸ்சிமபஸ்சிமே த்ருதீயகம் ||௭||

(என் + ள்.) காலையில் கிழக்குமுகமாயிருந்து பார்க்கும்போது எப்படி ஈசானியம் முதல்இரண்டு அறையைவிட்டு மூன்றுமறையில் கார்த்திகையை வைத்தெண்ணுகிறோமோ, அதுபோல் மூத்தியானத்திற்குமேல் தெற்குமுகமாயிருந்து தென்கிழக்கு முதல் இரண்டுஅறையைவிட்டு மூன்றுமறையில் மகத்தைவைத்தும், சூரியாஸ்தமனத்திற்குமேல் நடுவிராத்திரிவரையில் மேற்குமுகமாயிருந்துதென்மேற்கு முதல்இரண்டு அறையைவிட்டுமூன்றுமறையில் அனுஷத்தை வைத்தும், நடுராத்திரிக்குமேல் உதயம் வரையில் வடக்குமுகமாயிருந்து வடமேற்குமுதல் இரண்டு அறையைவிட்டு மூன்றுமறையில் அவிட்டத்தைவைத்தும் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங்களை யடைத்துப்பார்ப்பதுபோல் அந்தந்த நக்ஷத்திரமாதியாக, இருபத்தெட்டு நக்ஷத்திரங்களையும் அடைக்கவும்.

திநார்த்தம் ஸப்தஸம்ஹ்ருத்வா தச்சேஷம் நாடிகாதிகம் |
ஜ்ஞாதவாந் தத்ஸ்வரூபேண க்ருத்திகாதீந் நிவிந்யஸேத் ||அ||
தந்நக்ஷத்ரம் ததாவாஸம் வ்ருஶ்சிகாதிவிஶேஷத: |
க்ருத்திகாஸ்தா நரோஹ்ய வம்சவஸ்மரணயேத்ஸுதீ: ||௯||

(என் + ள்.) பகல் நாழிகையைப் பாதிசெய்து அப்பாதியை ஏழிற்கியவரும் நாழிகை விஞடிகளுக்கு நக்ஷத்திர சங்கியாகமத் துருவமென்று பெயராம் அதை வைத்துக்கொண்டு சூரியோதய முதல் ஆருடங் கேட்கும்வரையிலுள்ள நாழிகை, விநாடிகளை மேற்கூறிய நக்ஷத்திரசங்கியாசமத் துருவத்தால் வகுத்து ஆருடங்கேட்டநாழிகை இத்தனையாவது பாகமென்றறிந்து அத்தொகைக்குக் கார்த்திகைமுதலாக எண்ணக்கண்ட நக்ஷத்திர மெதுவோ அந்தநக்ஷத்திரம் உதயநக்ஷத்திரமாம் அதற்குச்சித்தநக்ஷத்திரமென்றுபெயர். அந்த நக்ஷத்திரத்தை முற்கூறிய பிரகார மிரண்டு அறையைவிட்டு மூன்றுமறையில்வைத்து அடுத்த நக்ஷத்திரமுதல் விதிப்பிரகாரம் எண்ணவேண்டியது. இந்தப்பிரகாரம் மத்தியானத்திற்குமேல் சூரியாஸ்தமனம் வரையில் மகம்முதலாக வைத்து எண்ணவந்த சித்த நக்ஷத்திரங்களையும், சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு நடுராத்திரிவரையில் அனுஷம் முதலாகவைத்து எண்ணவந்த சித்த நக்ஷத்திரங்களையும், நடுராத்திரிக்குமேல் சூரியோதயம்வரையில் அவிட்டம் முதலாகவைத்து எண்ணவந்த சித்த நக்ஷத்திரங்களையும் வைத்தெண்ணவேண்டியது. (மேற்கூறியவைகளை இக்காண்டத்தி லமைத்திருக்கும் சக்கிரங்களிற்காண்க.)

யத்ரேந்து: ப்ரஶ்நகாலே து ஸ்ரோதோ நாம் ப்ரகம் ஸவேத் ||

(என் + ள்.) கிணற்றின்விஷயமாய்ப் பிரச்நங்கேட்குங் காலத்துக்கு பிற்கூறியசக்கிரத்தில் சந்திரன் எந்த நக்ஷத்திர அறையிலிருக்கின்ருனே அந்தக் கோஷ்டத்துக்குள்ள இடத்தில் அடங்காத தண்ணீருண்டாம்.

ஶுக்ரநக்ஷத்ரகோஷ்டே வா ஜலதம் ஸ்தாத்ரஹாநிஸேத் ||க௦||
ஜீவநக்ஷத்ரகோஷ்டேஷு ஸ்வல்பம் ஸ்வல்பம் ஜலம் ஸ்திரம் ||

(என் + ள்.) சுக்கிரனிருக்கிற நக்ஷத்திர வீட்டிலுந் தண்ணீருண்டாம், குருவிருக்கிற நக்ஷத்திர வீட்டில் நல்ல தண்ணீராகவும் சொற்பமான ஊற்றுள்ளதாகவுமிருக்கும். (ஸ்வர்ணமல்பம்

என்றதற்குக் கொஞ்சம் பொன் காணுமென்று பொருள் கொள்வாருமுளர்.)

[illegible] ||கக||
[illegible] ||

(என்+ள்.) விருஷபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் இவ்வேழுராசிகளும் ஜலராசிகள்; இவைகளுதயமாகில் ஜலமுண்டென் றறியவும்.

[illegible] ||கஉ||
[illegible] ||

(என்+ள்.) மேற்கூறிய ஜலராசி உதயமாகி அவ்விராசியில் சந்திரன் சுக்கிரன் இவர்களிருக்கில் சாலுக்கு வற்றாத தண்ணீருண்டாம். மேற்படி உதயத்தில் புதன் குரு இவர்களிருக்கில் அல்ப நீருண்டாம்.

[illegible] கங||
[illegible] ||

(என்+ள்.) மேற்கூறிய ஜலராசி யுதயமாகி அதில் சூரியன் செவ்வாய், சனி இவர்களிருக்கிற் பார்க்கில் குறிப்பிட்டு ஆரூடங் கேட்கு மிடத்தில் தண்ணீரில்லை, முற்கூறிய விராசியில் இராகு விருக்கிற் பார்க்கில் அதிக நீருண்டாம்.

[illegible] ||கச||
[illegible] ||

(என்+ள்.) உதயாரூடங்களில் ஜலகிரகங்கள் கூடினும் பார்த்தாலும் கீழூற்றும், சத்திரவிராசியில் ஜலகிரகங்கள் கூடினும் பார்த்தாலும மேலூற்றும். உதயத்தில் இராகுவிருக்கிலும் கீழூற்றும். (இராகு உதயத்திலிருக்கில் கீழூற்றுமெனவே, அஃதொழிந்த ஆரூட சத்திரவிராசிகளி லிருக்கில் மேலூற்றென்று வருவித்துரைத்தாம்.)

[illegible] ||கரு||
[illegible] ||

